பல்கலைக்குருசில் பன்மொழிப்புலவர்

மகாவித்வான்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

நினைவு மலர்

(1963)

வெளியிடுவோர் :

எஸ். வாஸன் கம்பெனி,

மயிலாப்பூர், : : சென்னை-4.

பல்கலைக்குருசில் பன்மொழிப் புலவர்

மகாவித்வான்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

நினைவு மலர்

வெளியிடுவோர் :

எஸ். வாஸன் கம்பெனி,

மயிலாப்பூர், : : சென்னை-4.

1963

பார்க்கர் பிரஸ், 11, பந்தர் தெரு, சென்னை-1.

நன்றியுரை

'எஸ். வாஸன் கம்பெனி' என்னும் இம் மகவினுக்கு நற்றாய் பன்மொழிப்புலவர் வித்துவான் வேங்கடராஜுலு ரெட்டியாரவர்களே என்பதனைத் தமிழப்புலவருலகம் நன்கு அறியும். இத்துணைக் காலம் இதனை அன்புடன் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிப் பாதுகாத்து வளர்த்துவருதற்கு அந் நற்றாய்க்கு உற்ற துணையாயிருந்துதவிய செவிலித்-தாயர் கலாசாலைத்தமிழாசிரியர்களும் தலைமையாசிரி-யர்களும் ஆருயிரன்பர்சிலருமே ஆவர். இது தோன்றி ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகள் ஆகின்றன.

இச் சேய் இச் சோபகிருது ஆண்டு ஆவணித்திங்கள் பன்னிரண்டாம் நாளில், கிருஷ்ண பக்ஷம் நவமி திதியில், (28-9-1963) தன் ஆருயிர்த் தாயை இழந்துவிட்டது! வெள்ளிவிழாக்கொண்டாடி மகிழவேண்டிய இக்காலம் துக்கங்கொள்ளுங் கால-மாக மாறிவிட்டது! ஞாலத்தில் உள்ளார் யாவரே காலத்தைக் கடக்கவல்லார்!

"யான் சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து விலகுதற்கு ஆறுமாதங்கட்குமுன், எனக்கு ஆதரி-வாயிருந்த என் தமையனார்மகன், ல. ஸ்ரீநிவாஸ-ராகவன், B. A., காலகதியடைந்துவிட்டான். அதனால் கவலையும் நோயும் மிக்கன. அந் நிலையில் பெயரளவில் நடைபெற்ற புஸ்தகவியாபாரமே எங்கட்கு ஜீவனோபாயம் ஆயிற்று. என்னால் யாதொரு நன்மையும் அடையாத தமிழாசிரியர்

பலரும் தலைமையாசிரியர் சிலரும் மற்றைப் பெருந்தக்கார்சிலரும் தங்கட்கு இயல்பாயுள்ள உபகாரகுணத்தால் என்பால் மிக்க அன்பு பாராட்டி தங்களால் இயன்றவளவு புஸ்தகவியாபாரத்தில் உதவிபுரிந்துவருகின்றனர். இவர்களது பேருதவியினால் எங்கள் வாழ்க்கை ஒருவாறு நடைபெற்றுவருதலேயன்றி, 'தமிழ்ச் சொல்லமைபு' முதலிய நூல்களை வெளியிடுதற்கும் வழி ஏற்பட்டது. இவர்கள்பெயர்களை இங்குக் குறிக்க விரும்பினேனாயினும், 'புல்லென்னும்' என்பதனால், அது செய்திலேன். இவ்வுபகாரிகளை நாளும் பல்கால் நினைத்தலும் இவர்கள் நன்மையைக்குறித்து இறைவனை இறைஞ்சிவேண்டுதலும் அல்லாமல், யான் செயற்பாலது யாதுளது? 'கைம்மாறு வேண்டா கடப்பாடு' ".

இது நம் புலவர்பெருந்தகை தாம் 1-9-1960 அன்று வெளியிட்ட தென்மொழிகள் என்னும் நூலின் முன்னுரையின் ஒரு பகுதி. அவர்கள் உள்ளமுருகி, தம் ஜீவனோபாயமான புஸ்தகவியாபாரத்துக்குப் பேருதவிசெய்த பெருமக்களை மனமார வாயார வாழ்த்தித் தம் செய்நன்றியறிவினை அறிவித்துள்ளார்கள். இதனினும் சிறந்த முறையில் அடியேங்களால் நன்றிகூறல் இயலுமா? அதனால், யாங்களும், "நீடூழி அமைதியுடன் வாழ்க" என்று அப் பெருமக்களை வாழ்த்துகின்றோம்.

இக் கம்பெனி, தோன்றியதுமுதல் இன்றுவரை இருபத்தைந்தாண்டுகளாக, இளைஞர்க்கு நன்முறையில் பயன்படுந் தமிழிலக்கணவிலக்கியப்பாடப்புத்தகங்களும் துணைப்பாடப்புத்தகங்களும் தமிழ்க்கட்டுரைநூல்களுமே வெளியிட்டு, தமிழ்த்தொண்டொன்றனையே செய்துவருகின்றது. இனியும், இது இத்துறையிலும் பிறதுறைகளிலும் பணியாற்றுமாறு

அவ்வுபகாரிகள் தொடர்ந்து உதவிவரல்வேண்டும் என்று பணிவுடன் வேண்டிக்கொள்கின்றேம்.

இனி, ஆசாரியன் திருவடிகளை அடைந்த இப்-புலவர் திலகத்தின் ஞாபகமாக நினைவுமலரொன்று வெளியிடல்வேண்டும் என்னுங் கடமையுணர்ச்சி அடியேங்களைத் தூண்டிற்று. ஆண்டவன் அருளால் அக் கருத்து இப்பொழுது நிறைவேறியுள்ளது. 'புல்லிதழ் பூவிற்கு முண்டு'; ஆதலின், கற்றறிந்த பெரியோர்கள், இம் மலரின்கண் காணுங் குற்றங்-குறைகளைப் பொறுத்தருளி, குணங்களையே கொண்டு ஆசீர்வதிக்கவேண்டும் என்பது அடியேங்கள்-வேண்டுகோள்.

நம் பன்மொழிப்புலவர் பரமபதமடைந்த செய்தி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'தினமணி' என்னுந் தினத்-தாள்களில் விரைவில் வெளிவருமாறு வேண்டிய முயற்சியைச் செய்து, அதனை உலகினுக்குப் பரப்பித் தம் கடமையைத் தக்க காலத்தில் செய்துதவிய திரு. ராஜம் (மர்ரே கம்பெனி), திரு. P. N. அப்பு-ஸாமி ஐயர் என்னும் இருவர்க்கும், அவ்விரண்டு பத்திரிகைகளின் உரிமையாளர்க்கும் முதற்கண் எங்கள் நன்றியறிவினைப் பணிவுடன் தெரிவித்துக்-கொள்கின்றேம். இவ்வுதவி கைம்மாறுகருதாது காலத்திற் செய்த பேருதவியன்றே!

நம் பல்கலைக்குருசிலின் வரலாற்றுச்சுருக்-கத்தை வெளியிட்டு, எங்கள் துக்கத்தில் பங்கு-கொண்டு, ஆறுதல் அளிக்கும் பரிவுரைகள் கூறியுள்ள நித்திலக்குவியல், செந்தமிழ்ச்செல்வி, பத்மஜோதி முதலிய பத்திரிகைகளுக்கும், இரங்கற் கூட்டத்தை நிகழ்த்திய சென்னைப் பல்கலைக் கழகக் கீழ்நாட்டுக் கலையாராய்ச்சிச் சங்கம், சென்னை வள்ளுவர் கழகம்,

சென்னை மாணவர் மன்றம், வாலாஜாபாத் ஹிந்து மத பாடசாலை முதலிய நிலையங்களுக்கும் யாங்கள் யாது கைம்மாறு செய்ய இயலும்!

இம் மலரில் வெளியிடுமாறு, புலவர் பெருமானின் பெரும்பிரிவுகுறித்து இரங்கி உள்ளமுருகிப் பாடிய கையறுநிலைப்பாக்களை அனுப்பியுதவிய புலவரனை-வர்க்கும், இரங்கற்செய்திகள் வாழ்க்கைத்தொடர்பு-கள் முதலியவற்றை எழுதியனுப்பிய பெரியோர் பலருக்கும் எங்கள் வணக்கம் உரியதாகுக.

நம் புலவரின் வரலாற்றை வரைந்துதவியது-மன்றி, இம் மலரை நன்முறையில் வெளியிடுதற்கு வேண்டிய உதவிகளையும் செய்த அன்பர் திரு. சார்ங்கபாணி ஐயங்காருக்கு எங்கள் நன்றி உரியதாகுக.

வணக்கம்.

மயிலை
7-11-1963 } எஸ். வாஸன் கம்பெனி உரிமையாளர்



பன்மொழிப்புலவர்
வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

25–6–1893—28–8–1963

பல்கலைக்குருசில் பன்மொழிப்புலவர்

மகாவித்வான்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

பிறப்பு :

"யான் தேடிக்கொணர்ந்த தமிழ்மாணிக்கம்" என்றும், "எம்பியை ஈங்குப் பெற்றேன் என் எனக்கு அரியது"—என்றும், ஈடுமெடுப்புமற்ற தண்டமிழ்க்-கிழவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் தில்லைத்திருப் பதியில் இருந்தபொழுது, நம் பன்மொழிப்புலவர் வித்துவான் வேங்கடராஜுலு ரெட்டியாரைப் புகழ்ந்து பெருமைபாராட்டிக்கொண்டார் எனின், நம் புலவர்-பெருமானின் சால்பினை விளக்க வேறு சான்றும் வேண்டுமோ?

உயர்திருவாளர் ரெட்டியார், தமிழ்த்தென்றல் தோன்றுஞ் சந்தனப்பொதியிலைத் தன்னகத்தே கொண்ட செந்தமிழ்த்தென்பாண்டிநாட்டில், திரு-நெல்வேலி மாவட்டத்தில், வானமாமலை என்னுந் திருப்பதியை அடுத்துள்ள சமூகரங்கபுரம் என்னுஞ் சிற்றூரில், 1893–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25-ஆம் நாளில், குணசீலராய் வாழ்ந்துவந்த வேங்கடாசல ரெட்டியாருக்கும் அவர்தம் மனைத்தக்க மாண்புடைய மனைவியாராகிய இலக்ஷ்மியம்மாளுக்கும் அருமைப்-புதல்வராகத் தோன்றினர். இவருக்குத் தமையனர்

திருவாளர் இலக்ஷ்மண ரெட்டியார்; தம்பியார் திருவாளர் கிருஷ்ணஸ்வாமி ரெட்டியார்.

நம் புலவர்குடும்பத்தின் இல்லுறைதெய்வம் :

அக் குடும்பமுன்னோர் அண்மையில் உள்ள கள்ளிகுளம் என்னும் ஊரைச் சார்ந்தவர். தந்தை வேங்கடாசல ரெட்டியாருக்குப் போதிய வருவாய் இன்மையால், தாயின் உடன்பிறந்தாராகிய நெல்லூர்க் கிருஷ்ணஸ்வாமி ரெட்டியார் அக்குடும்பத்தைத் தம் ஊருக்கு (சமூகரங்கபுரத்திற்கு) அழைத்துவந்து, அக் குடும்பப்பொறுப்புமுழுதினையும் ஏற்றுக்கொண்டார்; அவர்களுக்காகவே வாழ்ந்தார்! அவர் மருத்துவம், மாந்திரீகம், சோதிடம் என்னும் மூன்று கலைகளிலும் வல்லவர்; வைணவமதத்தினர்; தாய்மொழி தெலுங்காயினும், திவ்வியப்பிரபந்தம் கம்பராமாயணம் முதலிய தமிழ்நூல்களில் நல்ல பயிற்சியுடையவர்.

அவர் அவ்வூரில் ஒரு தொடக்கக்கல்விப்பள்ளியை நிறுவி, தாமே கணக்காயராய் இருந்து அவ்வூர்மக்களுக்குக் கல்விகற்பித்தார். இவ்வாறு பல கலையறிவும் நற்குண நல்லொழுக்கமும் அமையப்பெற்ற அச் சான்றோர் அவ்வூர்க்குடிகளுக்கு உயர்மருத்துவராய், உயிர்நண்பராய், நல்லாசிரியராய், ஞானகுருவாய்ப் பலபல வகைகளில் தொண்டாற்றி ஒப்பற்று விளங்கியதனால், அவர்கள் அவருக்குப் பொன்னும் செந்நெல்லும் பட்டும் துகிலும் பரிந்தளித்து அவரைப் போற்றி வணங்கி ஆதரித்தனர். அவர் அப் பொருள்வருவாயைக்கொண்டு இக் குடும்பத்

தைக் காத்துவந்தார்; இக் குடிக்கு இல்லுறைதெய்வமாய் விளங்கினர்; தம் வாழ்க்கையின் அந்திக்-காலத்தில் ஐந்தாறு ஆண்டுகள் அந்தகராய் வருந்திய காலத்தும், மனவுறுதி தளராமல் தம் கடமை-யைத் தொடர்ந்து செய்துவந்தார்! அத் தியாகி ஆற்றிய அரிய பெரிய உதவிகளை நம் புலவர் ரெட்டியார் எண்ணியெண்ணிக் கண்ணீருகுக்-காத நாளே இல்லை! நம் புலவர்க்குத் தமிழில் ஆர்-வத்தை ஊட்டி அவரைத் தமிழ்ப்புலவராக்கிய பெருமை அக் கருமயோகிக்கு உரியது! ஆதலின், தமிழ்நாடு அச் சான்றோருக்கு—நெல்லூர் V. K. கிருஷ்ணசாமி ரெட்டியாருக்கு—மிகக் கடமைப் பட்டுள்ளது.

இளமையும் கல்வியும்:

இளைஞர் வேங்கடராஜுலு தம் தாய்மாமனு-ரிடத்தில் தொடக்கக்கல்வி பயின்றார்; பசுமரத்தாணி-போல் பதியும் அப் பிள்ளைப்பருவத்தில், அந்தாதி, கலம்பகம், பல அம்மானைப்பாடல்கள், நிகண்டு, திவ்யப்பிரபந்தப்பாசுரங்கள் கம்பன் கவிகள் முத-லியவற்றை மனப்பாடஞ்செய்தார். இவை செவி-வழி வந்த செல்வங்கள்! தொடக்கக்கல்வி முடிந்த-பின்னர், நம் புலவர் திருவரங்கத்துக்குச் சென்று, நிகமம் பெருநிலக்கிழவரின் ஆதரவில் நடைபெற்று-வந்த 'இராமாநுஜ தர்சந வித்தியாசாலை'யில் மாணுக்கராய்ச் சேர்ந்து, சிறிதுகாலம் தமிழிலக்கிய-விலக்கணங்களையும் சமயநூல்களையும் கற்றார்; பின்னர், தாம் பிறந்த ஊருக்குத் திரும்பிவர வேண்டியதாயிற்று.

இளைஞர் தமிழ்ப்படிப்பினை நிறுத்த விரும்ப-வில்லை; அதனால், மணியாட்சி நகரை அடுத்த ஒட்ட நத்தம் என்னும் ஊரில் அப்பொழுது உறைந்து-வந்த ஜகவீரபாண்டிய கவிராயரிடம் சென்று நன்னூ-லைப் பாடங்கேட்டார். கேள்வியறிவு அவ்வளவே! கருவில் தோன்றிய அறிவுத்திருவினையுடைய நம் புலவர் எஞ்சிய இலக்கியவிலக்கண நூல்களை-யெல்லாம் தாமே பயின்றார். 'விட்ட குறை தொட்ட குறை' என்று கூறும் உலகமொழிக்கு இவரே தக்க சான்று! புன்செய்ப்பாத்திக்கு நீரிறைத்துக்-கொண்டே தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா-மாலை, கம்பராமாயணம் முதலியவற்றை நெட்டுருப் பண்ணினார்! இவருக்கு இன்றமிழ்மீதுள்ள இணை-யில்லாத பற்று இருந்தவாறு என்னே! உழைப்பால் உயர்ந்த இவ்வுத்தமர் 1916-இல் மதுரைத் தமிழ்ச்-சங்கப் பண்டித பரீக்ஷையில் தேர்ச்சிபெற்றார்; தம்-மைத் தாமே கல்வியில் உயர்த்திக்கொண்டார்; அக் கல்வித்துறையில் ஒப்புயர்வற்ற தலைமையும் பெற்றார்!

மாலிடம் மாறாத அன்பு பூண்ட இவ்வடியார் 1912-இல் வானமாமலை மடத்தைச் சார்ந்த 25-ஆவது பட்டம் ஸ்ரீ சின்னக்கலியன் ஸ்வாமிகளிடம் 'ஸமாச்ர யணம்' செய்துகொள்ளும் பெரும்பேறுபெற்றார்.

தமிழாசிரியர் :

திரு. ரெட்டியார் தாம் படித்த தொடக்கப்பள்ளி-யிலேயே 1916-வரை ஆசிரியராய்த் தொண்டாற்றி-னார்; அவ்வூரார் இவரை அண்ணாவி என்றே அழைப்

பர். பின்னர், திருநெல்வேலி நகரில் உள்ள ஹிந்து கல்லூரியில் தமிழாசிரியராய் ஆறுண்டுகள் தமிழ்த்தொண்டாற்றி, மாணுக்கரும் பெற்ருேரும் ஆசிரியர்பிறரும் பாராட்டப் பெரும்புகழ்பெற்ருர். T. K. சிதம்பரநாத முதலியார், அக் கலாசாலையில் கற்றுவந்த தம் மகனுக்கு உள்ள தமிழறிவினுக்கும் தமிழார்வத்துக்கும் காரணம் நம் ஆசிரியரின் புலமையும் கலேபயில்தெளிவும் கட்டுரைவன்மையும் கற்பிக்குந் திறனும் அக்கறையுமே என்று இவரைப் மிகப் பாராட்டியுள்ளார்.

ஆசுகவி :

ஆங்கு நிகழ்ந்ததொரு செய்தி, விரைவில் கவிபாடும் ஆற்றல் இவருக்கு அமைந்திருந்தது என்பதனை விளக்கத் தக்க சான்ருகும். அக் கல்லூரியின் நிர்வாகக்குழுவினருள் ஒருவர் நம் புலவர் தமிழாசிரியர்பதவிக்குத் தகுதியுடையவரா என்பதனை ஆராய விரும்பினுர்; அதனுல், இவரை நோக்கி "தாங்கள் செய்யுள் இயற்ற வல்லீரோ?" என்று வினவ, "வல்லேன்" என்று நம் ஆசிரியர் விடைகூற, "அவ்வாருயின், 'காகம் காகம் பிகம் பிகம்' என்று ஈற்றடி அமையுமாறு வெண்பாவொன்று இயற்றுக. சிறிது நேரம் வெளியிற் சென்றுவருகின்றேன்" என்று அவர் இயம்பினுர்; இடையில் அங்கிருந்த சிலரோடு உரையாடிவிட்டு, வெளியே செல்லப் புறப்பட்டார். புறப்பட்ட அப்பொழுதே "வெண்பாப் பாடிவிட்டேன்" என்னும் ஒலி அவர்காதில் விழுந்தது. உடனே அவர் திரும்பிப் பார்த்து,

அப் பாட்டு எழுதிய ஏட்டினைக் கைநீட்டி வாங்கிப் படித்தார். அவ் வெண்பா வருமாறு:

நயனுடையார் நண்புறினும் நன்னிதிபெற் றாலும்
கயவர் கயவரே காண்மின்!—பயன்நனியும்
ஆகும் நிதியம் அழியினுமிக் கோர்மிக்கோர்;
காகம்கா கம்பிகம்பி கம்.

பாட்டைப் படித்த அவ்வறிஞர் பரவசமுற்றார்! அதன் சொல்லழகும் பொருளழகும் அவர்மனத்தைப் பிணித்தன. விரைந்து கவிபாடும் இவராற்றலை வியந்தார்! ஆசுகவியாகிய நம் புலவர்பெருமானை வாயார வாழ்த்தினர். அக் கல்வி, அறிவுபெறல்-வேண்டும் என்னும் ஒரே நோக்கொடு அரும்பாடு-பட்டுக் கற்ற கல்வியேயன்றோ! பொருளுக்காகவும் பரீட்சைக்காகவும் பட்டம்பதவி பெறவும் கற்ற கல்வியன்றே! ஆதலின், அது பயன்முழுதும் அளிக்கும் என்பதில் ஐயமும் உண்டோ?

இவர் அந்நாளில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் வித்வான் பட்டத்தைப் பெற்றதனோடு, தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்னுந் தென்-னாட்டுப் பிறமொழிகளையும் பயின்று, அவற்றிலும் ஆழ்ந்த அறிவினை அடைந்தார்; வடமொழியிலும் பயிற்சிபெற்றார்; ஆதலின், பன்மொழிப்புலவராய்த் திகழ்ந்தார்.

பின்னர், இவர் ஓராண்டு (1923-24) 'சிவகாசி நாடார் உயர்நிலைப் பள்ளி'யில் தலைமைத்தமிழாசிரியராய்த் தலைசிறந்த பணியைச் செய்தார்.

கல்லூரிப்பேராசிரியர் :

1924-ஆம் ஆண்டில் ஆசிரியர் ரெட்டியார் சிதம்பரத்தில் உள்ள 'பண்டிதர் போதனுமுறைக் கல்லூரி'யில் மாணுக்கராய்ச் சேர்ந்து, ஓராண்டு அப் போதனுமுறைப்பயிற்சியைப் பெற்ருர். அக் காலத்தில் அவ்வூரில் மீனுட்சி தமிழ்க்கல்லூரியின் தலைவராயிருந்த மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சுவாமிநாதையரவர்கள் இவர்தம் அஃ.கி-யகன்ற அறிவினையும் நுண்ணறிவினையும் நற்குண-நல்லொழுக்கங்களையும் அறிந்து, இவரைத் தமக்கு உறுதுணையாகக் கொண்டு, அக் கல்லூரித் தமிழ்ப்-பேராசிரியருள் ஒருவராக அமர்த்திக்கொண்டார்.

ஐயரவர்களின் பாராட்டு :

அப்பொழுது இவர் ஐயரவர்களது தமிழாராய்ச்சி-யில் ஈடுபட்டுத் தொண்டுசெய்தார். இவ் வரலாற்றின் தொடக்கத்தில் குறிக்கப்பெற்ற புகழுரைகள் ஐயர-வர்களால் அப்பொழுதுதான் கூறப்பெற்றவை. அப் பொழுதுதான் சங்கரநமச்சிவாயப்புலவர் எழுதிய நன்னூலுரை முதன்முதல் வெளியிடப்பெற்றது. அது நம் ரெட்டியாரவர்களது புலமைத்திறத்தால் சிறந்து விளங்கிற்று. "இந்நூலின் குறிப்புரையை எழுதிவந்த காலத்து உடனிருந்து வேண்டியவற்றை ஆராய்ந்து உதவிய சிதம்பரம் மீனுட்சி தமிழ்க்காலேஜ் தமிழ்ப்-பண்டிதர் சமுகரங்கபுரம் சிரஞ்சீவி வே. வேங்கட ராஜுலு ரெட்டியாரவர்களுடைய அன்புடைமை மறக்கற்பாலதன்று" என்று ஐயரவர்கள் அந்நூலின்

முன்னுரையில் இவ்வுதவியைக் குறிப்பிட்டுள்ள நன்றியுரையால் இவ்வுண்மை புலனாகும்.

இசை பரவுதல்:

பேராசிரியர் ரெட்டியார் மீனாக்ஷி தமிழ்க்கல்லூரியிலும் பண்டிதர் போதனாமுறைப்பயிற்சிக்கல்லூரியிலும் சில ஆண்டுகள் தமிழ்த்தொண்டுபுரிந்து பெருமதிப்பினைப் பெற்றார். ஆங்குத் தமிழ்நாட்டின் பலபகுதிகளிலிருந்து வந்து இவரிடம் பாடங்கேட்டுப் பயிற்சிபெற்ற தமிழ்ப்பண்டிதர்பலரும் இவருடைய நூலறிவையும் நுண்மாண்நுழைபுலத்தையும் உணர்ந்து, வியந்து பாராட்டினர். அவர்கள் இவர்பால் கொண்ட குருபக்தியும் நட்பும் நாள்தோறும் பிறைமதிபோல் வளர்ந்தன. ஆதலின், இவரது இசை திசையனைத்தும் பரவிற்று. இவர் ஆங்கு வாழ்ந்துவந்தபொழுது பெரும்புலவர்பலருடைய தொடர்பும் நட்பும் பெற்றார். போதனாமுறைப்பயிற்சிபெறச் சிதம்பரத்துக்கு வந்திருந்த திருப்பூர் கோபாலய்யரிடம் இவர் ஆங்கிலங்கற்றார்.

பல்கலைக்கழகத்தில் தமிழாராய்ச்சி:

பின்னர், சென்னை நகரில் இருபெருஞ்செல்வரும் தமிழ்ப்பேராசியரும் பெருவள்ளலுமாய்ப் பெரும்புகழோடு வாழ்ந்துவந்த கா. நமச்சிவாய முதலியாரின் நன்முயற்சியின் பயனாக, பல்கலைக்கழகத்துணைவேந்தர் ஸர். ஆர். வேங்கடரத்தினம் அவர்களால், 1927-இல், சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்

'லெக்ஸிகன்' வெளியீட்டுக் குழுவினருள் ஒருவராக இவர் நியமிக்கப்பெற்றுர். பின்னர், அப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 'ஓரியண்டல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்' என்னுங் கீழ்நாட்டுக் கலையாராய்ச்சிக் கழகத்தில் தமிழ் 'லெக்சரர்' என்னும் பதவியை ஏற்றுர்; ஏறத்தாழ இருபதாண்டுகள் ஆங்குத் தமிழாராய்ச்சிசெய்து, இலக்கணம் இலக்கியம் என்னும் இருதுறையிலும் அரிய பெரிய ஆராய்ச்சிநூல்களை வெளியிட்டார். அவற்றுள் தலைசிறந்தவை, 'பரணர்' 'கபிலர்', 'ஸ்ரீபுராணம்', தொல்காப்பியம்—எழுத்ததிகாரவாராய்ச்சி என்பனவாகும். இவற்றைப் பாராட்டாத புலவரே தமிழ்வழங்கும் நிலத்தில் இலர். இவற்றின் அருமைபெருமைகளை அறியாதார் அறியாதாரே!

நன்னூலார் தொல்காப்பியத்துக்கு நேர்மாறுகச் சிலவற்றைக் கூறியுள்ளார்; சங்கரநமச்சிவாயப் புலவரும் சிவஞானமுனிவரும் நச்சினர்க்கினியரும் தொல்காப்பியத்தின் சூத்திரங்கள் சிலவற்றின் பொருளைத் திரித்தும், ஆசிரியர்கருத்துக்கு மாறுகப் பல பொருள்களை வலிந்து புகுத்தியும், அத்தகைய சிலவற்றைச் சேர்த்தும் உரையெழுதியுள்ளனர்.

நம் இலக்கணப்புலவர், அக் குறையை நீக்கி ஆசிரியர் தொல்காப்பியனர்கொள்கைகளை உள்ளபடி அறிவிக்க விரும்பி, தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தைப் பயின்று பலவுரைகளையும் ஆராய்ந்து, பிறமொழியிலக்கணங்கட்கும் இந்நூல்விதிகட்கும் உள்ள ஒற்றுமைகளை ஆராய்ந்து, பல சொற்களின்

தொன்னிலையையும் வரலாற்றையும் கண்டறிந்து, ஆம் ஆண்டில் நூல்முழுதினுக்கும் உரையெழுதி முடித்தார்.

ஆயின், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர் வையாபுரிப் பிள்ளையவர்கள் 'கருத்துவேற்றுமையுள்ள சூத்திரங்கட்குமட்டும் ஆராய்ச்சியுரையாக எழுதிவெளியிடுவதே அமைதி' என்று கூறியதனால், அவர் கூறியவாறு ஆசிரியர் மாற்றியெழுத, அவ்வாராய்ச்சியுரை இன்று காணும் உருவத்தில் 1944-இல் வெளியிடப்பட்டது. அவ்வாராய்ச்சியுரைமுழுதும் அச்சிட்டு வெளியிடப்படாதது தமிழ்நாட்டின் தவக்குறை என்றே கூறுதல் வேண்டும்!

ஈடும் எடுப்புமற்ற இப் புலவர்பெருமானின் ஆராய்ச்சித்திறனைப் பாராட்டி, பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள், 'தொல்காப்பியம்—எழுத்ததிகாரவாராய்ச்சி'யின் முகவுரையில் எழுதியுள்ளது வருமாறு:

"There are parts in **Tolkappiyam** where the meaning is not quite clear. The commentators have differed in their explanations, and we feel that the secrets of some of the 'sutras' have escaped their vigilant investigation. Mr. Reddiyar has made a special study of these 'sutras' in **'Eluttadikaram'** and has given us the benefit of his research in the present volume. **His extensive knowlede of Telugu, Kannada, and Malayalam has enabled him to throw a flood of light on the interpretation of this ancient grammar.**

"One feature of Mr. Reddiyar's commentary needs special mention. **He examines and criticises the views of earlier commentators with an open mind, and fresh outlook. He moves in an atmosphere of complete academic freedom and marshals his facts without fear or favour.** Such freedom is necessary in the world of scholarship and **the originality of Mr. Reddiyar's commentary** is in some measure due to that favourable condition."

விருப்பு வெறுப்பின்றித் தமிழ் நூல்களை ஆராய்ந்து தாம் கண்ட முடிபினை அச்சஞ்சிறிது-மின்றி வெளியிட்டுள்ள தனிப்புலவராகிய அவ்வீரத் தமிழ்ப்பெருமகனாரைப் போல்வாரே நம் புலவரின் ஆராய்ச்சித்திறனைப் பாராட்டுந் தகுதியுடையார் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

பிற ஆராய்ச்சிநூல்களும் ஆராய்ச்சிக்கட்டுரைகளும்:

ஆராய்ச்சியாளருள் ஒப்புயர்வற்ற நம் பெருந்-தகை இவ்வாராய்ச்சிநூல்களேயன்றி, பல வேறு ஆராய்ச்சிக்கட்டுரைகளையும் வரைந்து, புதைந்து கிடந்த மணிகளைப் புறத்தே கொணர்ந்து, இலக்கிய-விலக்கணநுட்பங்களை வெளிப்படுத்தி, பல சிக்கல்-களை விடுவித்து, பழைய உரையாசிரியர்களின் விபரீதமுடிபுகளைத் தக்க காரணங்களைக் காட்டி மறுத்து, ஐயமயக்கங்களை அறுத்து, உண்மைப்-பொருள்களை உணர்த்தியுள்ளார். 'சில இலக்கணக் கட்டுரைகள்' (குற்றியலுகரம், அசை, சீர் இவற்றைப் பற்றியவை); 'திராவிடமொழிகளின் மூவிடப்பெயர்' 'அளபெடை'; 'இன்னான் ஏது ஈங்கு'; 'ஐகார

ஔகாரம்'; 'சிறப்புப்பாயிரத்துள் எல்லே; தமிழ்ச்-சொல்லமைபு'; தேவு என்னுந் தமிழ்ச்சொல்'; 'மெய்-யெழுத்துக்களின் திரிபு'; 'வியங்கோள்'; 'சுவை-யியல்'; 'இறைச்சிப்பொருள்'; 'பத்து அவத்தை'; 'சிறுசோறு'; 'சிந்தாமணியாராய்ச்சி'; 'தென்மொழிகள்' என்பனவே அவையாகும்.

இவையனைத்தும் புலவர்க்குப் பெருவிருந்து; பயிலப்பயிலத் தெவிட்டாதவை; முன்னர் எவரும் காணுத புதிய நுண்கருத்துக்களைப் புலப்படுத்து-பவை; வியப்பும் களிப்பும் விளைவிப்பவை; அறியா-மையிருளை அகற்றி, அறிவொளியைப் பரப்புபவை; அமைதியையும் ஆறுதலையும் அளிப்பவை; மேன்-மேலும் சிந்தனையைத் தூண்டுபவை.

தெளியாத இயல்நிலங்களும் சொல்லுருவங்களும் இவற்ருல் தெளியப்பெற்ருேம்; உறங்கிக் கிடக்கும் உள்ளங்கள் தட்டியெழுப்பப் பெற்ருேம்; மூடிக்கிடக்கும் கண்கள் திறக்கப் பெற்ருேம்; துருப் பிடித்த அறிவு சாணையிலிட்டுத் தீட்டப்பெற்றுக் கூர்மையும் ஒளியும் பெற்று விளங்கப்பெற்ருேம்; பழம்பெருமைகளைப் பேசிப் பழங்கதைகளைப் படித்து மகிழ்வதனேடு, இம்முறையில் எண்ணியெண்ணி ஆராய்ந்து, மேலும்மேலும் புதியனவற்றையுங் கண்டறியும் ஆவல் எழுப்பப்பெற்ருேம்!

நம் புலவர் தாம் ஆரஅமர ஆராய்ந்து கண்ட முடிவுகளை, தம் உயிர்நண்பராய் விளங்கிய உயர்-

புலவர்களுக்கும் நன்மாணுக்கர்க்கும் கூறுவார்; அவர்கள் ஒப்புக்கொண்டபின்னரே உலகினுக்கு அறிவிப்பார்; பரபரப்பும் பதற்றமும் கொள்ளார்.

பிறமொழிப்புலமை :

தமிழ்மொழியில் பெரும்புலமைபெற்ற நம் வித்துவான் தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்னும் மொழிகளிலும் வித்வான் பட்டம் பெற்ருர்; 'கால்டுவெல்' போன்ருேர் தமிழ்மொழிபற்றி ஆங்கிலத்தில் எழுதிய ஆராய்ச்சிகளையெல்லாம் தாமே படிக்கும் ஆற்றலையும் பெற்ருர்; வடமொழி வியாகரண நூல்களையும் ஆழ்ந்து பயின்ருர்; அம்மொழிப்புலவரை அடைந்து தம் ஐயங்களையெல்லாம் அறுத்துத் தெளிவுபெற்ருர்; இவர் இவ்வாறு ஐந்தாறு மொழிகளில் தேர்ந்த அறிவுபெற்றதனுல், ஒன்றனேடொன்றனை ஒப்பிட்டு, உயர்ந்த உண்மைக்கருத்துக்களைப் புலவரெல்லாரும் போற்றும்வண்ணம், தமிழில் வரையும் நற்பேற்றினைப் பெற்ருர்.

ஆராய்ச்சியின் அருமைபெருமைகள் :

நம் பன்மொழிப்புலவர் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலையில் நின்று அனைத்தையும் ஆராய்ந்து, உண்மையை உள்ளவாறு உணர்ந்து, அவ்வாறு உணர்ந்தவற்றை மறைக்காமல் மாற்ருமல் உணர்த்தும் அரிய குணம் வாய்க்கப் பெற்ற பெரியார். இவர் சாதி சமயம் மொழி நாடு முதலிய வேற்றுமையை மறந்து, மெய்ப்பொருள் காண்பதே அறிவுக்கிலக்கணம் என்று உணர்ந்து, அவ்வழியே

ஆராய்வார்; பொருளுக்காகவும் பொய்ப்புகழுக்காகவும் பிறர்பாராட்டுக்காகவும் ஒன்றனை மற்றொன்றாக மாற்றித் திரித்துக் கூறார்; பொருந்தாத இடத்தில் தம் கருத்தினை வற்புறுத்தி மாறுபட்ட பலபொருள்களை வலிந்து புகுத்துஞ் சிறுமைக்குணத்தை அறவே வெறுப்பார்; குற்றத்தைக் குற்றம் என்று கூசாமல், எவர்க்கும் அஞ்சாமல் கூறுவார். கற்றறிந்த ஆழ்ந்தகன்ற நூலறிவாலும் நுண்புலத்தாலும் பன்மொழிப்-புலமையாலும் இவர் ஆராய்ந்து கண்ட—யாராலும் மறுக்க முடியாத—முடிபுகள் பெரும்புலவர்க்கும் பெருவியப்பினையும் மிகுகளிப்பினையும் விளைப்பன-வாகும்.

புலவர்களின் பாராட்டு :

பேராசிரியர் பெருவள்ளல் நமச்சிவாய முதலியார் நம் புலவர் திலகத்தைக் காவல்தெய்வமாகக் கருதி-வந்தார்.

முதுபெரும்புலவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், தாம் இயற்றிய சுய சரிதத்தில் இக்காலத் தொல்காப்பியர் என்று இவருக்குப் பட்டஞ்சூட்டி, இவர்தம் குணச்சிறப்புக்களையும் அறிவினையும் ஆராய்ச்சித்திறனையும் மிகப் பாராட்டிப் புகழ்ந்-துள்ளார்.

"நம் ரெட்டியார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழாராய்ச்சிப்பிரிவில், ஆங்கிலமறியாத தீங்குக்குரிய தண்டனைக்குட்பட்டு, தனித்தமிழ்ப்புலவர்க்குக் கிடைக்கும் ஒதுக்கிடம், அதன் தலைவரது

கடைக்கண்ணேக்கால் கிடைக்கப் பெற்றார்! பெறினும், வேறு எவரும் செய்யாத தமிழாராய்ச்சியின் பயனுக, பல நூல்கள் அக் கழகத்தின் வாயிலாக வெளிவந்தன. ஏனையோர் செய்து வெளியிட்ட ஆராய்ச்சிநூல்களாக யாவரும் கண்டதாக் கேட்ட தாக் கூறக் கேட்டிலேன். தமிழின் இலக்கணக் கட்டுரைகளாக (அப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த சஞ்சிகையில்) பலபல எழுதியுதவிய மாண்பு நம் ரெட்டியார்க்கே உண்டு''—புலவர் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

திராவிடமொழியறிஞர், இலக்கணப்பேராசிரியர்:

"திரு. ரெட்டியாரவர்களின் தனிச்சிறப்பு, தமிழ்நாடறிந்த சிறப்பு, இவர் திராவிடமொழியறிஞர் என்பதே. தென்மொழிகள் நான்கிலும் உள்ள இலக்கியவிலக்கண நூற்களையெல்லாம் ஒன்றுவிடாது நன்கு ஆழமாகக் கற்றவர்; இவற்றோடு வடமொழியறிவும் ஆங்கிலமொழியறிவும் உடையவர். இவர் பெருமைக்கெல்லாம் அடிக்கல்லாக இருந்தது இவரது இலக்கணப்புலமையே யாகும். தமிழின் பழம்பெரும் இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் ஆழ்ந்த புலமையுடையவர். இவ்வறிவில் சென்னைமாநிலத்தில் உள்ள ஒருசிலருள் இவர் ஒருவராவர். உரையாசிரியர்பலர் கூறும் உரைகளைக் கூறி, இங்கிங்கு இன்னின்ன இடர்ப்பாடுண்டு என்று கூறி, தம் புதிய மொழிநூற்கண்ணோட்டத்தோடமைந்த விடைகளைக்கொடுத்து விளக்கங்கொடுக்கும் சிறந்த வித்தகர்; ஓடுநீரோடு ஓடாது எதிர்த்து நீந்தும் ஆற்றல்

படைத்தவர். தம் இலக்கணவாராய்ச்சிநூல்களாலும் கட்டுரைகளாலும் தமிழிலக்கணத்திற்கு ஒருவகை யொளியை அளித்தவர். தென்மொழிகள் என்னும் நூல் முன்னைத் திராவிடத்தின் முழுவியப்பினை அறி-தற்கு ஒரு கைவிளக்காகும். பிரிக்கமுடியாத தமிழ்ச்-சொற்கள் என்று நாம் எண்ணுவனவற்றையும் இவர் பொருள்படப் பிரித்து, மேற்கோளுங்காட்டி, சிலசில விதிகளை வகுத்து, அடிச்சொல் துணைச்சொல்ல மைப்பு இவையிவை என்று சுட்டிக் காட்டிச் செல்வது ஓர் அருங்கலச் செப்பிடுவித்தையோ என்று வியக்குமாறு செய்யும்!''—நாகர்கோயில் ஹிந்து கல்லூரிப் பேராசிரியர் புலவர் சுப்பிரமணியனர்.

பள்ளிப்பாடப் புத்தகவாசிரியர் :

இங்கனம் புலவர்விருந்தாக ஈடற்ற இலக்கிய-விலக்கணவாராய்ச்சிநூல்களை இயற்றியளித்தத-னேடு, தம் ஆழ்ந்தகன்றபேரறிவு பாடசாலை-மாணுக்கர்க்கும் பயன்படும் முறையில், தெளிவும் எளிமையும் அமைந்த உரைநடையில் பத்தாம் வகுப்புவரை பாடப்புத்தகமாக அமையுமாறு, இளை-ஞர் தமிழிலக்கணம் என்னுஞ் சிறு இலக்கண நூல்-களையும் இயற்றியுதவியுள்ளார். அவை நூலாசிரியர் பலருக்கும் சிறந்த வழிகாட்டியாகவும், பிறநூல்-களுக்கு உரையாணியாகவும் விளங்கிவருகின்றன. இவற்றை முதற்கண் வெளியிட்டுதவியவர் திருவல் லிக்கேணி, திருவாளர் T. P. சுப்பிரமணிய ஐயர் என்பவர் (The Modern Publishing House).

பின்னர், 1938-ஆம் ஆண்டில் இவர் 'எஸ். வாஸன் அண்டு கம்பெனி' என்னும் ஒன்றனைத் தம் தமையனாரின் குமாரனை ஸ்ரீநிவாஸராகவனின் பெயரால் நிறுவி, தாமே தம் நூல்களை அச்சிட்டு வெளியிட்டார்; முதல்வகுப்புமுதல் ஒன்பதாம் வகுப்புவரை பயிலும் மாணாக்கர்களுக்கு ஏற்ற இலக்கணமும் கட்டுரை நூல்களுமேயன்றி, தமிழ்வாசக பாடப்புத்தகங்களையும், பல கதைப்புத்தகக்களையும், புலவர்வரலாறுகளையும், பண்டிதரனைவரும் உவந்து பாராட்டும் முறையில், தூய தமிழ்நடையில் எழுதி உதவியுள்ளார். இந் நிறுவனத்திலிருந்து வெளி-வரும் நூல்களனைத்தும், இவர்பணியால் வருவனவா-தலின், எழுத்திலும் கருத்திலும் பிழையின்றி முதல்-தரமுடையனவாகவே இருக்கும் என்னும் நம்பிக்-கையும் நன்மதிப்பும் நாடுமுழுதும் உண்டு. ஓய்வு-பெற்ற வாழ்க்கைப்பிற்பகுதியில் கவலையின்றி வாழவும் பிறர்க்கு உதவவும் கற்பகம்போல் உதவியது இந்நிறுவனமே.

ஆசிரியர்க்காசிரியர் :

நம் பேராசிரியரின் திருமாளிகை ஆசிரியர்க்கும் தமிழ்மாணாக்கர்க்கும் புலவர்க்கும் புகலிடம். வித்து-வான், எம்.ஏ., முதலிய பரீட்சைகளை எழுதுவதற்குச் சென்னைக்கு வந்த மாணாக்கர் தமிழ்ப் பண்டிதர் முதலிய பலர் இவர்மாளிகையில் தங்குவர். இவர் அவர்களுக்கு வேண்டிய எல்லாவகையான வசதி-களையும், பாட்டனாரைப் போன்று, செய்துகொடுப்பார்; பல நூல்களைக் குறிப்பிட்டு 'இது கற்க, அது

கற்க' என்பார்; பல ஐயங்களை உண்டுபண்ணி உரையாடுவார்; அவர்களுக்கு வேண்டிய கருத்துக்களைத் தொகைவகையாகச் சொல்லுவார்; தம் பிணித் துன்பத்தையும் பொருட்படுத்தாமல், இரவில் நெடுநேரம் விழித்திருந்து ஊக்கமூட்டுவார்; வைகறையில் துயிலெழுப்பிப் பயிலச் செய்வார். பரீக்ஷை முடிந்த பின்னர், அவர்களுக்குத் தனிவிருந்தளித்து, தம்தம் ஊருக்குச் செல்ல விடுப்பர். கற்போர்க்கு உதவுவது இவர்இயல்பு.

சென்னைக்கு அண்மையில் உள்ள ஊர்களில் ஆசிரியராய்ப் பணியாற்றிவந்த அறிஞர் பலர், வாரந்தோறும் ஞாயிறு பிற்பகல்—நாட்டுச் சுப்பராய முதலி தெருவில் உள்ள—நம் புலவர் திருமாளிகைக்கு வந்து, இலக்கணப்பாடங் கேட்பர். அவர்களுள் ஒருவர் வித்துவான் சீநிவாஸ முதலியார்; இருவர் கிறிஸ்தவர். அவ்விருவருள் ஒருவர் திருவாளர் இராஜாராவ் என்னும் அறிஞர். அவர் வயதுவந்த வெள்ளையர்க்கும் கிறிஸ்தவ சமயகுரவர்க்கும் தமிழ்மொழியைக் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்; கோடைப்பருவத்தில் கோடைக்கானல் மலையிலும் மற்றைப்பருவங்களில் சென்னையிலும் வசித்துவந்தார். அதனால், அவரைக் கோடைக்கானல் வாத்தியார் என்று வழங்குவர் அவர் தமிழ்ப்பற்றுமிக்கவர்; ஆழ்ந்த ஆங்கில்விலக்கியவறிவும், அம்மொழியிலக்கணவறிவும் நுண்ணறிவும் வாய்க்கப்பெற்றவர்; எவர்க்கும் அஞ்சாத நெஞ்சினை உடையவர்; ஆயின், அடக்கம் மிக்கவர்; நீறு பூத்த நெருப்பு!

வித்தை விநயம் ஆகிய இருசெல்வத்தோடுமுதிர்ந்த அநுபவமும் பெற்ற அவருடன் உரையாடுவது செவிக்குப் பெருவிருந்து. அவர் சிரித்துக்கொண்டே கேட்கும் வினுக்களுக்கு விடையளிப்பது மிக அரிது. பார்த்தால் பசுப்போல் இருப்பர்; பாய்ந்தால் புலி! தமிழிலக்கணவிலக்கியத்தில் அரைகுறையறிவுள்ள எவரும் அவருக்குப் பாடங்கற்பித்து மீளல் இயலாது.

ஆயின், இயற்கலேயேருகிய நம் ஆசிரியருக்கு அத்தகையோருக்குப் பாடங்கற்பிப்பதில் அளவற்ற ஆர்வம் உண்டு. இவர் அவரைக் கண்டவுடன், கன்றினேக் காணும் காரா பாலேச் சுரப்பதுபோல், அறிவினே அள்ளி வழங்குவர்- தரைமீதமர்ந்து அடங்கியொடுங்கிப் பாடங்கேட்கும் அவ்வாசிரியர்-மாணுக்கர் உள்ளமும் என்பும் உருக, "ஆம் ஐயா, ஆம் ஐயா", என்று உரைத்துக்கொண்டே உவகைக்கடலுள் மூழ்குவார்.

"இருட்டி விட்டதே! இரவில் நம் இல்லத்திற்கு ஏகுதல் வேண்டுமே! பாடத்தை நிறுத்தவேண்டி-யிருக்கின்றதே!"-என்று அவ்வாசிரியர்கள் எண்ணி யிரங்குவர். அவர்களுக்கு நிறையச் செவிக்குண வினே அளித்த ஆசிரியர், பின்னர் வயிற்றுக்கு வேண்டிய வகைவகையான விருந்துணவினேயும் அளித்து ஊட்டி, நகைச்சுவை ததும்ப உரையாடிக் கொண்டே, உடனிருந்து உண்பர். இரவு எட்டு மணிக்குமேல் அவர்கள் ஆசிரியரிடம் பிரியாவிடை-பெற்றுச் செல்வர்.

இத் தலைநகர்க்கு வரும்—தவலருந் தொல்கேள்-வித்தன்மையுடைய—தமிழ்ப்புலவரனைவரும் நம் பெரும்புலவரை வந்து கண்டு அளவளாவிச் செல்வர். அதனால் அவர்கள் பெறும் பயன்கள் பல. இவ் வறிஞர் திலகம் இலக்கணத்திலும் இலக்கியத்திலும் தாம் ஆராய்ந்து கண்ட புதிய உண்மைகளையும் புதிய நயங்களையும் சொல்லாராய்ச்சிகளையும் பல மொழிகளில் உள்ள ஒற்றுமைவேற்றுமைகளையும் எடுத்துக்கூறிக்கொண்டேயிருக்க, அவர்கள் தெவிட்டாத அவ்விருந்தினை உண்டுஉண்டு களிப்பர்; கனவிலும் காணமுடியாத அரிய கருத்துக்களைக் கேட்டு அகமகிழ்ந்து வியப்பர்; புத்துயிரும் புதுஊக்கமும் புதுவாழ்வும் பெற்று, தம்மூர் திரும்புவர். புலவர் வள்ளலாகிய நமச்சிவாய முதலியாருக்குப்பின், புலவர்க்கும் தமிழ்கற்போருக்கும் புகலிடமாய் விளங்கியவர் நம் பெரும்புலவரே என்று அனைவரும் கூறுவர்.

பிறதொண்டு

நம் பெரும்புலவர் 'சென்னைத் தமிழ்ச் சங்கம்' என்னும் ஒரு சங்கத்தை நிறுவினர். புலவர் பலர் அதற்கு உறுப்பினராயினர். அவர்கள் திங்கள்-தோறும் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் பச்சையப்பன் கலாசாலையில் ஓர் அறையில் கூடுவர்; சான்றோர்-செய்யுட்களை ஆராய்வார்; உள்ளங் கலந்து உரையாடுவர்; ஒருவருக்கொருவர் வினுதலும் விடுத்தலும், ஐயமெழுப்புதலும் அதனை அறுத்தலுமாக அப்பொழுதினை நன்குபயன்படுத்துவர். நம் புலவர்பெருமானும், புலவர்கள் மு. வரதராஜனர், முத்து-

சு. மாணிக்கவாசகனுர், துரையரங்கனுர், சார்ங்க பாணியார், சீநிவாஸனுர் முதலியோர் அக் கூட்டங் களில் கலந்துகொண்டனர். ஆயின், அச் சங்கம் தொடர்ந்து நடைபெறவில்லை.

திருவாளர் எஸ். ராஜம் அவர்கள் (மர்ரே அண்டு கம்பெனி) செவ்விய முறையில் வெளியிட்ட திவ்யப் பிரபந்தம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய-வற்றின் பதிப்புச்சம்பந்தமாக, நம் பன்மொழிப்-புலவர் பற்பல சமயங்களில் பல ஆலோசனைகளைக் கூறி, ஊக்கமளித்துவந்தார்.

சமயத்தொண்டு :

சமயப்பற்று மிகுந்த நம் புலவர்பெருமான் திரு-நெல்வேலியில் வாழ்ந்திருந்த அக்காலத்தில், திரு. பி. ஸ்ரீ ஆச்சாரியார், சமயத்தொண்டிற்கே உடல் பொருள் ஆவி மூன்றனையும் அர்ப்பணஞ்செய்த பெரியநம்பி திரு. சுந்தரராஜ ஐயங்கார் முதலிய அறிஞர் பலரோடு வைஷ்ணவசங்கமொன்றனை நிறுவி, இராமாநுஜம் என்னும் சமயப்பத்திரிகையொன்று வெளியிடுவதில் வேண்டிய உதவிபுரிந்துவந்தார்; அன்றியும், பல ஊர்களுக்குச் சென்று, சமயப்பிர-சாரஞ்செய்து, அரிய சொற்பொழிவுகளை ஆற்றி, அன்பர்களையும் அடியார்களையும் ஆனந்தக்கடலில் ஆழ்த்தினுர்.

கம்பராமாயணம், பாகவதம், திவ்யப்பிரபந்தம், அதன் உரைகள், அஷ்டப்பிரபந்தம், பிற வைணவ விலக்கியங்கள், சமயநூல்கள் ஆகியவற்றில் பெரும்-புலமை வாய்ந்த நம் மாலடியார், ஏழ்படிகால்

தொடங்கி வந்து மாயோனுக்கு வழிவழி ஆட்செய்யும் வைணவர்குலத்தில் உதித்த வழக்கறிஞரும் முன்னாளமைச்சருமான திருவாளர். K. வேங்கடசாமி நாயுடு அவர்கள் நிறுவிய ஸ்ரீவைஷ்ணவ மஹா சங்கம் ஆண்டுதோறும் சென்னையில் கூட்டும் மகா நாட்டுக்கு எழுந்தருளி, தம் அரிய விரிவுரைகளால் சமயத்தொண்டாற்றிவந்தார்; அன்றியும், 1941-ஆம் ஆண்டு கூடிய அம் மாகாநாட்டுக்குத் தலைமைதாங்கி, அனைவரும் போற்றிப் பாராட்ட அதனைச் சிறப்புற நடத்திப் புகழ்பெற்றார். புதுச்சேரியில் உள்ள கல்விக்கழகச்செயலாளரான அன்பர் தேசிகனார் கூட்டும் ஸ்ரீவைஷ்ணவ மகாநாடுகளிலும் இவர் சொற்பொழிவாற்றியும் தலைமைவகித்தும் பெருந்தொண்டாற்றியுள்ளார்.

சமயச்சமநிலை :

திருமாலின் திருத்தொண்டராகிய நம் புலவர் சமயப்பற்று மிக்கவரேயன்றி, சமயவெறியும் சாதி-வெறியும் கொண்டவரல்லர். இவருடைய நண்பர்களுள்ளும் மாணாக்கருள்ளும் சைவரும் சமணரும் கிறிஸ்தவரும் மகம்மதியரும் பலர் உளர்.

சமணசமயத்தைச் சார்ந்த ஸ்ரீபுராணம் என்னும் அரியநூல் மணிப்பிரவாள நடையில் இயற்றப் பெற்றது. இவர் வடமொழியிலும் தென்மொழியிலும் நல்ல புலமை பெற்றிருந்தமையால், ஓலைச்சுவடியில் வரைந்துவைத்திருந்த அவ்வுயர்ந்த புராணத்தை நன்கு படித்து ஆராய்ந்து, பல்கலைக்கழக-

வெளியீடாக அழகுற அச்சிட்டு வெளியிட்டு உதவி-ஞர். மொழியையும் அறிவினையும் வளர்க்குந் திருப்-பணியில் சமயவேற்றுமைவெறுப்புக்களுக்கு இட-மில்லை என்பதனை இவ்வரிய செயலால் இவர் விளக்கிவிட்டார். இவரது பெருந்தன்மைக்கும் பரந்த மனப்பான்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இஃதொன்றே அமையுமன்றோ !

அன்றியும், நம் அரும்பெரும்புலவர் ஜீவபந்து ஸ்ரீபால் என்னுஞ் சமணப்புலவரின் வேண்டு-கோட்கிணங்கி, சமணசமயப் பெருங்காப்பியமாகிய சீவகசிந்தாமணியைக்குறித்து, சென்னை நகரில் உள்ள ஜினாலய மண்டபத்தில் பல விரிவுரைகள் ஆற்றினர். ஓராண்டு வாரந்தோறும் ஞாயிறன்று தொடர்ந்து அச்சொற்பொழிவு நடைபெற்றது. ஆங்குச் சமணப்பெரியோர்களும் பிற சமயப்-புலவர்களும் எழுந்தருளியிருந்து, அக் காவி-யத்தின் சொல்நயம் பொருளாழம் யாப்பமைதி அணிநலம் இவற்றையும், செய்யுட்களில் அமைந்-துள்ள குறிப்புப்பொருள் உள்ளுறை தொனி முதலிய-வற்றையும், காமம் வீரம் அவலம் நகை முதலிய சுவைகளையும், திருத்தக்கதேவரது கற்பனையாற்ற லையும், கதைச்சிறப்பினையும் நம் புலவர் ஆராய்ந்து கூறக் கேட்டு, அகமகிழ்ந்தனர்; இவர்தம் அறிவாற்-றல்களைப் பாராட்டிப் புகழ்ந்து பெருஞ்சிறப்புச் செய்தனர்.

அன்பர் ஜீவபந்து தம் பெருமுயற்சியால் திங்கள் தோறும் வெளியிட்டுவந்த நல்லறம்என்னும் நற்சஞ்-

சிகையில் நம் முதுபுலவர் சிந்தாமணியாராய்ச்சிக்-கட்டுரைகள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். வெளியிடவேண்டிய—நுண்பொருள் பலவற்றைக் கொண்ட - அக்காப்பியவாராய்ச்சிக்கட்டுரைகள் இன்னும் பல இவர்பால் உள.

1944-ஆம் ஆண்டில், செய்நன்றிமறவாதவராகிய சித்தாமூர்மடத்துச் சமணப்பெருமக்கள், ஸ்ரீபுராண-வெளியீட்டினைக்குறித்துப் பாராட்டுவிழாக் கொண்டாடினர்; அப்பொழுது நம் புலவர்சிகாமணிக்குப் பொன்னுடை போர்த்திப் பெருஞ்சிறப்புச்செய்தனர்; வெள்ளிப்பேழையொன்றில் அப் புராணப்படியொன்றனை வைத்து இவர்க்குச் சமர்ப்பித்தனர். தஞ்சாவூரிலும் இவர் அவ்வாறே சிறப்பிக்கப்பட்டார். ஆங்குள்ள சமணவடியார்கள் ஸ்ரீபுராணத்தையும் நம் ஆசிரியரையும் யானைமீது எழுந்தருள்வித்து, நகரத்தின் நான்கு வீதிகளிலும் வலம்வரச்செய்து மகிழ்ந்தனர். சித்தாமூரில் ஆசிரியர் தாம் யானைமீது இவர்ந்து வர மறுத்துவிட்டார்; தஞ்சையிலோ எத்துணை மறுத்தும், அனைவரும் விடாமல் வணங்கி வேண்டிக்கொண்டதனால், அன்பினுக்குக் கட்டுப்பட்டு வேறுவழியின்றி வேண்டாவெறுப்பாக அதற்கு இசைந்தார்.

ஒருமுறை திருக்குடந்தையில் கூட்டிய வீர-சைவர்மகாநாட்டில் விரிவுரையாற்றல் வேண்டும் என்று புலவர் குமார வீரையா, வீரவைஷ்ணவராகிய நம் புலவரை வேண்டிக்கொண்டார். மாலடியன்றி

மறந்தும் புறந்தொழாப் பெரியாராகிய இவரும் நட்பென்னும் நாரால் கட்டுண்டு, அவ்வாறு செய்ய இணங்கினர். இச் செய்தியைச் செவியுற்ற அனைவரும் வியந்தனர். சைவர்பலர் தம் சமயக்கொள்கையைக் கண்டித்துப் பேசுவாரோ, மகாநாட்டுக்கூட்டம் குழப்பத்தில் முடியுமோ என்று பயந்தனர். அம் மகாநாட்டில் பாடறிந்தொழுகும் பண்புடைய நம் புலவர் இருசமயங்களிலும் உள்ள ஒற்றுமைக்கொள்கைகளையெல்லாம் மிக நயமாகவும் நாகரிகமாகவும் எடுத்துக்கூறியபொழுது, அச்சமும் கவலையும் நீங்கப்பெற்ற அவ்வீரசைவர் வியப்புற்றனர்! களிப்புக்கடலில் மூழ்கினர்; நம் அண்ணலின் நாகரிகத்தையும் நாவன்மையையும் பண்பினையும் பலசமயவறிவினையும் வாயாரப் புகழ்ந்து பாராட்டினர். அம் மடாதிபதி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

துக்கமும் துன்பமும்

பெரியோர்பெரும்பிரிவு: நம் புலவர் இளமையில் வறுமையால் வருந்தினர்! வறுமை புலவர்க்குப் பிறப்புரிமை போலும்! ‘திருவேறு தெள்ளியராதலும் வேறு’ என்பது பழம்புலவரின் அனுபவ வாக்கன்றே. அம்மம்ம! ‘கொடிது கொடிது இளமையில் வறுமை! ஆயின், ‘உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா.’ வறிஞர் என்றும் வறிஞராயிருப்-

பரோ? ஆகூழும் தாளாண்மையும் செல்வப்பொருளை செய்யும். ஆயின், இழந்த உயிரை மீண்டும் பெறல் இயலுமோ?

இவர் தம் இளமைப்பருவத்திலேயே தாயாரை இழந்தார்! தாய்ப்பசுவினை இழந்த கன்றுபோல் கதறித் தவித்த இவரை விட்டுத் தமையனாரும் மறைந்தார்! உடன்பிறப்பு என்னும் பாசத்தால் கட்டுண்ட நம் புலவர் செயலற்றுத் திகைத்தார்; மறைந்தவர்மனைவியும் பக்களும், கொள்கொம் பிழந்த கொடிபோல, ஆதரவற்றுத் துன்புறுவாரே என்று எண்ணி, அக் குடும்பத்தைக் காக்கும் பொறுப்பினை மேற்கொண்டார்; தாம் மணஞ்செய்து கொள்ள மறுத்தார்; ஆயுள்முழுதும் மாணியாய் வாழ்ந்தார். அக் குடும்பத்திற்கும், உற்றார்பிறருக்கும் அன்பர்க்கும் தம் வாழ்க்கையை அர்ப்பணஞ்செய்தார்! தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்னுஞ் சொற்றொடர் இவர்க்கே பொருந்துமன்றோ!

பின்னர், தந்தையார், அம்மாமனார் ஆகியோர் ஒருவர்பின் ஒருவராக மறைந்தனர். துக்கத்துக்கு மேல் துக்கம்! ஆற்ற வொண்ணாத துக்கம்! 'பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடுமன்றோ! ஆயினும், குடும்பப்பொறுப்பும் கடமையுணர்ச்சியும் அவர்க்குத் தளராத மனவுறுதியையும் உடல்மலியையும் அளித்தன.

பெண்மகள் பெரும்பிரிவு :

பின்னர், தாம் அன்புடன் வளர்த்து, கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல், பாதுகாத்த தமை-

யன்மக்களிருவரையும் நன்முறையில் படிக்கவைத்தார்; அவர்களுள் லக்ஷ்மி என்னும் மகளைத் திருநெல்வேலி வழக்கறிஞர் இராமகிருஷ்ண ரெட்டியார் (M.A., M.L.) அவர்களுக்கு மணஞ்செய்வித்தார். நம் புலவர்க்கு அப் பெண்மகள்பால் பேரன்பு உண்டு. தீவினைப்பயனால் அம் மகளும் 1929-இல் அம்மைநோய்வாய்ப்பட்டு மறைந்தாள்! அந்தோ! வளர்ப்புத்தந்தையாராகிய நம் புலவர், வெயிலில் வீழ்ந்த புழுவினைப்போல், அத் துக்கத்தால் துடித்தார்.

அம் மகளின் பெரும்பிரிவினை ஆற்றுமல் நம் புலவர்பெருமான் இரங்கற்பாப் பாடியுள்ளார்; எண்பத்தாறு பாக்களைக் கொண்ட அதனை ஒரு சிறுநூலாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அதனை ஒருவாறு நம் புலவரின் சுயசரிதை என்றேகொள்ளலாம். அது ஒரு சோககாவியம்! அதனுள் உள்ள ஒவ்வொரு கவியும் அணியும் கற்பனையும்செறிந்தது; அவலச்சுவைக்குத் தக்க எடுத்துக்காட்டு.

உள்ளத்தை உருக்கும் செய்யுட்பகுதிகளுள் சில வருமாறு:

"எம்மையற நீத்துத் தனிப்போக என்பிழைத்தோம்?
அம்மா! எம் அம்மா! அளியேம் அளியேமே!!"

"தன்னே ரிலாத தவமே! தயாநிதியே!
அன்னே அகன்றனைஎம் அன்னே அகன்றனையே!"

"மகப்பிரிவிற் றுன்பம் வலிதியாவ தென்னும்
தகப்பெரியோர் செஞ்சொல் சரதமென இன்றறிந்தேன்."

"நீபோய பின்பன்றே சுவையுணவும்
உடல்வளமும் நீங்கிப் போய."

ஒன்றன்பின் ஒன்ருய் அடுக்கிவந்த துன்பத்-தைக் கூறுஞ் செய்யுள் வருமாறு :

" தாய்வெறுக்கின் ஏனையரும் தனிவெறுப்பர்
என்பதுவும் சரதம் போலும் ;
ஆய்வெறுக்க அன்புடைய அண்ணனுமே
எமைவெறுத்தார் ; அத்தர் அந்தச்
சேயைநினைந் தெமைவெறுத்தார் ; வளர்த்தெடுத்த
அம்மாமன் சினந்தார்; அம்மா !
நீவெறுத்தாய் ; அதனுனே மகநீத்த
தெமனுமெனை நீக்கி ஞனே !"

" ஆவிதியே இன்னனமோ அடுக்கிவரல் துன்பமெலாம்
அந்தோ ! அந்தோ !!"

மகனும் பிரிந்தான் :

பின்னர் இவர் ஸ்ரீநிவாஸராகவன் என்னும் அம் மகனுக்கு மணஞ்செய்வித்தார். அவர் பல்கலைக்-கழகப்பட்டம் (பி. ஏ.) பெற்றவர்; அரசியலலுவல் பார்த்துவந்தார். அவர் மனைவி செல்லம்மாள் ஆண்மகவொன்றனையும் பெண்மகவொன்றனையும் ஈன்றெடுத்தாள். பாட்டனுர் பெயரன்பெயர்த்தியின் முகங்களில் பழந்துக்கங்களையெல்லாம் மறந்து, இனிது வாழ்ந்துவந்தார்.

ஆயின், அந்தோ, அறனில் கூற்றுவன், 1947 டிஸெம்பர் இறுதியில் இவருடைய அண்ணன்-மகனையும் இவரிடமிருந்து பிரித்துவிட்டான்! மணியை இழந்த நாகம்போல், இவர் மனங்கலங்கி-ஞர்; அக் கைம்பெண்ணையும் தந்தையை இழந்த மக்களையும் கண்டுகண்டு இரங்கினுர்; மக்களிருவ-ரையும் இழந்த அண்ணன்மனைவியின் சோகத்தை

எண்ணியெண்ணி உள்ளந்துடித்தார். பெற்ற வயிறுதான் கொதித்திடாதோ! பொல்லாத புத்திரசோகம் பொறுத்தற்கரிது! என் செய்வது! ஊழின் பெருவலியாவுள?

குடும்பச்சுமை :

தமையனாரின் குடும்பத்தைப் பாதுகாத்த இக்கடமைவீரர் தலையில் அவர் மகனின் குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் வந்து விழுந்துவிட்டது! ஆயினும், இவர் கருமவீரராதலின், தருமத்தினின்று சிறிதும் தவறவில்லை; தாளாண்மையில் எள்ளளவும் தளரவில்லை; அக் குழந்தைகளிருவரையும், அவர்கள்-தந்தையையும் அத்தையையும் காத்து வளர்த்ததுபோல், கண்ணுங்கருத்துமாய்ப் பாதுகாத்துவந்தார்; பெயரன் கிருஷ்ணமூர்த்தியை(இராதாவை)ப் படிக்கவைத்து, பி.இ.(B.E.)பட்டம் பெறச்செய்தார்; பெயர்த்தி வஸந்தாவையும் படிக்கவைத்து எம். ஏ. பட்டம் பெறச் செய்தார்; அப் பெண்ணுக்கு அண்மையில் சிறப்பாகத் திருமணஞ்செய்வித்து மகிழ்ந்தார்; 'எஞ்சினீர்' பதவியில் இருந்து பெரும்பொருளீட்டும் பெயரனையும் கண்டு களித்தார். இவர்-கடமையெல்லாம் முடிந்தது என்று காலன் இவருயிரைக் கவர்ந்தான்போலும்!

பிணித்துன்பம்

பிறரெவராலும் பொறுத்தற்கரிய பல கடுந்துக்கங்களுக்கு ஆளான நம் புலவர் உருவினை உள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணிகளால் பட்ட

துன்பங்கட்கு ஓர் அளவில்லை. மக்களுடல் தீப்பிணி-யிருக்கையே யன்றோ! ஏறத்தாழ முப்பத்தைந்-தாண்டுகள் இவர் 'மூலம், சுவாசகாசம்' என்னும் இரண்டு கொடிய நோய்களால் பட்ட துன்பம் சொல்-லுந்தரத்ததன்று.

முதுபெரும்புலவர் கா. ர. கோவிந்தராஜ முதலி-யார் இவரைக் காணும்போதெல்லாம், "சுவாமி, நோய்க்கு மருந்துண்கின்றீர்களா? பணம் இல்லை என்று ஏங்கலாகாது. வேண்டும் பொருளை யான் தருகின்றேன். சத்திரசிகிச்சை செய்துகொள்ளுங்-கள்" என்று அன்போடு அடிக்கடி கூறுவார்.

முதல்நோய்க்காக இரண்டுமுறை சத்திர-சிகிச்சை செய்யப்பெற்றார். சென்னை இராயப்-பேட்டை 'ரங்கா நர்ஸிங் ஹோம்' டாக்டர் சங்கரன-வர்களும், சென்னைப் பூந்தமல்லிசாலையில் உள்ள 'நர்ஸிங் ஹோம்' டாக்டர் சுந்தரவதனனவர்களும் இப் பேருதவியைச் செய்தனர். இரண்டு நோய்க்கும் எத்துணையோ மருத்துவஞ்செய்துகொண்டும், தீவினைப்பயனால் அவை தீராப்பிணிகளாகவே இருந்துவிட்டன! மருந்தே உணவாக இருந்த மாதங்கள் பல! நம் கருமவீரர், அப் பிணிகளோடு போராடிக்கொண்டே, தம் குடும்பக்கடமைகளை விடாமல் செய்துவந்தார்; செந்தமிழ்த்தொண்டிலும் சமயத்தொண்டிலும் ஈடுபட்டார்!

வேதியனுக்குப் பைத்தியம்பிடித்தால், அவன் அப்பொழுதும் வேதத்தையே ஓதிக்கொண்டிருப் பான் என்பர்! அதுபோல, காய்ச்சலடிப்பினும்

காசம் வாட்டி வருத்தினும், அப்பொழுதும் இவர் உள்ளத்தில் இலக்கணவாராய்ச்சியே செய்துகொண்டிருப்பார்! கனவிலும் நினைவிலும் இடைவிடாது கண்டாராய்வதெல்லாம் மொழியாராய்ச்சியே ஆகும்! 'நேற்றுக்காய்ச்சலில் தோன்றிய புதுக்கருத்து இது' என்பார்!

இவர் நோயால் பட்ட துன்பத்தைத் தாமே குறித்துள்ளது பின் வருமாறு :

'எத்தனை நோய் எனை அடைந்த! நினக்கிரங்கி
அவை போக்கி இருக்கின்றேன்'.
'யானுடைய கடுநோயை அறிந்திரங்கி வந்தனையே!'
'நெடிது காலம், பஞ்சுபடும் பாடெல்லாம் பட்டினைத்தேன்'.

விருந்தோம்பிய வேளாளர் :

கடும்பிணியால் மெலிந்த நம் புலவர்க்குச் சென்னையின் கோடைக்கொடுமையைப் பொறுத்தல் இயலவில்லை. அதனால், இவர் சில ஆண்டுகள் குளிர்ச்சி மிக்க கோடைமலைக்குச் சென்று, வேனிற்பருவத்தை ஆங்கு இனிது கழித்துவந்தார். ஆயின், அம் மலைக்குச் செல்ல இயலாத சில ஆண்டுகளில், அகம் நக நட்ட மெய்யன்பர்சிலர் தாம் வசிக்கும் சிற்றூருக்கு வந்து ஆங்குச் சில திங்கள் தங்கியருளல் வேண்டும் என்று இவரைப் பணிவுடன் வணங்கி வேண்டிக்கொண்டனர். அவ்வன்பர்கள் புலவர் ஜகந்நாத ரெட்டியார், புலவர் வி. பூதூர் வேங்கடசாமி ரெட்டியார், கவிஞர் இராமராஜு முதலியோராவர். அவர்களின் அன்பினுக்குக் கட்டுப்பட்ட நம் புலவர்பெருமான் அவர்கள் வேண்டுகோளை மறுக்கஇயலாமல், அவ்வூர்களுக்குச் சென்று சிலசில

மாதங்கள் ஆங்குத் தங்கியிருந்தார்; அப்பொழுது அவ்வன்பர்கள் தமக்குச் செய்த உதவியை எப்பொழுதும் கூறிக்கூறி மகிழ்வார்: "நம் நண்பர்கள் உள்ளன்புடன் எனக்குச் செய்த நன்றியை என்றும் மறவேன். ஆயின், அவர்கள்தேவிமார், மெய்வருத்தம்பாராமல், இன்முகங்காட்டி, இன்சொற்கூறி, இரவும் பகலும் எனக்குப்பிடித்த பலவகையுணவும் சமைத்து உண்பித்து, பாலும் பழமும் அளித்து, காலந்தவறுமல் மருந்தும் தந்து, சேயைத் காக்குந் தாய்போல, எனக்கு வேண்டிய உதவியைச் செய்ததற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகின்றேன்!" என்று உள்ளம்உருகி உரைப்பார்!

ஆராய்ச்சிக்கட்டுரைத்தொகுதியை அச்சிட ஆதரவளித்த ஆருயிரன்பர்:

புலவர் ரெட்டியார் தாம் வரைந்த இலக்கணஇலக்கியவாராய்ச்சிக்கட்டுரைகளை அவ்வப்பொழுது சென்னைப்பல்கலைக்கழகப்பத்திரிகை, செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், ஞானசம்பந்தம், நல்லறம், விழாமலர்கள் முதலியவற்றில் வெளியிட்டுவந்துள்ளார். இவ்வாறு தனித்தனியே சிதறிக்கிடக்கும் பேரறிஞர்கட்டுரைகளையெல்லாம் ஒருசேரத் திரட்டித் தொகுத்துப் புத்தகமாக வெளிடுதல் தமிழரின் இன்றியமையாத பணி. அது தமிழ்த்தாய்க்குச் செய்யுந் திருத்தொண்டேயாகும்; தமிழர் தமக்குத் தாமே செய்துகொள்ளும் உதவி. அறிஞர்பெருமக்கள் அரும்பாடுபட்டு அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகளை எழுதித் தம் கடமையைச் செய்துள்ளனர். அவற்-

றைப் போற்றிப்பாதுகாத்தல் நம்மனோர்கடமை-யன்றோ!

நம் அறிஞர்பெருமானின் இலக்கணக்கட்டுரை-கள்சிலவற்றைப் புத்தகமாக வெளியிடுதற்குப் பொருளுதவியைச் செய்து ஆதரவளிக்கும் நற்பேறு பெற்ற நற்றமிழன்பர் யாவர்? புதுச்சேரியில் இரு-பெருஞ்செல்வமும் வாய்க்கப்பெற்றவராய் வாழ்ந்து-வரும் புலவர்வள்ளல் திருவாளர் இராஜமாணிக்கம்-பிள்ளையவர்களே, பிறர் தம்மிடம் அழுக்காறு கொள்ளுமாறு, அவ்வரும்பணியைச் செய்து, அழி-யாப் புகழைப் பெற்றோராவார். நுண்பொருள்விளக்-கம் என் ப தே அக்கட்டுரைத்தொகுதியாகிய நூலாகும்.

"உயர்திரு. பி. என். ராஜமாணிக்கம் பிள்ளையவர்-கள் தமிழிலக்கியத்தில்மட்டுமன்றி, இலக்கணத்தி-லும் ஆழ்ந்த புலமைவாய்ந்தவர்கள்; அன்றியும், சைவ வைஷ்ணவ வேதாந்தநூல்களிலும் சிறந்த புலமைபெற்றவர்கள். அவர்கள் என் நூல்களையும் கட்டுரைகளையும் வாசித்து, தங்கள் கருத்தினைத் தெரிவித்து எனக்கு ஊக்கமளிப்பார்கள். அவர்கள் என் கட்டுரைகளை அவசியம் புத்தகமாக வெளியிடு-தல் வேண்டும் என்றும், முதலில் சொல்லிலக்கணம்-பற்றிய கட்டுரைகளை அச்சிடலாமென்றும், அதற்கு ஆகுஞ் செலவிற்குத் தாங்கள் பொருளுதவக்கூடும் என்றும் 1962 ஏப்ரல் 9-இல் எனக்கு எழுதினர்கள்.

"இலக்கணவாராய்ச்சிநூலை யாருமே விரும்பார்; வாசிக்கார். அந் நூலை அச்சிடுதல் பயனில்-

செயல் என்று பலமுறை தெரிவித்தும், அதனை ஏற்றுக்கொள்ளாமல், அச்சிடுதற்கு வேண்டும் பொருளை முந்துற அனுப்பினர்கள். அவர்களது அன்பின் பணியை மறுக்கவியலாமல் அதனை மேற்கொண்டேன்.

"இந் நூலை வெளியிடுமாறு என்னை வற்புறுத்தி, வலிந்து பொருளுதவிசெய்த புதுவை உயர்திரு. ராஜமாணிக்கம் பிள்ளையவர்களின் அன்பினையும் ஆதரவினையும் எழுமையும் மறவேன். அவர்கட்கு எல்லா நன்மைகளும் மேன்மேலும் பெருகத் திருவருள்புரியுமாறு யான் இறைவனை வேண்டிக்கொள்ளுதலன்றி வேறு செய்யலாவது யாதுளது!"—

என்று நம் முதுபெரும்புலவர், நுண்பொருள்விளக்கம் என்னும் அந் நூலின் முன்னுரையில் எழுதியுள்ளார். இதனல் பிள்ளையவர்களின் புலமையும் வள்ளன்மையும், அவர்களுக்கு இலக்கணத்தில் உள்ள ஈடுபாடும் பெருவிருப்பும், இந்நூலை அச்சிடுதலில் உள்ள பேரார்வமும், நம் ரெட்டியாரிடம் உள்ள ஆழ்ந்த பக்தியும் பெருமதிப்பும் ஒப்பற்ற தமிழ்ப்பற்றும், இன்னோரன்ன பிறவும் நன்கு புலப்படும். அழியுஞ் செல்வத்தால் அழியாப் புகழ்பெற்ற இவ்வள்ளல் பெற்ற பேற்றை இவ்வுலகில் வேறு எவர் பெற்றார்?

ஈண்டு இன்னென்றனையும் குறித்தல் வேண்டும். இம் முன்னுரையில் காணும் ஒரு செய்தியைக் குறித்து அறிஞர் ஆழ்ந்தெண்ணுதல் வேண்டும்.

'இலக்கணவாராய்ச்சிநூலை யாருமே விரும்பார்; வாசிக்கார்; அந்நூலை அச்சிடுதல் பயனில்செயல்'— அந்தோ! அருமைத்தமிழ்த்தாயே, உன் மக்களைப்பற்றி—தன் உடன்பிறந்தார்களைப்பற்றி — உன் தலைமகன் இவ்வாறு கூறவேண்டுமாயின், அப்புலவனுள்ளம் எவ்வளவு புண்பட்டிருக்கும் என்பதனை எண்ணிப்பார்! 'எங்கள் தாய்மொழி ஈடும் எடுப்புமற்ற உயர்தனிச்செம்மொழி' என்று கூறிப் பெருமைபாராட்டும் உன் மக்களின் தாய்மொழிப்பற்று எங்கே? இக் குறை இருப்பது ஈனமன்றோ! அவமானமன்றோ!

இக் கறையைத் துடைப்பதற்கு ஒருவழி உண்டு. அஃது யாதெனின், நம் ஒண்டமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியும் கல்லூரியும் நூல்நிலையமும் இந் நூலின் ஒரு பிரதியை வாங்கி, கூரிய அறிவுள்ள சிலரையேனும் படிக்குமாறு செய்தலாகும். இது செய்தால் போதும். இவ்வாறு செய்வதனால் இன்னொரு பயனும் உண்டு. "இதன் பிரதிகளை விற்று வரும் தொகையை எனக்குத் தரல்வேண்டா. அப் பொருள்தொகையைக்கொண்டு, நம் புலவரின் பிற ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் இன்னொரு தொகுதியாக அச்சிட்டு வெளியிடுக"—என்று நம் புதுவைத்தமிழ்வள்ளல் புகன்றுள்ளார். [தன்னலங் கருதாமல் தமிழ்நலத்தையே கருதும் இவ் வள்ளலின் உயர்ந்த உள்ளத்தை உலகம் பாராட்டுக!] அதனால், இப் பணியைத் தொடர்ந்துசெய்ய உங்கள் நற்செயல் உதவும்.

குணச்சிறப்புக்கள்

நம் புலவர்சிரோமணி ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்; உள்ளும் புறமும் ஒத்த உத்தமர்; நூலறிவும் நுண்ணறிவும் உலகியலறிவும் வாய்க்கப்பெற்ற பேரறிஞர்; நடுநிலைநின்று நூல்களை ஆராயும் நல்லோர்; நல்லோர்குணம் பாராட்டுதல், செய்நன்றிமறவாமை என்னும் நற்பண்புகளை-யுடைய மேலோர்.

இவர் அடக்கமும் எளிமையும் உடையவர்; ஆயின், தாம் ஆராய்ந்து கண்ட உண்மைகளைத் தக்க சான்றுகளொடு கூறி நிலைநிறுத்துதலிலும், பிறருடைய பிழைபட்ட கொள்கைகளையும் கருத்துக் களையும் ஆராய்ச்சிமுடிபுகளையும் மறுத்துக் கண்டித்தலிலும், ஆண்மையும் வீரமும் மிக்கவர்.

பொருத்தமான புதுக்கருத்துக்களைக் கூறுவோர் யாராயினும் அவரைப் புகழ்ந்து கொண்டாடுவார்; அவர்க்கு மேலும்மேலும் ஊக்கமளிப்பார்; பிற-ருடைய அறிவும் ஆக்கமும் கண்டு களிப்பார். புலவ-ரழுக்காறு இவரிடம் அணுவளவும் இல்லை.

பன்மொழிப்பயிற்சியினுலும், பெரியோர்தொடர்-பினுலும், சாதிசமயமொழிகளில் வேறுபட்ட பலரொடு வேற்றுமையின்றி நெருங்கிப் பழகியதனுலும் மிகப் பரந்த உள்ளத்தை உடையவராதலின், இவர் குறுகிய மனப்பான்மைக்கு இம்மியும் இடங்கொடார்; தம் தாய்மொழி தெலுங்காயினும், அதனினும் அதிகமான பற்றினைத் தமிழ்மொழியிடங் கொண்டு,

தமிழ்மொழியையே தம் தாய்மொழியாகக் கொண்டு, அம் மொழிவளர்ச்சிக்கென்றே ஆயுள் முழுதும் இலக்கியவிலக்கண நூல்களை ஆராய்ந்து, இணையற்ற நூல்களை இயற்றியுள்ளார்; இதுவரை எவரும் காணாத உண்மைகளைக் கண்டறிந்து வெளியிட்டுள்ளார்; தம் சமயம் சாதி மொழி இவற்றின்மீது உள்ள பற்றின் காரணமாகப் பிற சமயத்தினரையும் சாதியாரையும் மொழிகளையும் வெறுப்பாரையும், தம் மொழிக்கு இல்லாத பெருமையினை ஏற்றிக் கூறுவாரையும், அவ் வெறியின் பயனாக மற்றையோரை இழித்துப் பழிப்பாரையும் காணின், அவர்களின் அறியாமையைக்குறித்து இரங்குவரேயன்றி, அவர்களை வெறுத்து வெகுண்டு விலக்கார்.

வடமொழி கன்னடம் முதலிய மொழிகளின் இலக்கியவிலக்கணப்பகுதிகளோடு ஒப்பிட்டு, அவற்றை மேற்கோளாகக் காட்டி, தமிழ்மொழியில் உள்ள சொற்கள் இலக்கணப்பகுதிகள் இவற்றை ஆராய்ந்து உண்மைகளை எடுத்துணர்த்தியதன் காரணமாக, இவரைத் தவறாக உணர்ந்தாரும் சிலர் உளர்! இவ்வுலகியல் இருக்குமாறு என்னே!

நம் புலவர்பெருமான் எப்பொழுதும் ஏடுங்கையுமாக இருப்பார்; இலக்கணவிலக்கியங்களைப் பயின்றுபயின்று, அவற்றில் உள்ள நயங்களை உணர்ந்து இன்புறுவார்; தம்மிடம் வரும் அன்பர்களுக்கும் அவற்றைக் கூறி மகிழ்விப்பார். தமிழ்மொழியிலக்கணத்தில் ஏதாயினும் ஒன்று விளங்கவில்லையெனின், தாமே பிறமொழிநூல்களைப் படித்து ஒப்பிட்டுப் பார்ப்பார்; பிறமொழிப்புலவர்கள்

இருக்கும் இடத்துக்குச் சென்று, அதனெடு தொடர்பு-கொண்ட அவ்வம்மொழிக்கருத்துக்களை உசாவியும் அறிந்துகொள்வார். இவர்க்கு அவ்வாறு உதவி-செய்தோர், மயிலை வழக்கறிஞரும் வடமொழிப்-புலவருமாக இருந்த சங்கரராம சாஸ்திரிகள், மலை-யாளத்திலும் வடமொழியிலும் பெரும்புலமை வாய்க்கப் பெற்றிருந்த பல்கலைக்கழக மலையாள விரிவுரையாளர் கிருஷ்ணன் நாயர், கன்னடம் வட-மொழி முதலியவற்றில் பெரும்புலமை பெற்றுள்ள பல்கலைக்கழகக் கன்னட விரிவுரையாளர் உயர்திரு. H. சேஷய்யங்கார் முதலியோர் ஆவர்.

அடக்கம் :

நம் புலவர் அடக்கத்தின் உருவம் என்பதற்குச் சான்ருகப் பின் வருவனவற்றைக் காண்க :

"புலவர் வள்ளல் கா. நமச்சிவாய முதலியாரவர்-களுக்கு நம் ரெட்டியாரவர்களிடம் பெருமதிப்புண்டு. நம் ரெட்டியாரவர்கள் நாடோறும் மாலையில் நமச்சி-வாயர் மாளிகையாகிய 'கடலக'த்துக்குச் செல்வார். மேன்மாடியில் உயர்ந்த இருக்கைகளில் பலர் அமர்ந்திருக்க, நடுவில் சாய்வுநாற்காலியில் முதலி-யாரவர்கள் இருப்பார்கள். அப்பொழுது ரெட்டியா-ரவர்கள் கீழே உட்கார்வார்களேயன்றி, உயர்-இருக்கையில் இருக்கவேமாட்டார்கள்! முதலியார் பன்முறை வேண்டியும் கடிந்து கூறியும் இவர் கேளாமையால், தாம் சொல்வதை விட்டுவிட்டார். ரெட்டியாருடன் செல்லும் யாங்களும் கீழேயே இருப்பது வழக்கம்.

"யாங்கள் இவர் திருவடிகளில் வணங்கினல், இவரும் எதிர்விழுந்து வணங்குவார்!

"இவர்க்குச் சிறப்புவிழாவொன்று கொண்டாடல் வேண்டும் என்று அன்பர் கூறியபொழுது, இவர் அதனை அடியோடு மறுத்துவிட்டார்!

"சிற்றூர் ஜைனத்திருமடத்தில் ஸ்ரீபுராண-வெளியீட்டின்போது இவர்க்குப் பொன்னுடை போர்த்தினர்; பின்னர், இவரை யானைமீதேற்றி வலம்வரச்செய்ய விரும்பினர். ஆயின், நம் புலவரோ அவ்வாறு செய்ய மறுத்து, ஸ்ரீபுராணத்தை ஏற்றுவித்து, தாம் நடந்தே சென்றார்!"—

புலவர் ஐயா நாய்க்கர்.

எளிமை:

நம் புலவர் காட்சிக்கு எளியர்; ஆரவாரமும் ஆடம்பரமுமற்ற எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர்; வீட்டில் இருக்கும்பொழுது இவருக்கு அரைக்கு நான்கு முழவேட்டி போதும். வீட்டை விட்டு வெளியில் செல்லும்பொழுது, மெல்லிய வெள்ளைச்சட்டையொன்றனையும் அதன்மேல் மூன்றுமுழத்துண்டு ஒன்றனையும் அணிவார். இவரை முதன்முதல் இவ்வுடையில் காணும் அயலார் 'இவரா அப் பெரும்புலவர்!' என்று வியப்பர். விலையுயர்ந்த உடைகளை விரும்பார்; வீண்செலவுகளை வெறுப்பார்; செல்வப்பொருளின் அருமையை அறிந்தவராதலின், தம்மளவில் சிக்கனமாகவே செலவுசெய்வார்; ஆயின், உலோபியல்லர்;

இன்றியமையாதவற்றிற்கு மனமுவந்து நிரம்பச் செலவிடுவார்.

ஆண்மையும் வீரமும் :

கல்வி, அஞ்சாமை, பழியொடுவருவனசெய்யாமை, கொடை என்னும் நான்கும்பற்றிப் பெருமிதம் (வீரம்) பிறக்குமாதலின், இந்நான்கனையும் உடைய இப் புலவர் பெருவீரர் என்றற்குத் தட்டில்லை.

(1) நம் கல்விவீரர் ஒருமுறை திருவையாற்றில் உள்ள அரசர்கல்லூரித்தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுவிழாக்கூட்டமொன்றில் அரிய சொற்பொழிவொன்றனை ஆற்றினர். அக் கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய பெரும்புலவரொருவர் தம் இறுதியுரையில், திரு. ரெட்டியார் கூறிய சில கருத்துக்கள் தவறுபட்டவை என்று கூறினர். பின்னர், தன்னம்பிக்கையும் தன்மானமும் மிக்க நம் வீரர் எழுந்திருந்து, "தலைவர்க்கு ஒரு விண்ணப்பம். நாளை நாம் இங்குத் தங்குவோம்; புலவர்சபையொன்று கூட்டுவோம்; நம் கருத்துக்களைத் தனித்தனியே எடுத்துக் கூறுவோம். அச் சபை ஆராய்ந்து தீர்ப்பளிக்கட்டும்" என்றார். அச் சங்கவிழாக்கூட்டத்தில் அமர்ந்திருந்த கல்லூரிப்பேராசிரியர்களும், புலவர்களும், மாணாக்கரும் அவ் வீரவுரையைச் செவியுற்று வியப்புற்றனர்! பின்னர் நிகழ்ந்தது யாது? அத் தலைவர் அன்றிரவே தம் ஊருக்குச் சென்றுவிட்டார்!

(2) நம் இணையற்ற இயற்புலவர், சிவஞான முனிவர் கூறிய சில பொருந்தாக் கூற்றுக்களையும்

தொல்காப்பியனுர்கொள்கைகளுக்கு மாறுபட்டு வலிந்து புகுத்திய பொருள்களையும் ஆராய்ந்து, அவை அமைவுடையன அல்ல என்று தக்க காரணங்காட்டி மறுத்தபொழுது, சைவப்புலவர் சிலர் "எங்கள் மாதவச்சிவஞான முனிவர் கூறியுள்ளவற்றிலுமா இவர் குற்றங்காண்கின்ருர்!" என்று கூறி வெகுண்டு நம் புலவரை வெறுத்தனர்!

இவற்றைக் கண்டு நம் புலவர் சிறிதும் அஞ்சவில்லை. தொல்காப்பியனுர்கொள்கைகளை உள்ளபடி அறிய விரும்புவோர் இவ்வாறு கூருர். தமிழும் தமிழாராய்ச்சியும் எல்லாச்சமயத்தார்க்கும் எல்லாநாட்டினர்க்கும் பொது. இவற்றில் சமயப்பூசலுக்கோ பொருமைக்கோ வெறுப்பினுக்கோ இடமில்லை. இது தமிழுக்குச் செய்யும் உண்மைத்தொண்டு. டாக்டர் சாமிநாதையரவர்கள் புலவர் ரெட்டியார் கண்ட ஆராய்ச்சிமுடிவுகளே நேரானவை என்று கூறிப் பாராட்டியுள்ளார் என்பது ஈங்கு அறியத்தக்கது.

விருப்புவெறுப்பின்றி உண்மையை நாட விழைந்து உழைத்த நம் ஆராய்ச்சியறிஞர், குற்றஞ்செய்வார் யாவராயினும் அக் குற்றம் குற்றமே என்று கூசாமல் அஞ்சாமல் கூறுவார்; தொல்காப்பியத்திற்கு நேர்மாருகச் சிலவற்றைக் கூறிய நன்னூலாரையும், சூத்திரத்தில் உள்ள சொற்களைச் சிதைத்துப் பிரித்துக் கூட்டியும் மாறுபட்டவற்றை வலிந்து புகுத்தியும் பொருள்கூறிய நச்சினர்க்கினியரையும், ஏன், முதலுரையாசிரியராகிய இளம்பூரணரையும்,

இவர் பல இடங்களில் மறுத்து நேர்பொருளை அறிவிக்கவில்லையா! அவர்களின் பிழைபட்ட உரைப்பகுதிகளை மறுத்தாரேயன்றி, அவர்களை ஒருபொழுதும் வெறுக்கவில்லையே! இவருக்கு அவ்வுரையாசிரியர்களனைவரிடமும் அளவு கடந்த பெருமதிப்பும் அன்பும் செய்ந்நன்றியறிவும் என்றும் உண்டு. சிவஞான முனிவரின் நேர்மையான கருத்துக்களைப் பாராட்டி, தமக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டியுள்ள இடமும் உள. இவ் வரும்பெருந்தொண்டினைச் செய்து நம் மயக்கத்தை நீக்கி உண்மைப்பொருளை உரைத்த இப் புலவர்சிகாமணியைப் போற்றிப் புகழாமல், தூற்றிப் பழித்தல் முறையாகுமோ? அன்றி, அறமாகுமோ?

முக்குணவசத்தால் முறைபிறழ்ந்து உரைப்பது மண்ணுலகமக்களின் இயல்பன்றே! ஆதலின், திரிபுணர்வினை விலக்கி மெய்ப்பொருளைக் கூறும் அறிஞரை விரும்பி ஆதரித்து, அறிவினுக்கு விருந்தாகிய அத்தகைய ஆராய்ச்சிகள் மேலும் பல்கி வெளிவருமாறு செய்வது தமிழ்ப்புலவரின் தலையாய கடமையன்றே!

(3) 'தொல்காப்பியம் — சொல்லதிகாரத்தில் மொழிக்குச் சொல்ல வேண்டுவனவல்லாதனவும் சொல்லப்பட்டுள்ளன. அவை பொருள்கோள் வகை முதலியன ஆகும். பொருளதிகாரத்தில் கூறப்பட்டவற்றுள் பெரும்பாலும் காவியவிலக்கணமே'.

(4) 'தமிழில் உள்ள பழைய இலக்கியங்கள்தாமும் தொல்காப்பியவிதிக்கு அமைதியுடையனவாயில்லை.

பொருளதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இலக்கணத்துக்கு மாருன பிரயோகங்கள் சங்கச்செய்யுட்களிலேயே மிகப்பல உள (பரணர் பக்.162-172). அவற்றுள்ளும் உவமவுருபுகளைப்பற்றிக் கூறியுள்ள முறை சங்கவிலக்கியங்களில் காணப்படவேயில்லை.

'பண்டைப்புலவர்களுட் சிறந்தவரும் செய்யுட் செய்தலில் வல்லவருமான கபிலருடையபாட்டுக்களிலும் சில இலக்கணமாறுபாடுகள் காண்கின்றன....... 'அறியுநர் இன்று' (நற்.309), 'ஓரிக்கொன்ற' (நற். 320,) 'இஃதொத்தன்' (குறிஞ்சிக்கலி 62): இவற்றை வழு என்பதே நேர்'—(கபிலர்-பக்.102—105).

இவ்வாறு பழம்பெரும்புலவரின் கூற்றுக்களிலும் வழுவினைக் கண்டு, சிறிதும் அஞ்சாமல் 'இவை வழுவே' என்று எடுத்துரைப்பதற்கு, எத்துணை ஆழ்ந்த நூலறிவும் நுண்ணறிவும் வீரமும் ஆண்மையும் வேண்டும் என்று அறிஞரனைவரும் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

நம் புலவர் எளியோர்க்கும் இரவலர்க்கும் சுற்றத்தார்க்கும் நண்பர்க்கும் புலவர்க்கும் தக்கோர்க்கும் பொருளளிப்பார்; குறியெதிர்ப்பையாகவும் கொடுத்துதவுவார்; ஏழைமாணுக்கர்க்குப் பள்ளிச்சம்பளமும் பாடப்புத்தகங்களும் கொடுப்பார். இவர் பரிசில்பெறும் புலவரல்லர்! பரிசில்அளிக்கும் புலவர்! புரவலர்!

பொய்யாமை :

புலவர் ரெட்டியார் வாய்மை என்றும் அறத்தினின்று அணுவளவும் வழுவார்; தாம் படிக்கும் நூல்-

களில் தம்மால் உணர இயலாதபகுதிகள் இருப்பின், 'இவற்றில் எனக்குத் தெளிவு பிறக்கவில்லை'' என்று உண்மையை ஒளியாது உரைப்பார்; கனவிலும் பொய்யுரையார்.

"இச் சூத்திரத்தின் கருத்துச் செவ்விதின் துணியப்படுமாறில்லை. ஆகலின், இஃது இன்னும் ஆராயவேண்டுவது.'' (எழுத்ததிகாரவாராய்ச்சி-பக்·40).

"இனி, மகரவீருக மயங்குதல் வரைந்த ஒன்பது பெயர்கள் கடுவன் அலவன் வலியன் என்பனபோன்றவை ஆகலாம் எனத் தோன்று-கின்றது. அவை அஃறிணையுள்ளும் ஆண்பாற்-பெயர்களாமாகலின், னகரவீற்றவாய் வழங்கல் அமையும் என்று விடப்பட்டன போலும். இவ்வுண்-மை நன்கறியப்படுமாறில்லை'' — (எழுத்-பக்.75). "அக்கிளை மொழியும் உளஎன மொழிப—என்றத-னுன், அவையும் சிறுவரவினவாதல் அறியப்படும். அவை இன்னவை எனத் தெரியவில்லை'' (எழுத்-பக். 170).

மேலே எடுத்துக்காட்டியவை இப் புலவரின் வாய்மைச்சிறப்பினை மெய்ப்பிக்கப் போதிய சான்று-களாகும். இவ்வரும்பண்பு பெரும்புலவர்கண்ணே அமையும்.

மானம் :

நம் புலவர்பெருந்தகை தம் உயர்நிலையினின்று ஒருபொழுதும் தாழார்; தாழ்வுதருஞ் செயல்களைச்

செய்யவுங் கருதார்; தமக்கு ஒரு பொருள் வேண்டும் என்று ஒருவரையும் இரவார். 'ஆள் பிடிப்பதனுல்' பதவி, பட்டம், பொருட்செல்வம், பொய்ப்புகழ்முதலியவற்றை அடையும் அருங்கலையறிவு இப்பல்கலைக்குருசிலுக்கு இம்மியும் இல்லை!

இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராய்ப் பல ஆண்டுகள் பணியாற்றியதன் பயனுக, பழந்தமிழிலக்கியவிலக்கணங்களை நன்கு ஆராய்ந்து கூர்ந்து பயின்று, புதிய முறையில் ஆராய்ந்து வெளியிட்ட கட்டுரைகளும் நூல்களும் இணையற்றவை; இதுவரை வேறுயாராலும் செய்யப்படாதவை—என்பதனைத் தமிழுலகம் அறியும். இவர் இசை திசையெல்லாம் பரவியுள்ளது. பல்கலைக்கழகத்தை நடத்துவோரும் இவருடைய அருமைபெருமைகளை நன்கு அறிவர். இவர் தமக்கு ஐம்பத்தைந்து வயது முடிந்தவுடன் தாம் வேலையிலிருந்து விலகி ஓய்வுபெற அனுமதியளித்தல் வேண்டும் என்று எழுதித் தெரிவித்துக்கொண்டபொழுது, அவ்வதிகாரிகள் உடனே அவ்வாறு செய்ய அனுமதியளித்துவிட்டனர்!

ஒப்பற்ற இப் புலவரை இன்னும் ஐந்தாறு ஆண்டுகளாயினும் அப் பதவியில் இருக்கச்செய்து ஆதரவளித்திருப்பின், தமிழில் இன்னும் எத்துணை ஈடற்ற ஆராய்ச்சிகள் வெளிவந்திருக்கும்! தமிழ்த்தாய் செய்துள்ள தவம் இத்துணையே போலும்!

'யான் இப்பதவியில் இன்னுஞ் சில ஆண்டுகள் இருந்து பணியாற்றும்படி பணித்தருளல் வேண்டும்'

என்று இவரா இரந்து கேட்பார்? மானவருங்கலநீக்கி இரவென்னும் ஈனவிளிவினுல் வாழ்தற்கு விரும்பு-வர் இவரா! அவ்வாறு செய்யுமாறு அன்பர்பலர் வேண்டிக்கொண்டனர். ஆயின், "நீங்கள் என்-பால் வைத்துள்ள மிக்க அன்பால் இவ்வாறு கூறு-கின்றீர்கள். அவ்வாறு எழுதி இரந்து கேட்பது அவமானமன்ருே! சரி, உங்களுக்காக எழுதுகின்-றேன். பலன் விளையின், நன்று; அன்றெனின், அடியேனுக்கு மானங்கெட்டவன் என்னும் அழி-யாத பழி வாராதோ! தரும் எண்ணம் இருப்பின், அவர்களாகத் தரலாமே!" என்று கூறி நம் மான-வீரர் மறுத்துவிட்டார்!

நம் அண்ணல், தாமே சொல்லெண்ணி நன்கு ஆராய்ந்து அச்சிட்டு வெளியிட்ட பாடப்புத்தக மொன்றனை அரசாங்கப் பாடப்புத்தகக்குழுவினுக்கு அனுப்பினுர். அக் குழுவினர் அப் புத்தகத்தில் சில இடங்களைச் சுட்டிக்காட்டி, "இவையிவை குற்ற முள்ளவை. இவற்றை இவ்வாறு திருத்தி, மீண்டும் அனுப்புக" என்று ஆணையிட்டனர். அவர்கள் குறித்த இடங்கள் குற்றமுள்ளவையல்ல. ஆதலின், இவர் "நீங்கள் பிழையுள்ளவை என்பவை பிழை-யற்றவையே. உங்கள் திருத்தங்களே பிழைபட்-டவை. ஆதலின், இப் புத்தகத்தை இருக்கும் நிலையி-லேயே அங்கீகரித்தல் வேண்டும்" என்று பல காரணங்காட்டி அழுத்தந்திருத்தமாக எழுதி-விட்டார். ஆயின், அவர்கள் 'தாம் பிடித்த முயலுக்குக் கால் மூன்றே!' என்று கூறி, முதலை-யைப் போல, தாம் கொண்டதனை விடவில்லை!

இவரும் அதனை மாற்றி அனுப்பவில்லை. அதனால் அப் புத்தகமும் அங்கீகரிக்கப்படவில்லை. அதனால் இவருக்குப் பொருட்கேடு விளைவதாயிற்று! ஆயின், பெரியோர் தம் பெருந்தகைமை பீடழிய வருஞ் செயலைச் செய்வரோ! 'மானத்தினும் பெரியவை உயிர்வாழ்க்கையும் ஒண்பொருளும்' என்று கருதுங் கீழ்மக்களிடம் உறுதியான கொள்கையைக் காண்டல் இயலுமோ!

"வித்துவான் வேங்கடராஜுலு ரெட்டியார் எழுதிய எழுத்துக்களத்துணையும் அவர் ஆராய்ச்சியின் ஆழத்தைக் காட்டுவன. ஆங்கிலம் முதலிய மேனாட்டுமொழிகளில் வளர்ந்துள்ள வரையறைக்குட்பட்ட திட்பநுட்பமும் விஞ்ஞானப்பாங்கும், இந்தியமொழிகளில் எழுதும்பொழுது, எளிதில் அமைவதில்லை என்று பலர் கூறுவதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், திரு. ரெட்டியாரவர்களுடைய தமிழிலே வியத்தகுமுறையில் தருக்கநுட்பமும் விஞ்ஞானவரையறையும் ஒவ்வொரு சொற்றொடரிலும் அமைந்திருப்பதைக் காணலாம். அவர்க்கே சிறப்பாய் அமைந்த திறம் இது" — என்று பல்கலைக்குருசிலும் பன்மொழிப்புலவருமான பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் பாராட்டியுள்ளார். ஆயின், அந்தோ! இப் புலவரின் எழுத்திலும் குற்றங் குறைகாணும் பெரும்புலவர்களும் இத் தமிழ்நாட்டில் உளர்! அவர்கள் கூறுங் குற்றங்கள் குணங்களே என்று இவர் காரணத்தொடு காட்டினும் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பின், நாம் தமிழ்மொழியின்

விதியை நொந்துகொள்ளல் வேண்டுமேயன்றி வேறு செய்வது யாது ?

கவிபாடும் ஆற்றல் :

நம் கவிஞர்க்குச் சிறந்த காவியமொன்று இயற்றல்வேண்டும் என்னும் பேரவா உண்டு. இவர் ஆசுகவி என்பதும், காவியம் இயற்றும் ஆற்றல் கருவில் அமையப்பெற்றவர் என்பதும் யாம் அறிந்தவையே. ஆயின், அவர் அவா கைகூடவில்லை. பல்மொழிப்பயிற்சியிலும், மொழியாராய்ச்சியிலும், இலக்கணவாராய்ச்சியிலும், அதற்கு வேண்டிய இலக்கியவாராய்ச்சிலும், ஒப்புநோக்கி உண்மை காண்டலிலும் வாழ்நாள்முழுதும் ஈடுபட்டதனால், இவர்மனமும் காலமும் இன்னொருதுறையில் பணியாற்ற இடமளிக்கவில்லை! அளிப்பினும், இவரை வாட்டி வருத்திய கொடும்பிணிகளும் மனக்கவலைகளும் அதற்குக் குறுக்கே நின்று தடுத்தன! இளமையில் 'நாங்குநேரி' என்னுந் திருப்பதியைக் குறித்து, ஏறக்குறைய ஆயிரம் செய்யுட்களில், ஸ்தலபுராணமொன்று பாடியுள்ளார் என்பர். ஆயின், அச் சுவடியை இவர் போற்றிவைக்கவில்லை போலும்!

பெரும்புலவர்தொடர்பு :

நம் புலவர்பெருமான் பழைய பரம்பரையில் வந்த பெரும்புலவருள் ஒருவர். அதனால், இவர் அப் பழம்பரம்பரைப் பெரும்புலவர்பலரோடு நெருங்கிப் பழகி, நட்புப்பூண்டு, அவர்களால் மனமாரப் பாராட்டப்பெற்றவர்.

வித்துவான் சுந்தரராமாநுஜ ஸ்வாமியும், வித்துவான் புருஷோத்தம நாயுடுவும் இவரோடு திருவரங்கம் பாடசாலையில் ஒரு சாலைமாணுக்கராகப் பயின்றவர்கள். திரு. நாயுடுவுடன் பூண்ட நட்பு, பின்னர் மதுரையில் சங்கப்பரீட்சைக்குப் படிக்கும்பொழுதும், தில்லையம்பதியில் பேராசிரியராய்த் தொண்டாற்றியபொழுதும், பிறைமதிபோல வரிசைவரிசையாக நந்திற்று. அத் தலையாய நட்பின் பயனுக, நம் ரெட்டியாரவர்கள், தாம் பல்கலைக்கழகப்பதவியிலிருந்து விலகி ஓய்வுபெற்றகாலை, திருவையாறு அரசர் கல்லூரியில் பேராசிரியராய்த் தமிழ்ப்பணியாற்றிவந்த அவ்வுயிர்த்தோழர்க்கு அப் பதவியை ஆக்கிவைத்து, தம் நட்புக்கடனைக் கழித்துக் கழிபேருவகைகொண்டார்.

முதுபெரும்புலவர் மயிலைசிவமுத்து, பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், பேராசிரியர் டாக்டர் மு. வரதராஜனுர், பேராசிரியர் டாக்டர் துரையரங்கனுர் முதலாய பெரும்புலவர் பலர்க்கும் இவர்பால் அளவுகடந்த அன்பும் மதிப்பும் உண்டு.

மாணுக்கர் அன்பர் முதலியோர்தொண்டு:

நம் பன்மொழிப்புலவரின் மாணுக்கர்களும் நண்பர்களுமாகிய புலவர்கள் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஐயா நாய்க்கர், ந. சுப்பு ரெட்டியார், ஸ்ரீநிவாஸ முதலியார், கோவை. நா. துரைசாமி நாயுடு, கோதண்டராம முதலியார், தே. வீரராகவனுர், ஆத்தூர் சாம்பசிவ ரெட்டியார்,

சார்ங்கபாணி ஐயங்கார் முதலானோர் உள்ளன்புடன் இவருக்கு அவ்வப்பொழுது தம்மாலான சிறு-தொண்டுகளைச் செய்து அன்னார்ஆசியைப் பெறும் பெரும்பேற்றினைப் பெற்றனர்.

முடிவுரை :

அமுதவாறு, அருளின் இருப்பிடம், அறிவின் விளக்கு, அன்பின் இருப்பிடம், இக்காலத்தொல்காப் பியர், இணையில் தியாகி, இயற்றமிழ்க்கடல், இலக்-கணத்தின் குன்றம், இலக்கணத்தின் வரம்புகண்ட கலைமணி, இலக்கணப்பெருங்கடல், இலக்கணப்-பெரும்புலி, இன்றமிழ்க்கடல், கலியுக வீடுமர், கலை-ஞர்கோ, கலைவடிவத்தெய்வம், கற்பகப்பூஞ்சோலை, குணக்கடல், சிந்தாமணிச்செல்வர், தங்கம்போலுந் தகையாளர், தமிழ்க்காவல்தெய்வம், தமிழ்மாணிக்-கம், துவராடைபுனையாத துறவி, தூய மாணி, நல்-லோர்கள்நற்றுணை, நித்ய யோகி, பண்புக்களஞ்-சியம், பல்கலைக்குருசில், பன்மொழிப்புலவர், புலவர்புரவலன், புலவர் போற்றும் புலவர், பொய்-யறியாப் புனிதத் தோன்றல்—என்று புலவர்பெரு-மக்கள்பலர் அறிவுகுணவொழுக்கங்களைப் பாராட்டிப் பாடும் புகழுடையோராய் நம் புலவர்வள்ளல் பொலிவுற்று விளங்கினர்.

எழுபது திருநக்ஷத்திரம் பயனுள்ளவற்றையே செய்து பிறர்க்கெனவே வாழ்ந்து அரும்பணியாற்றி, பிணியாலும் மூப்பாலும் மெலிந்து இளைத்துக் களைத்த இத் தொண்டரை இனியும் இவ்விருள்தருமாஞாலத்-தில் வைத்து வருத்தலாகாது என்று (திருவுள்ளங்

கொண்ட, அருள்வள்ளலாகிய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன், சோபகிருது வருஷம் ஆவணி மாஸம் சுக்லபக்ஷம் நவமிதிதியன்று (28—6—1963) தன்னடிச் சோதியில் சேர்த்துக்கொண்டான்.

தம் கடமையைச் செவ்வனே செய்து புகழை நிலைநிறுத்தி, தாமரைக்கண்ணன் உலகினைச் சேர்ந்த இப் புண்ணியமூர்த்திக்கு இனி நாம் செய்ய வேண்டிய கைம்மாறு யாது? இப் பெரியாரின் பெரும்பிரிவால் பிறந்த துக்கத்தைப் பொறுத்தல் மிக அரிது! ஆயினும், அப் பிரிவாற்றுமையால் செயலற்று வருந்திப் புலம்பிக்கொண்டிருத்தல் புலவரியல்பு ஆகாதன்றே! இனி, புலவர்கள், இப் புலவர்பெருந்தகை மேற்கொண்ட கொள்கைகளைக் கடைப்பிடித்து, பல மொழிகளைக் கற்று, இலக்கண விலக்கியநூல்களை ஊன்றிப் பயின்று, ஆழ்ந்தகன்ற அறிவினையும் பரந்த மனப்பான்மையையும் பெற்று, தெளிவு பிறக்காத இடங்களையெல்லாம் நடுநிலையில் நின்று ஆராய்ந்து, ஐயங்களை அறுத்து, மயக்கங்களைப் போக்கி, மக்களுக்கு மெய்யறிவு கொளுத்தி, தமிழ்த்தாய்க்குப் புதிய புதிய அருங்கலன்களைப் பூட்டி, அரும்பெரும்பணியாற்றல் வேண்டும். தமிழுலகம் சான்றோரைப் போற்றிக் காத்தல் வேண்டும். இவையே மறைந்த தொண்டர்க்கு மட்டற்ற மகிழ்ச்சியை விளைப்பனவாகும்.

பிழை திருத்தம்

முற்பகுதி

பக்க எண்	வரி	பிழை	திருத்தம்
12	8	பொருளாழகும்	பொருளாழமும்
16	2	ஆம்	1932- ஆம்
17	4	ont look	out look
23	8	கதைப் புத்தகக்-களையும்	கதைப் புத்தகங்-களையும்
24	27	நெரும்பு	நெருப்பு
26	24	ஆராய்வார்	ஆராய்வர்
31	23	வறுமை	வறுமை ;
32	2	பொருளை செய்யும்	பொருளைச் செய்-யும்;
,,	9	பக்களும்	மக்களும்
,,	10	துன் புறுவாரே	துன்புறுவரே
,,	16	துகமம்	துக்கம்
,,	22	உடல்மலியையும்	உடல் வலிமையை-யும்
40	2	ஏற்றுக்கெள்ளாமல்	ஏற்றுக் கொள்ளா-மல்
49	26	என்றும்	என்னும்
55	16	மீனுட்சிசுந்நரனுர்	மீனுட்சிசுந்தரனுர்

பிற்பகுதி

பக்க எண்	வரி	பிழை	திருத்தம்
1	8	பண்மொழிப்-புலவர்	பன்மொழிப்-புலவர்
9	16	உன்ளவராய்	உள்ளவராய்
18	20	சேர்தனை தந்	சேர்ந்ததனை
20	6	நான்கினினும்	நான்கினிலும்
54	4	ஆழ்ந்தாராய்த்	ஆழ்ந்தாராய்ந்

இரங்கற்பா

[மயிலை ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்,
ஸ்ரீ சுவாமி பரமாத்மானந்தர்]

ஆற்றல் தலையெடுத்தீர்; அன்பால் விளங்கினீர்;
போற்று பெரும்புலமை பூண்டிருந்தீர்;—ஏற்றமிகும்
பண்புக் களஞ்சியமாய்ப் பார்புகழ வீற்றிருந்தீர்;
விண்புக்கீர் கொல்லோ வெறுத்து.

[பண்மொழிப்புலவர் ரெட்டியாருக்கு ஆசிரியராகிய
மதுரை, கவிராஜபண்டிதர் ஜெகவீரபாண்டியனார்]

தாய்மொழி யளவில் தெலுங்கனே யெனினும்
தமிழ்மொழி முதலிய பயின்றே
ஆய்மொழி யளவை வழிகளில் பழகி
யாவையும் தகவுடன் ஆய்ந்து
வாய்மொழி யளவில் வாழ்பவர் உணர்ந்து
மதிநலம் பெறமுறை வரைந்தான்
காய்மொழி யறியா வேங்கட ராஜைக்
காலனும் கவர்ந்தனன் கலைக்கே.

[சென்னை மாணவர் மன்றம்]

தமிழன்னையின் அவலநிலை

கண்ணீர் உகுக்கின்றாள்! கண்ணீர் உகுக்கின்றாள்!
கன்னித் தமிழன்னை கண்ணீர் உகுக்கின்றாள்!
நெஞ்சம் குமுறி நிலையும் தடுமாறி
விஞ்சும் துயரதனல் மெய்யும் விதிர் விதிர்த்துக்
கண்கள் குளமாகிக் கதிகலங்கி நிற்கின்றாள்!
“மைந்தாவோ என்றன் மாமணியே! மறைந்தாயோ?

செல்வமே! என் றன் சீராளா! சென்ருயோ?
கண்ணுக்குக் கண்ணே, கற்பகமே! பிரிந்தாயோ?''
என்றே தவிக்கின்ருள் ஏங்கித் துடிக்கின்ருள்
கண்ணீர் உகுக்கின்ருள்! கண்ணீர் உகுக்கின்ருள்!
கன்னித் தமிழன்னை கண்ணீர் உகுக்கின்ருள்!

தமிழ்மகன் உளந்துடித்து வினவுதல்

அன்னையே! அன்னையே! ஆருயிரின் நற்றுணையே!
என்ன இடையூறு இன்றுனக்கு நேர்ந்ததம்மா?
செந்தா மரைபோலத் திகழும் திருவதனம்
வெண்டா மரைபோல வெளுத்திட்ட தேனம்மா ?
குமரியைக் கடல்முன்னே கொண்டதை
நினைத்தனையோ?
முச்சங்கம் மறைந்துவிட்ட முறைமை
நினைத்தனையோ!
நீரில் நெருப்பில் நின்பெரிய இலக்கியங்கள்
அழிந்த கதைஎண்ணி அழுங்கினையோ சொல்லம்மா
சொல்லம்மா? நின்றன் துயரத்தின் காரணத்தை.

தமிழன்னை

என்செய்வேன்! என்செய்வேன்! இனிய
தமிழ்மகனே,
அத்தனை கவலையையும் அருமைப் பணியாலே
மறக்கவைத்த மாண்பாளன் மயிலைப் பெருநகரில்
வள்ளுவனுக் கீடாயோர் நல்லவனைப்
பெற்றிருந்தேன்;
கன்னல் தமிழும் கன்னடமும் களிதெலுங்கும்
மலையா ளமும் நல்ல மாண்புறுசீர் ஆங்கிலமும்
தெள்ளத் தெளியத் தேர்ந்தவனைப் பெற்றிருந்தேன்;
தொல்புகழ் மிக்கவனும் நெல்லைப் பதியாளன்
இலக்கணப் புலமையிலே எவரும் நிகரில்லான்
ஆராய்ச்சி நூல்பலவும் அளித்தென்னை
அணிசெய்தான்;

பல்கலைக் கழகத்தின் செல்வமெனப்
பொலிந்திட்டான்
மண்ணுக்கும் நோகாத மலரடியால் நடப்பவனும்
பத்தரைமாற் றுத்தங்கப் பண்பாளன்
பன்மொழியான்
உயிருக்கு உயிராவன் ....

தமிழ்மகன்

.... ஓகோகோ! நானறிவேன்!
வேங்கட ராஜுலுவாம் வித்தகனை நானறிவேன்!
அன்புமழை பொழியும் அண்ணலை நானறிவேன்!
நல்லிசைப் புலவர்களின் நாயகத்தை நானறிவேன்!
புலவர் உலகத்தின் புரவலனை நானறிவேன்!

தமிழன்னை

ஆமாமாம்! அந்த ஆருயிரை நானிழந்தேன்!
பண்பின் உறைவிடத்தைப் பறிகொடுத்தேன்
என் செய்வேன்!

தமிழ்மகன்

அப்படியா! அம்மா! அந்தோ! அந்தோ!
எப்படித் தேற்றுவேன்! இடி வீழ்ந்த தேயம்மா!

[தமிழன்னையும் தமிழ்மகனும் ஒன்றும் பேசமுடியாமல் நெடுநேரம் திகைத்துப் பெருமூச்செறிகின்றனர். துன்பம் மீக்கூர, மீண்டும் தமிழன்னை புலம்புதல்]

என்னு ருயிரே! எங்கேநீ சென்றாயோ?
வள்ளல் கா. நமசி வாயன் மறைவினையும்
உத்தமன் உ. வே. சா. உயரறிஞன் மறைவினையும்
திரு. வி. க. மறைமலையார் சீராரும் பாரதியார்
இன்ன பலர்மறைவை உன்னால் மறந்திருந்தேன்.
பொன்னே மறைந்தாயே! புகழேநீ சென்றாயே!
என்னு ருயிரே! எங்கேநீ சென்றாயோ!

தமிழ்மகன்

தாயே, எமைப்பெற்ற தண்டமிழே, நீயழுதால்
சேயேம் இனிஎவர்பால் சென்றே துயர்தீர்வோம்
வாராய்! மயிலைநகர் வாழும் உறவினர்க்கும்
பிரிவால் வருந்தும் அறிஞர் பிறருக்கும்
ஆறுதல் கூற அழைக்கின்றேன்; வாராய்நீ.

[தமிழன்னையும் தமிழ்மகனும் மயிலை இராக்கியப்ப முதலி தெருவில் 35 எண்ணுள்ள இல்லத்தை அடைகின்றனர். மன்றத்தலைவர் முதுபெரும்புலவர் மயிலை. சிவமுத்து, பேரறிஞர் பெ. நா. அப்புசாமி அய்யர், ரெட்டியார் அவர்களின் இளவல் உயர்திரு. K. V. கிருஷ்ணசாமி ரெட்டியார், புலவர்கள் ஐயா நாயகர், கோதண்டராம முதலியார், சார்ங்கபாணி ஐயங்கார், நா. சீநிவாச முதலியார், வாசன் கம்பெனி அலுவலர் சக்ரவர்த்தி ஐயங்கார், மற்றும் உள்ள உறவினர்கள், நண்பர்கள் ஆகிய அனைவரும் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கின்றனர்.]

பெருமக்கள்

என்செய்வோம்! அன்னையே! என்செய்வோம்!
என்செய்வோம்!
தமிழின் பெருவாழ்வைத் தான்பிரிந்தே
ஏங்குகிறோம்!
இலக்கியப் பேரொளியை இழந்தே தவிக்கின்றோம்!
அன்பர்பணி செய்ய அங்குமிங்கும் உலாவியசீர்
மலரடிகள் தளர்ந்தனவே; மாண்பார் அறமுறைக்கும்
வாயுமிங்கு மூடியதே; வளமார் இலக்கியங்கள்
எழுதியகை சோர்ந்தனவே; என்செய்வோம்!
என்செய்வோம்!

தமிழன்னை

அருமைத் தமிழ்மக்காள்! ஆறுதல்நான்
என்சொல்வேன்!
காலந்தான் உங்கள் கவலைதனைப் போக்கிவிடும்;

இறைவனடி சேர்ந்த என்னரிய செல்வத்தின்
பொன்னுடலம் மாய்ந்தாலும் புகழுடலம் மாயாது!
கண்ணீர் துடைத்துக் கடமைதனை நினையுங்கள்;
அண்ணலவன் கொள்கை அணைவருமே
குறிக்கொண்மின்;
இலக்கியச் சோலையிலே என்றென்றும் வாடாத
பன்னூல்கள் இந்தப் பாரெல்லாம் போற்றிடுவீர்!
அன்னாரின் சுற்றம் அமைதியுடன் வளமுறவே
எந்நாளும் ஆதரவை ஈந்தே சிறந்திடுவீர்;
முத்தமிழும் போற்றி முறைமையுடன் வாழ்ந்திடுவீர்!

பெருமக்கள் வாழ்த்துதல்

வேங்கட ராஜுலுவாம் வித்தகனின் பெயர்வாழ்க!
ஓங்கும் அவன்கொள்கை உலகமெலாம் வாழியவே!

[சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர்
டாக்டர் மு. வரதராஜனார்]

ஆராய்ச்சி நூல்பலவும்
அருந்திறனோ டியற்றினையால்;
வேரான சொற்பொருளை
விளக்கமுறத் தெரிந்துரைத்தாய்;

ஆராலும் ரெட்டியார் என்
றூர் வழுறச் சொலப்பெற்றாய்;
சீரான தனிவாழ்வில்
செம்மைநெறி ஒழுகினையே!

நுண்மைமிகு மதிவன்மை
நுழைமாண்பின் புலமையினோய்,
பண்புகளுக் குறைவிடம்நீ;
பன்மொழிகள் பயின்றனையால்;

நண்பர்களுக் கெளியைநீ;
நல்லோர்கள் நற்றுணை நீ;
தண்மையுறுஞ் சமயநெறி
தனைப்போற்றித் திகழ்ந்தனையே!

[சென்னை பல்கலைக் கழகப் பேராசிரியர்
புலவர் துரையரங்கனர், மதுரை]

உலகில் மக்க ளுடம்பெடுத் தோர்கள்
பலர்மன்! அவருள், பாராட் டெடுக்க
மக்கட் சுட்டுடன் மாணவே ஒளிர்வோர்
இக்கலி யுகத்தில் எண்ணிற் சிலரே;
அவர்தாம்,
அறிவொளிக் காகவே அரும்பெரு நூல்கள்
மொழிவேற் றுமையின் முனைப்பிற் புகாமல்
தேர்ந்து பயின்று திரிபைய மின்றித்
தெளிய உணர்ந்து தெவிட்டா இன்பம்
தாம்பெற் றதுபோல் தமையடைந் தோரெலாம்
பெறவே தொண்டு பெரிதாற் றிடுவர்;
தாம்காண் உண்மை தலைபோவ தாயினும்
சாற்றத் தயங்கார்; சாரார் கயவரை;
ஆள்பிடிப் பதனுல் ஆம்புகழ் பெருமை
இக்காலச் செந்நெறி இதுவே என்போர்
நயவுரை கேட்க நாணுவர்; நடுங்குவர்;
செவித்துணை யிரண்டையும் சேரவே இரண்டு
கைச்சுட்டு விரலால் கடிதிற் புதைப்பர்;
வறுமையிற் செம்மையை மாண்புடன் பூண்பர்;
இனியவே கூறுவர் எளியோர்க் கெல்லாம்;
பதவி பணம்வலி பாங்குடன் பெற்றவர்
வெருட்டின், தகுமொழி வீசத் தயங்கார்;
கடமை தவறுர்; கடவுளை மறவார்;

அறநெறி பிறழார்; அவநெறி நடவார்;
கிடைத்தது கொண்டு கேடிலா வாழ்க்கை
நடத்துவர்; கடன்பட நாடார் கனவினும்;
எளிய வாழ்க்கையே இனிதென மகிழ்வர்;
புறஞ்சுவர்க் கோலம் புனையார்; புனைவோர்
தம்மைப் பொருளாய்த் தகவுடன் கொள்ளார்;
இன்னோர் நிரலில் ஈடெடுப் பில்லா
முதல்வனாய் நின்றாய்! முதுமையிற் கனிந்தாய்!
உடற்றனை வேண்டா ஒருபோதும் இனிமேல்
எனவே துணிந்தாய்! இனிவரா உலகம்
அடைந்தாய், அறிதுயில் ஆற்றுவோன்
மகிழ்வுடன்
அழைக்க! அதனால் அளவிலா மகிழ்ச்சி
அடையக் கடவே மாயினும், பிரிவால்
ஆற்ற கில்லே மாயினேம்; எம்மை,
வேங்கட ராஜுலு விழுமியோய்,
தேற்றி, மகிழ்ச்சியில் திளைக்கச் செய்கவே!

[அண்ணாமலைநகர்த் தமிழ்விரிவுரையாளர்
மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்]

பரணரே முன்னை பல்வகையாம் நூல்கள்
தரணியுயத் தந்த தமிழன்—கரவில்லா(து)
எவ்வெவர்க்கும் ஏற்பவுரை ஈய்ந்தோன் இவ்வுலகம்
எவ்வமுறச் சென்றானே இன்று! 1

இன்றே தமிழ்த்தாய் இனிய உரையிழந்தாள்;
இன்றே தமிழ்த்தாய் இலக்கணத்தின்-குன்றத்தைக்
கய்விட்டாள் என்றே கதறுவேம், வேங்கடத்தின்
செய்கையினைச் சிந்தையிலே சேர்த்து. 2

பன்மொழியின் சொன்னயத்தைப் பாரிழந்த;
சுற்றத்தார்
இன்மொழியாற் சொல்லுந் துணையிழந்தார்;—
தொன்மையவாம்
நன்னிலையை ஆராயும் நாவிழந்தார் கற்றறிந்தோர்;
என்னென்பேம் இத்துயரால் யாம்! 3

[பைந்தமிழ்ப்பாவலர்
பேராசிரியர் அ. கி. பரந்தாமனுர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.]

(இன்னிசை வெண்பா)

ஆங்கில ஆண்டாம் 'அறுபத்து மூன்றினிலே'
பாங்கான ஆகஸ்டு பன்னுமிரு பத்தேழில்
ஈங்குலகை விட்டநந்தோ! ஏகினரே வானுலகு
வேங்கட ராசுலு வேள். 1

(தரவு கொச்சகம்)

எம்மருவேங் கடராசர்,
இறைவா, நின் தாளடைந்தார்;
இம்மையிலே உள்ளுணர்வால்
ஒருகடமை இயற்றிவிட்டார்;
செம்மையுற மறுகடனைத்
தீர்ப்பதற்குள் பறந்துவிட்டார்;
உம்மிடத்தே உற்றவரை
ஆண்டருள வேண்டுவனே! 2

இலக்கணத்தில் பெரும்புலியாய்
இருந்தவேங் கடராசர்

நிலையுறு நல் லாராய்ச்சி
நிரம்பவுமே செய்தளித்தார்;
உலகினிலே முடிக்காத
முடிவுகளை உவந்தளித்தார்;
நலம்மிகுந்த நல்லவரை
ஆண்டருள வேண்டுவனே! 3

வடமொழியும் தமிழ்மொழியும்
வண்டெலுங்கும் கன்னடமும்
திடமுடனே நனிபயின்ற
திராவிடநன் மொழியறிஞர்
இடமகன்ற தமிழகத்தில்
எமக்கிருந்த ஒருபெரியார்,
படைத்தவ,நின் பதமடைந்தார்;
ஆண்டருள வேண்டுவனே! 4

பெருர்புலமை பெற்றிருந்தும்
பேரடக்கம் உள்ளவராய்
இருநிலத்தில் வாழ்ந்துவந்த
எம்மருவேங் கடராசர்
ஒருபொழுதும் உணைமறவா
திருந்திந்நாள் நினையடைந்தார்;
அருங்குணத்தெம் அண்ணலை நீ
ஆண்டருள வேண்டுவனே. 5

திருநாட்டை அலங்கரித்த
செல்வர்வேங் கடராசர்
அரும்பாடு பட்டிங்கே
ஆராய்ச்சி செய்துவந்தார்;
திருநாட்டில் தமிழாய்வு
செய்வதற்கோ அழைத்துவிட்டாய்?
பெருமானே, பெரியவரை
ஆண்டருள வேண்டுவனே! 6

சென்னையிலே இருதிங்கள்
முனங்கண்டேன்; செலும்போது
பின்னவரைச் கண்டிடுவேன்
என்றிருந்தேன்; பேதுற்றேன்!
என்னெணமும் பொய்த்ததுவே!
இதுதானே மனிதர்நிலை!
அன்னவரை, பெருமானே,
ஆண்டருள வேண்டுவனே! 7

வானவெளி சுற்றிடுவேம்;
வான்மதியுள் புகுந்திடுவேம்;
ஆனஉன்றன் கருத்துணர
அம்மானே, அறிகிலமே!
ஞானவடி வானவனே,
நான்குறைகள் சொலவலனே?
ஆனஎங்கள் அண்ணலைநீ
ஆண்டருள வேண்டுவனே! 8

அண்ணலவர் பழம்பொருளாய்
ஆனநிலை யார்மறப்பார்?
உண்ணுகின்ற ஊருணிதான்
உடைந்தநிலை யாயிற்றே;
நண்ணியவிப் பேரிடியை
நாளதுதான் போக்கிடுமோ?
அண்டியநின் அன்பரைநீ
ஆண்டருள வேண்டுவனே! 9

(கலிவிருத்தம்)

வாழ்க அண்ணலின் ஆருயிர் வானிலே!
வாழ்க அன்னவர் தொண்டுகள் வளமுற!
வாழ்க அவரது குடும்பமும் வாழ்கவே!
வாழ்க அவர்திரு நாமமும் வாழ்கவே! 10

[புலவர் வே. ஐயா நாய்க்கர்]

தென்பாண்டித் திருநாட்டில் தமிழ்வளர்க்கும்
நெல்வேலிச் சீமை தன்னில்
தென்குமரி மருங்குகொடைச் செல்வர்பலர்
செறிந்தோங்குந் திருவின் மிக்குத்
தென்கடலின் வளம்நிறைந்த
சமுகரங்க புரத்துவரும் சீர்த்தி மிக்காய்,
தென்றமிழின் கடலான வேங்கடரா
ஜூலுஎவண் நீ சென்றாய்? அண்ணல். 1

மண்ணகத்தில் தமிழாய்ந்து மாண்புறுமா
ராய்ச்சிபல வரைந்தாய்; இன்று
விண்ணகத்தில் பலமொழியும் விரைந்தாயச்
சென்றனையோ? மேன்மேல் ஆங்குப்
பன்மொழிகள் பயில்வதற்குப் படர்ந்தனையோ?
ஆங்குனது பாசம் மிக்க
அண்ணனையும் மக்களையும் உறவினரை
யுங்காண அவாவி னையோ? 2

செந்தமிழின் கரைகண்டாய்; தெலுங்குமலை
யாளங்கன் னடந்தெரிந்தாய்;
சந்தமுறும் வடமொழியும் ஆங்கிலமும்
படித்துணர்ந்தாய்; தக்கார் போற்றிச்
சிந்தைமகிழ் வுறுமறிவின் திறம்படைத்தாய்;
பன்னூல்கள் சிறப்பச் செய்தாய்;
சொந்தமுயற் சியினுயர்ந்த தோன்றலுன்றன்
பிரிவதனால் துயருற் றேமால். 3

தொல்காப்பி யக்கடலில் தோய்ந்துபல
நன்மணிகள் தொகுத்துத் தந்தாய்;
பல்காப்பி யம்பயின்றாய்; சங்கவிலக்
கியத்துறையில் படிந்தி ருந்தாய்;

ஒல்காத புகழ்படைத்த உரையாசி
   ரியர்பலரின் உரையின் ஆழம்
பல்காலும் பயின்றவற்றின் பயன்தெரித்தாய்;
   உனைப்போல்வார் பாரில் உண்டோ? 4

'உரையாளர் தம்மிலிளம் பூரணனே,
   உயர்சேனு வரையன் தானே,
வரையாத நச்சினர்க் கினியன்பரி
   மேலழகன் வடிவந் தானே,
தெரியாத நுண்பொருள்கள் தெளிவிக்கும்
   இவன்'என்று தெளிந்தோர் போற்றும்
பெரியோனே, வேங்கடராஜுலுப் பெயரோய்,
   நின்பிரிவால் பேதுற் றேமால். 5

சிந்தா மணிச்செல்வ, சீபுரா
   ணம்பதித்த சீர்மை யாள,
நந்தாத மாமணியே, கபிலர்பர
   ணர்முதல்நூல் நன்கு செய்தாய்;
செந்தமிழின் இலக்கணக்கட் டுரைபாட
   நூல்பலவும் சிறப்ப நல்கிப்
பைந்தமிழும் பன்மொழியும் பயின்றுணர்ந்தாய்;
   விண்ணுலகு படர்ந்தாய் மன்னே. 6

திரு. வி. க. மறைமலையார்
   உ. வே. சா. கா.நமச்சி வாயர் சேர்ந்த
உருவளரும் திருக்கயிலை யுற்றனையோ?
   இராகவையங் கார்கள் சென்ற
மருவிரியும் துளபமணி மாலுறையும்
   வைகுந்தம் மருவி னையோ?
பெரியரவர் தம்பால்நின் ஆராய்ச்சி
   யுரைபலவும் பேசி னையோ? 7

தமிழன்னை தன்னருமைத் தனயன்னின்
   பிரிவதனல் தளர்ந்து நின்ருள்;

தமிழகத்துப் புலவரெலாம் தந்துணைவன்
றனைப்பிரிந்து சார்பி ழந்தார்;
தமிழ்மொழியின் துணைமொழியோர் தம்மருநண்
பனையிழந்து சாம்பு கின்றார்;
தமிழ்மண்ணும் நின்பிரிவு தனையுணர்ந்து
கண்பனிநீர் தான்து ளிக்கும். 8

சென்னைப்பல் கலைக்கழகம் சிறந்தவா
சிரியனுயச் சேர்ந்தி ருந்து
பன்னூல்கள் ஆய்ந்தாய்ந்து பதிப்பித்தாய்;
அறிஞர்கள்பா ராட்டுப் பெற்றாய்;
இன்முகத்தாய், அறிஞர்வரின் இனியபல
ஆராய்ச்சி இயம்பு கிற்பாய்;
மன்னுசிறார் பாடநூல் வாசன்பதிப்
பகத்தெழுதி வழங்க லுற்றாய். 9

என்றினியுன் முகங்காண்பேம்! இலக்கணவா
ராய்ச்சிஇனி திருந்து கேட்பேம்!
என்றினியுன் நுண்மதியால் சங்கவிலக்
கிய நயங்கள் இயம்பக் கேட்பேம்!
என்றினிப்பன் மொழிகளிலும்இயைந்துளவொற்
றுமையறிவோம்! ஏந்தல், உன்பால்
என்றினியாம் ஐயுற்ற பொருள்விளக்கம்
எளிதறிந்தே இன்பங் கொள்வேம்! 10

திருமாலின் அடிமறவாச் சிந்தையினுய்,
செல்விருந்து சிறப்ப ஓம்பி
வருவிருந்தை எதிர்நோக்கும் வண்மையினல்,
தமிழறிஞர் வாழ்வ தானுய்;
உருவிணக்கண் டெள்ளாமை எனுங்குறளுக்
கிலக்கியமாய் உயர்ந்த காட்சி
கருவினிலே திருவுடைய வேங்கடரா
ஜுலுஇன்று கரந்து சென்றாய். 11

தேசமெங்கும் புலவரெனத் திரிகின்ற
இந்நாளில் திருந்தக் கற்ற
மாசகன்ற பழம்புலவர் வழிவந்து
நுண்ணறிவு வாய்க்கப் பெற்ருய்;
நேசமுடன் தமிழ்மரபு நிலைகுலையா
வகைகாக்கும் நெஞ்சங் கொண்டாய்;
வீசுபுகழ் வேங்கடரா ஜுலு, இனியார்
தமிழ்மரபு விளங்கச் செய்வார்? 12

பன்மொழியிற் புலமைபெறும் வேங்கடரா
ஜுலு, இன்று பாரில் உன்றன்
பொன்னுடலம் மறைந்திடினும் புலமையென்றும்
மறையாது; புலவோர்க் கெல்லாம்
நன்றுவழி காட்டிவரும் நானிலத்து
நல்வாழ்வு நாளும் பெற்று
நின்மரபு நீடூழி தழைத் தோங்க
அருள்புரிவாய், நேர்மை மிக்காய். 13

[வி. பூதூர், புலவர் கி. வேங்கடசாமி ரெட்டியார்]

தமிழ்த்தாயின் தவிப்பு :

என்மகனே, வேங்கடரா ஜுலுவென்னும்
எழின்மகனே, யாரும் போற்றும்
நன்மகனே, புலத்துறைமுற் றியநாவின்
நலமகனே, நல்லோர்க் குற்ற
பொன்மகனே, பன்மொழியின் துறைபோய
புலமகனே, பொருவற் ருேங்குஞ்
சன்மகனே, இந்நாள் நீ எனை நீத்தாய்;
துணையின்றித் தவிக்கின் றேனே! 1

கண்டகுலங் களைநுணிதாய்க் கருதிடுங்கால்
இரட்டியெனக் கழறுஞ் சீர்மைப்

பண்டகுலப் பயனாய பண்பாள,
 நண்பாள, பாரந் தீர்ப்பான்
அண்டர்குலத் தவதரித்தான் அடிமலரை
 அனவரதம் அன்பின் ஏத்துந்
தொண்டர்குலத் தவ,இந்நாள் துறந்தனை நீ
 எனை;அந்தோ! துடிக்கின் றேனே! 2

அம்ம!தத்தம் மனம்போன வாறெல்லாம்
 பேசுகின்ற அவர்போ லன்றி
எம்மதத்தர் எக்குலத்தர் எத்தொழிலர்
 என்றாலும் இன்பின் ஏற்குஞ்
சம்மதத்த, சான்றோர்க்கும் சான்றோனாந்
 தனிப்பெருமை சான்ற மேலோய்,
மும்மதத்த களிறழைத்தாற் கன்பா,நீ
 நீங்கவிடர் மூழ்கி னேனே! 3

என்னையே பெரியள்எனப் பலர்எண்ணி
 மகிழ்கின்றா ரெனினும், அந்தோ!
முன்னையே [1]என்னோடிங் குடன்பிறந்தார்
 தமையிகழ்ந்து முரண்செய் கின்றார்;
அன்னையே அனையாய்,ஆ தலினால்யான்
 ஆழ்துயரில் அமிழ்ந்தேன்! மாற்றாய்;
நின்னையே மிகநம்பி நிலைநின்றேன்;
 நீயும்எனை நீத்திட் டாயே! 4

தேவர்சிந்தா மணிப்பொருளை எம்மனோர்
 உளங்கொள்ளச் சிறப்பி னோடும்
யாவர்சிந்தா திங்குரைப்பார்? கம்பனிலும்
 இருக்கும்நயம் இனிதாச் சொல்லிப்
[2]பூவர்சிந்தா குலந்தவிர்க்கும் புண்ணியர்யார்?
 நின்பெருமை புகல வல்லார்
[3]நாவர்சிந்தா குலந்தவிர்க்கும் தாமோகாண்!
 எனை நீத்தாய்; நலிகின் றேனே! 5

மின்னனையர் மயல்நினையா வியன்பிரம
சாரியாய் மேன்மை பெற்ருய்;
என்னனைய பன்மொழிகள் பயின்றிட்டாய்;
அணிசெய்தாய்; யான்ம கிழ்ந்தேன்.
நின்னனைய சிலர்சென்ருர்; நீயிருந்தாய்
எனஇருந்தேன்; நீயும் சென்ருய்!
மன்னுலகில் என்னை இனி வாழ்விப்பார்
யாவர்என வருந்து வேனே! 6

இலக்கணக்கட் டுரைகளினல் எனையணிந்தாய்!
எல்லைக்கும் எல்லை கண்டாய்!
புலக்கணிற்க நுண்பொருள்கள் கபிலபரண
ரில்புகன்று புகழே கண்டாய்!
தலக்கண்மிகுஞ் சீபுரா ணப்பதிப்பால்
நின்தகைமை தன்னைக் காட்டி,
அலக்கணுக்கோ ரிலக்கெனச்செய் தெனை
விடுத்தே
நீஅகன்ருய்! அந்தோ! அந்தோ!! 7

1. என்...தார் - மலையாள, கன்னட, தெலுங்கு மொழிகள்.
2. பூவர்–பூமியிலுள்ளார். 3. நாவர்-நாவல் என்பதன் போலி.

[புதுவை, புலவர் P. N. இராஜமாணிக்கம் பிள்ளை]

திருவாளா, வேங்கடரா ஜுலுவென்று
சீர்த்திமிகு வித்து வானே,
பெருவாழ்வு பெறஎங்கள் தமைவிட்டுப்
பிரிந்தனையோ! இந்த மாயக்
கருவாழ்வு கடிந்தனையோ! திருநாட்டுக்
கெழுந்தருளக் காத லுற்று
நிருவாக மத்தனையும் கணப்பொழுதில்
விடுத்தனையோ! நிலைகெட் டோமே! 1

எட்டாத இடங்களிலே இருக்கின்ற
செம்பொருளை ஆய்ந்து தந்தாய்;
முட்டாது மேற்கோளை எடுத்தெடுத்து
வழங்கிடுவாய்; கேட்கு முன்னே
தட்டாமல் எவ்விடத்தும் ஐயங்கள்
அறுக்கவல்ல சதுரா, ஈண்டு
நட்டாருள் நினைப்போலே நானிலத்தில்
கண்டிலம்யாம்; இனிக்காண் பேமோ! 2

பன்மொழியிற் புலமைநல முற்றிருந்தா
யாயிடினும், பக்கத் துள்ளோன்
நன்மொழியில் மட்டுமரும் பொருளுணர்த்தி
மகிழ்விக்கும் தகைமை யுள்ளோய்,
என்மொழியில் எத்துணையோ குற்றமுள
எனினுமதில் குணமே காண்பாய்!
பொன்மொழியை இனிக்கேட்ப தெக்காலம்?
புகன்றிடுவாய், அண்ணல்! அண்ணல்! 3

புலவர்புகழ் சௌசீல்யம் சௌலப்யம்
எனுமிருசொற் பொருளும் நின்பால்
இலகுறவே கண்டுநனி வியந்தோம்யாம்;
இணையின்றி இலக்க ணத்தில்
பலவிளக்கம் தமிழ்ப்புலவர் மனங்களிக்கப்
பகர்ந்திட்டாய், வெளிவா ராத
நலமிகுந்த ஆய்வுரைகள் வெளிவரவே
நாரணன்றன் அருள்க! மன்னே. 4

சிரமமின்றிப் பலமொழிகள் கற்றறிந்த
சீமானே, செம்ம னத்தோய்,
பரமபதம் சேர்ந்ததுநிற் கனுகூல
மானாலும், பதைக்கின் றேம்யாம்!
சரமகவி கேட்கவெணி இவ்வாறு
செய்தனையோ! சான்றோய், இந்தக்

கிரமமெல்லாம் முன்பேநீ உளத்தடைத்த
குறிப்புகளோ! கிளத்தாய், ஐயா. 5

தென்மொழிகள் எனுமினிய நூலொன்றே
நின் திறமை தெரிக்கச் சாலும்;
பன்னுவதென்? நின்னிலையில் ஒருபுலவன்
பைந்தமிழ்நாட் டுள்ளான் கொல்லோ!
என்னுடைய உயிர்நட்பாய் ஆசிரியச்
செம்மலுமாய் இருந்தாய், ஏந்தால்,
உன்னுடைய புலமையெலாம் என்னதென
உள்ளினெனஃ தொழிந்தேன் மன்னோ! 6

ஆந்திரமும் கன்னடமும் மலையாளம்
வடமொழியும் அறிந்த மேலோய்,
தீந்தமிழின் சுவைமலிந்த திவ்யப்ர பந்தத்தில்
திளைத்தோய், மிக்க
சாந்தமுறு சமண்மதத்தின் எல்லைதெரி
தீர்த்தங்கர் அனைய சாமீ,
வேந்தர்புகழ் வீடுமன்போல் விளங்கியநின்
ஆவியென்றும் பெறுக சாந்தி! 7

[பீளமேடு, புலவர் அ. கிருஷ்ணசாமி நாயுடு]

சாமிநீ இறைவனடி சேர்தனை தந்
எண்ணிமிகத் ததும்பி உள்ளம்
'ஏமியினி சேசேதி எப்புடிங்க
சூசேதி' என்றென் றேங்கி
ஆ!மருவு தம்பியுடன் பேரனுடன்
பேர்த்தியுடன் அம்மா என்போர்
தாமருவு துன்பமுடன் அழுகின்றேம்
வருகுவையோ! சாமீ! சாமீ! 1

ஒன்றமுப் பத்தைந்தாண்டு முன்னும்பால்
திலலையினில் உயரக் கற்றேன்;
அன்றிருந்த சீநிவாசன் இலக்குமியும்
இல்லை எனும் இன்னல் தீர்க்க
இன்றிருக்கும் வசந்தாவை இராதாகிருஷ்
ணனைக்கண்டே இன்புற் றேம்யாம்.
சென்றனையே, எம்சாமி! அவ்வின்பம்
கண்ணீரில் தேங்கு தம்மா! 2

ஒப்பிலாக் கலைப்புலவ, வேங்கடரா
ஜுலுரெட்டி யாரே! உன்னிச்
செப்பருமைக் காவியமும் சமுதாய
ஆய்வுரையும் சேர்த்தல் வாழ்த்தி,
அப்ப!இனி ஆந்திரம்போல் தமிழினிலே
இலக்கணத்தை அமைக்க என்றீர்;
இப்பஇனி யார்சொல்வார் அமைக்க? இனி
என்செய்வேன்! எந்தாய்! எந்தாய்! 3

ஐய!நீ ஓய்வுற்றுய் எனஉரைப்பர்
ஓய்வறியார்; ஓய்வொன் றின்றித்
துய்யனே, பாடநூல் பலப்பலவும்
பலமுறையில் தொகுத்து வைத்தாய்;
செய்யவாம் ஆய்நூலுள் தென்மொழிகள்
தெரிபுலவர் செய்யா நூலாம்;
பையவினி அத்தகைநூல் காண்குவமோ!
குழுப்புலவீர், பகர்மின், பகர்மின். 4

இத்துணையாம் நுங்கலையை அறிஅறிஞர்
பலர்சால இறும்பூ துற்று
மெத்தவும்பல் கலைக்கழகத் தாய்துறையில்
அமர்த்துவித்தார்; மேலோய், நாளும்
புத்தமிழ்துப் பரணருடன் கபிலரையும்
சைனச்சீ புராணந் தானும்

ஒத்தாய்ந் தாய், மறைந்தனையே!
'எவர்க்காண் பேம்' எனக்கழகம்
ஒல்கு தம்ம! 5

பன்மொழியிற் புலவரெனும் பட்டத்தைத்
தாங்கொண்டார் பலரும் நும்போல்
தென்மொழிகள் நான்கினினும் வித்துவான் என்
பட்டத்துள் சேர்ந்தா ரல்லர்;
தென்கலைகள் பலப்பலவும் சேர்ந்தொன்றுங்
கலைவடிவத் தெய்வம் என்றே
தொன்மரபின் வேங்கடரா ஜுலுரெட்டி
யார் உம்மைத் தொழுதல் மேலாம். 6

(வெண்பா)

ஆவணி சோபகிரு தாம்புதன் பன்னிரண்டில்
தேவன் இறைவனடி சேர்ந்தனர்—மேவுகலை
வேந்தன்வே. வேங்கடரா ஜுலுரெட்டி யார்புவியில்
சாந்த புகழுடம்பு சார்ந்து.

[இடைப்பாடி, புலவர் தே. வீரராகவனார்]

திருமருவும் நிறத்தினனைத் துளவுகமழ்
பதத்தினனைச் சிந்தை செய்தே
தருதுயரம் இரியஉறு தவமியற்றி
இசைபெறுவேங் கடாச லப்பேர்
ஒருபெரியார் தனயரவர் ஒருமூவர்;
நடுமணியாய்த் தமிழர் செய்த
அருந்தவங்கள் திரண்டுருவாய் வேங்கடரா
ஜுலுப்பெயரில் அமைந்த அன்றே. 1

கருவினிலே திருவுடைய கலையரசர்
இனியதமிழ்க் கலைக ளெல்லாம்
வருமிளமைப் பருவமதில் வரன்முறையாய்
வலவரிடம் வாய்ப்பக் கற்று,
மருவுவட மொழிகனடம் மலையாளம்
வடுகுடனே ஆங்கி லேயம்
அருமைமிகு மொழிகளிலே அதிபுலமை
பெற்றவர்சீர் அறையப் போமோ? 2

'இலக்கணத்தின் நிலைகண்ட இயற்புலவர்
இவரைப்போல் இல்லை' என்று
நிலக்கணறிந் தவர்களொரு முகமாக
நிகழ்த்துமுரை நேர்மை யொன்றே!
சலத்துறையை வெறுத்துபுகழ்ச் சமநெறிசெல்
சான்றவரும் மொழிகள் தேரும்
புலத்துறைமிக் கவருமிவர் மொழிவழியா
ராய்ச்சிகளைப் போற்றல் பண்பே. 3

பொன்னிலகு குடத்தினுக்குப் பொட்டிட்டுப்
போற்றுவதில் பெருமை யில்லை;
தன்னியல்பில் தனக்குவமை யில்லாத
தாசரதி அருள வந்தார்;
வின்னிலவு வியனூல்கள் அவர்யாத்த
விளம்பரமாம்; வேறு வேண்டா;
தென்னிலவு விருந்துதமிழ் தெரியுலகில்
செறியும்வரை நிலவும் தாமே. 4

கவித்தலமன் கனவில்லி உருக்குதிரு
வாசகம்கல் லாடம் கண்ணுய்ப்
புவித்தலத்தார் புகழ்ஆழ்வார் பன்னிருவர்
அருள்மொழிகள் போன்ற ஆன்ற
குவித்தபல குலநூல்கள் வெளியிட்டுக்
குழுவினிலே குறித்த தொண்டு
செவித்தலங்கள் நனிகுளிரச் செயமுடித்த
இவர் திறமை செப்பற் பாற்றே? 5

துவராடை புனையாத துறவியிவர்;
தொடக்கமுதல் தூய மாணி;
இவராக இணைந்தார்கள் துயரகற்றத்
தமையெரித்த இணையில் தியாகி;
எவராக இருந்தாலும் உண்மையுளங்
கொளத்தெருட்டும் எழில்வி வேகி;
சுவராக வைணவத்தின் தூணாகத்
துளவோன் ஏல் நித்ய யோகி. 6

சத்தியத்தின் எளிமையினின் தவநெறியின்
தகுநேர்மைப் பண்பின் சான்றாய்
இத்தரையில் ஒருகாந்தி யெனுங்கடவுள்
தனைக்கண்டோம்: இவரும் அன்னார்
ஒத்திருந்த உண்மையினை அடக்கத்தால்
ஒளித்துறைந்தார்; உண்மை உண்மை!
இத்தவரோ டியைந்திருந்த புண்ணியமொன்
றேயடியேற் கியைந்த பேறே! 7

இவ்வண்ணம் தமிழன்னை அருமகவை
இழந்தருவிக் கண்ணீர் வார,
உய்வண்ணம் இனிஉண்டோ என்றுபுவி
வைணவர்கள் உருகி நைய,
கைவண்ணம் கண்டபெருஞ் சுற்றத்தார்
கற்றறிந்தோர் கலங்கிச் சோர,
மைவண்ணன் மலரடிகள் சேர்ந்துமன
நிறைவெய்தி மறைந்தார் மன்னே! 8

(வெண்பா)

சோப கிருதாண்டுச் சொல்லா வணித்திங்கள்
தாபந் தரவருநாள் பன்னிரண்டே-சீபதியின்
செந்தா மரைப்பாதம் சேர்வேங் கடராசர்
நந்தாவின் புற்றதொரு நாள்.

[புலவர் ஜகந்நாத ரெட்டியார்]

ஓங்கியபன் மொழிதேர்ந்த உத்தமனே,
வித்தகனே,
தீங்குசெறி யுளத்தவர்க்கும் திருவருள்செய்
நல்லுளத்தோய். 1

மாலடியை மறவாத மாண்புடைய மாமணியே,
ஞாலமதில் நிகரில்லா நற்குணத்தோய்,
சிற்குணத்தோய். 2

தண்டமிழ்த்தாய் உளங்குழையச் சான்றோர்கள்
கண்கலங்க
விண்டுவின் பொன் னடிமலரை விரைந்தனை நீ
மேவினையே! 3

(வேறு)

முற்றத்தில் சிந்தியசொல் சிலகற் றுலும்
மூவுலகும் திறையாகப் பெறலாம் என்றே
கற்றவர்கள் வியந்துரைப்பர் நின்னை! நின்போல்
கலையுணர்ந்த பெரும்புலவர் யாவர்? ஐயா. 4

துன்னுபெருங் கடல்போலப் பரந்த கல்வித்
தொல்பொருளை மிகப்பெற்றும் செருக்கில் லாமல்
நின்னைப்போல் மனமடங்கி வாஅய டங்கி
நிற்கின்ற பெரும்புலவர் யாவர்? ஐயா. 5

(வேறு)

சீரார்ந்த நின்றனக்குச் செழுமுத்தால்
ஆரமிடாச் சிறுமை தீரப்
பேரார்ந்த கண்முத்தால் துயராரம்
பூட்டுகின்றேம், பெரியோய், மன்னே!

[பெர்ஹாம்பூர் கல்லூரி உபதலைவர்

K. N. சுந்தரேசனார்]

(தரவு)

நேரமர்ந்தே அளவளாவி நேயமார்ந்த பேச்சறியோம்;
ஆராய்ந்து நீயிந்த அருநூலின் விருந்துகளைத்
தூரத்து வாசகனுய்த் துய்த்தபே றெனக்குண்டு;
'யாரிவனோ?' எனப்புலந்தே இகழாமல் அஞ்சலிலே
பேராசான் எனமதித்தே எளியனுக்கும் எழுதினை நீ!
நீராய்நீ உருக்குவதே! நெஞ்செனதில் பலகண்டேன்!

(தாழிசை)

நோயால்நீ துடிக்கின்றாய் எனக்கேட்டுத் துடித்தேனே
ஓயாஉன் உயர்பணியை ஒண்டமிழ்நா டிழந்ததற்கே! 1

தென்மொழிகள் முகவுரையால் தேம்பிவிம்மிக் குலைந்தேனே!
பொன்மதலை நாளிலேயே தாயைநீ இழந்ததற்கே! 2

"கலிப்பாக்கள் எழுதேல்நீ!" எனச்சொன்னாய்; மலைந்தேனே!
உலகத்தோர் பண்பினில்நீ உயர்வெண்ணம் இழந்ததற்கே! 3

(தனிச்சொல்)

ஆனால்,

(சுரிதகம்)

கோப்பெரும் புலமையோய், பூப்பிசிர் சூட்டியோய்,
மேங்குல"ரெட்டியார் வேங்கடராஜுலு!
நின்மாண் புறுநன் னெடும்புல வுழவினால்
பன்மொழித் தொகுதியும் இன்மொழித் தமிழும்
நுண்புலம் புதிதுற உதித்தனை என்றியான்
கண்ணிய செருக்கான், மறைந்தமை எண்ணிக்
கண்ணீர் வடித்தலும் மறந்தனென்! மன்னோ!

[பங்களூர், புலவர் தண். கி. வேங்கடாசலனூர்]

வெண்மைஒளிர் கலைமகளின் அருள்படைத்த
விறலுடையான், மேலோன், யார்க்கும்
தண்மைஒளிர் சால்புநிறை தகவுடையான்,
தமிழுள்ளம் படைத்த தூயோன்,
வண்மைஒளி வளம்பேணி நலம்பேணி
மாண்புமிக வாழ்ந்த நல்லோன்,
எண்மைஒளிர் பண்பொழுகும் இன்முகத்தான்
இங்கிலனே! எங்கே? எங்கே? 1

வேங்கடரா ஜுலுமேலோன் மிகவினியன்;
மெய்யன்புத் தந்தை யாவான்;
தாங்கவொணுத் துயரளித்தே உயிர்நீத்துச்
சாய்ந்திட்டான்! அந்தோ! அந்தோ!
வேங்கடத்தான் திருநாட்டை அலங்கரிக்க,
விண்ணவரும் பருகும் வண்ணம்
ஓங்குபுகழ்த் தமிழ்வழங்க, ஒண்புலவன்,
உயர்நாடு சென்ருன், கண்டீர்! 2

தமிழன்னை செய்ததவப் பயனுகத்
தமிழுலகில் வந்த சான்ருேன்,
சமுகரங்க புரம்பெற்ற தமிழண்ணல்,
சார்ந்தவர்கள் மறக்க வொண்ணு
அமுதனைய மொழிபேசுந் திருவுடையான்,
அறிவுடையான், ஆழங் காணுத்
தமிழ்க்கடலை மிகக் கடைந்து இலக்கணமாந்
தனியமுதம் தந்த வள்ளல். 3

அகத்தியர்தொல் காப்பியரும் நம்மிடையில்
அன்புருவாய்த் தோன்றி யாங்கு
மிகத்தூய தமிழ்வளர்க்கும் பணிசெய்த
மேன்மையனுய் விளங்க நின்ருேன்,

அகத்தாலும் புறத்தாலும் மாலன்பின்
ஆழிதனில் ஆழ்ந்து தேர்ந்து
இகத்தாலும் பரத்தாலும் மகத்தான
எழில்வாழ்வு வாழ்ந்தான் நன்றே! 4

திரவிடநல் மொழியனைத்தும் ஆராய்ந்து
சீர்தூக்கி உலகம் போற்றும்
தரமிகுந்த தமிழ்நூல்கள் பலவளித்த
தன்மையினைச் சாற்றல் ஆமோ?
உரமுடைய தமிழ்க்கவிதை உணர்ந்துணர்த்தும்
உண்மையினை ஒளிக்கப் போமோ?
வரம்பெற்ற பயன்பெற்றேம்! வளம்பெற்றேம்!
இன்றிழந்தோம்! வாடப் பெற்றேம்! 5

[ஈரோடு வேலம்பாளையம்,
புலவர் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்]

தென்றல்மணங் கமழுவளஞ் செறிசமுக
ரங்கபுரம் சிறப்பத் தோன்றி
நன்றுறுமெய்ப் புலமைகொளுஞ்
சகவீர பாண்டியனன் னுவ லோன்பால்
என்றுமுள தென்றமிழின் இலக்கணநூல்
முதலாய இனிதின் ஓர்ந்து
மன்றுடையான் மாமதுரைச் சங்கத்துப்
பண்டிதப்பேர் மருவப் பெற்றேய்! 1

செந்தமிழி னுடனுதித்த மலையாளம்
கன்னடம்நற் றெலுங்கும் கற்று
நந்தலிலாப் பெரும்புலமை தனைப்படைத்தாய்;
நாவலனே, நயக்கும் நின்சீர்

நந்தமர சினர் அறிந்து வித்துவான்
எனும்பட்டம் நல்கப் பெற்றாய்;
எந்தவுல கினை அடைந்தாய்! வேங்கடரா
ஜுலுப்பெரியோய், எம்மை நீத்தே. 2

சொன்னாட்டுஞ் சென்னை நகர்ப் பலகலைதேர்
கழகத்திற் சிறப்பத் தொண்டு
பன்னாட்டின் உலகறியச் செய்துதமிழ்ச்
சீர்த்தியெலாம் பரவச் செய்து
கன்னாட்டும் பெரும்புகழ்சேர் கபிலருடன்
பரணர் நூல் கருத்தின் ஆய்ந்து
உன்னாட்டும் நூல்கள் தமை உலகறியச்
செய்தனை நின் னுணரார் யாரே? 3

பாருலகில் நண்பன் எனப் பெரும்புலவர்
பலரிடம்நீ பரிந்து பேசும்
பேருடையேன், பரமபதத் திருமாலின்
அடிக்கமலப் பெருந்தேன் உண்ண,
சீருடையாய், உளம்விரும்பிச் சென்றாயென்
றதுகேட்டுத் திகைத்துக் கண்ணீர்
வாருறவே புலம்புகின்றேன்; துயர் நீக்க
நீவிரைந்து வாராய் கொல்லோ! 4

உடலின் நிலை சரியில்லை உனைக்காண
விழைந்தேனென் றுணர்ந்து விட்ட
மடலின் நிலை கண்டறிந்தேன்; நினைக்காணும்
வேட்கையுற்றேன்; மறலி என்னும்
அடல்கொண்ட கொடும்பாவி நின்னாவி
பிரித்துவிட்டான்; அந்தோ! அந்தோ!
மடங்கொண்ட கொடியோனைத் தருமன் என
உலகுரைத்தல் மதியே யாமோ! 5

மதிகொண்ட திருமுகமும், வளர் நுதற்கண்
விளங்குதிரு மண்ணின் காப்பும்,

துதிகொண்ட மலர்வாயின் சொல்லழகும்,
உபசாரத் துறையு மெல்லாம்
மதிகொண்ட ரெட்டியா ரையா,நான்
உனை என்று பரிந்து காண்பேன்!
விதிகொண்ட சதியுடையான் விதியெண்ணி
மனம்நொந்து மெலிகின் றேனே! 6

அண்டர்பாற் கடல்கடைந்திட் டமுதமெடுத்
தாற்போல, ஐயா, நீயும்
தண்டமிழின் இலக்கண நூற் கடல்கடைந்து
கண்ட அரும் பொருள்கள் தம்மை
மண்டலத்திற் புலவரெலாம் மகிழ்வெய்த
வழங்கியநின் வள்ளற் றன்மை
எண்டகுநூற் றமிழ்பயிலும் இளஞ்சிறு
ரும்போற்றும் இசைபெற் றுயே. 7

மண்ணுலகில் தமிழ்ப்புலவர் வறுமையினுல்
துயருறுமவ் வாட்டந் தீரப்
பண்ணுறுநுண் பொருள்விளக்கம் பகர்ந்ததனை
அரங்கேற்றும் பான்மை கொண்டு
விண்ணுலகிற் சென்றனையோ? விண்ணவர்கோன்
தருமனைத்தும் விரைந்து கொண்டு
நண்ணுநினைக் கவிஞர்குழாம் கண்டுகளி
கூரஎதிர் நணுகு வாயோ! 8

(வேறு)

சகம்சோக முறச்சோப கிருது வென்னும்
சமையதிலா வணித்திங்கள் இராறு புந்தி
மிகமேவு நவமியுறு கேட்டை நாளில்
வேங்கடரா ஜுலுப்பெரியோன் மேல தாகும்
ககம்மேவு சங்காழி கரத்தில் ஏந்தும்
கடவுளடி யிணைமலர்கள் கருத்திற் கொண்டு
மகம்மேவு தேவர்குழாம் மலர்கள் தூவி
வரவேற்கப் பரமபத வாழ்வுற் றுனே. 9

[சாத்தூர், புலவர் அ. ச. பாவநாசனுர்]

உழுந்துருள் பொழுதில் ஊசியின் நுனிபோல்
உணர்வினேர்க் கன்றியும், உலக்கைக்
கழுந்துநேர் அறிவின் எம்மனேர்க் கும்பல்
காவியத் துடனிலக் கணமும்
தொழுந்துதி பெறஅன் னவர்க்கு மேலாகச்
சொலும்படி உணர்த்துசற் குருவாய்
எழுந்தருள் மணியே! ஏழையேம் எம்மை
ஏங்கவிட் டேகினை யென்னே!

[கவிஞர் அ. கு. ஆதித்தர்]

ஓங்குபுகழ் சண்முகர்கள், உ.வே.சா.,
ராகவர்கள் உம்பர் உற்ருர்;
தாங்குவதற் குளன்இளைய மகன்எனவே
தளராத உள்ளங் கொண்டேன்;
ஏங்கவைத்தாய்! இம்பர்வாழ் வதைநீத்தாய்!
இழந்தகனல் இதயம் நொந்தேன்;
வேங்கடரா சுலுப்புதல்வ, விற்பனனே
சற்குணனே, வருத்தம் தீர்ம்மோ! 1

இலக்கணமும் இலக்கியமும் இருநிதியாய்
நீஈட்டி ஏமாப் புற்ருய்;
கலக்கரைநல் விளக்கெனநீ கற்கின்ற
மாணவர்க்குக் காவ லானுய்;
பலப்பலதென் மொழிதெளிந்து, ஒப்பிட்டுப்
பதிப்பித்துப் பகர்ந்தாய் உண்மை;
உலப்புற்ருய்! இனியொருவர் அத்தொழிலைத்
தொடர்ந்தியற்ற உளரோ இன்றே! 2

பள்ளிநூல் அவையத்தோர் பிள்ளைமையைப்
பாசத்தால் படித்துக் காட்டித்
தெள்ளியஎன் சீர் இயம்பத் தெளிந்தவர்கள்
துணிந்தவர்கள் தேரின் யாரே!
வெள்ளியஎல் லாம்பாலாய் இனிக்கூற
வழக்கியலே விஞ்சி நிற்கும்;
ஒள்ளியமுன் முறைஉரைத்தென் பழையநெறி
ஓம்பிவர உள்ளார் யாரே! 3

இருக்கின்ற என்மக்கள் எல்லாரும்
நீபெரியன் என்றே ஒப்பிச்
செருக்கற்ற முறைநின்றார்; தலைமகன் நீ
பதிவிட்டுச் சென்றாயாக,
உருக்குலைந்தேன்! மக்களெல்லாம் 'யான்பெரியன்,
யான்பெரியன்' என்றே கூறித்
தருக்குற்றுத் தான்தோன்றித் தம்பிரான்
ஆனார்கள்! தருமம் ஈதோ! 4

கொடுத்தறிவாய்; கொடுத்ததைநீ கேட்டறியாய்;
கொடுமைதமிழ்க் குற்ற காலை
இடித்தறிவாய்; இதமாக அறமுரைப்பாய்
யாவர்க்கும் இனியன் ஆனாய்:
படித்தபல வடநூல்கள் பழந்தமிழில்
கபிலருடன் பரணர் தந்தாய்,
விடுத்தொழித்தாய் ஆகுலத்தை; வியனெறியாம்
மாணவ,மேல் வாழ்வே கொண்டாய். 5

நாமத்தை நீமறவாய்; நற்றமிழின்
பலமொழியின் நயங்காட் டுன்றன்
நாமத்தை யார்மறப்பர்! மறந்தவர்கள்
நன்றிகொன்றுய் விலரே ஆவர்!
பாமணக்க நீபுனைவாய்; பழகுதமிழ்
உரைவரைவாய்; பாடஞ்சொல்வாய்;

ஊர்மணக்க நீவாழ்ந்தாய்; ஒருசொல்லும்
உரையாதே ஒளிக்க லாமோ ? 6

“ காகம்கா கம்பிகம்பி கம்” என்றே
ஆசுகவி பாடி உத்தி
யோகத்தின் தொடக்குற்ருய்; இணையில்லா
ஒருவன் எனும் ஏற்றம் பெற்ருய்;
நோகத்தான் பிறற்கொன்று நீஇயற்ரு
நோன்புடையை; இந்நாள் ஆங்கு
வேகும்பாழ் நெருப்பில்உடல் என எண்ண
என்நெஞ்சே வேகு தையோ! 7

‘ராதா[1]விஞ் சையர் ஆனேன்; வசந்தா நன்
மணம்பெற்ருள்; வைய வாழ்வு
போதாதோ’ எனஎண்ணிப் புறப்பட்டாய்
நீபோலும்! போற்றி நின்ற
மாதாவின் வயிறெரிய மற்றுள்ளார்
மனம்வருந்தப் போன தெல்லாம்
‘ஓதாயோ நீஎமக்’கென் றும்பர்நாட்
டவர் அழைத்தோ? உண்மை யாதோ! 8

திக்கெல்லாம் புகழ்சீமை நெல்வேலிக்
கோட்டத்துத் தென்பால் தோன்றி,
இக்கென நெல் வளர்சோழ நாடேகித்
தொழிலியற்றி இசையும் பெற்று,
மிக்கபல சான்ருேர்கொள் தொண்டைநாட்
டணிநகரை மேவி வாழ்ந்து
புக்கனை நீ பொன்னுலகம்! பெற்றதாய்
யான் இருந்து பார்ப்பேன் எல்லாம்!

1. விஞ்சையர் - எஞ்சினியர்.

[புலவர் நா. ஸ்ரீநிவாச முதலியார்]

நிலவுல கதனுள் நலம்பல மலிந்து
சான்ரே ருடைத்தெனுந் தகவுறு மொழியால்
நாவலர் போற்றிடும் நயமிகு தொண்டை
நாட்டினுக் கணியாய் நன்மைகள் பலவும்
மன்னிய புகழுறு சென்னையம் பதியினில்
நாடுறு செல்வ நலனெலாங் கடிந்தோய்,
வீடுமன் என்றே மிகுபுகழ் வேய்ந்தோய்,
கஞ்ச மலரே கண்ணென அமைந்த
அஞ்சன வண்ணன் இணையடி யேத்தும்
அஞ்சனை புதல்வனும் ஆகான் நிகரெனப்
பஞ்சேந் திரியப் பாழ்மயல் ஒழித்தும்,
அஞ்சிலக் கணத்தின் அமைதியை ஆய்ந்தும்,
பல்காப் பியங்களைப் பாங்குறப் பயின்றும்,
தொல்காப் பியத்தின் தொன்னெறி போற்றியும்,
செஞ்சொல் ஐயந் திரிபற உணர்த்தியும்,
நெஞ்சினில் நேர்மையை நிலைபெற வைத்தும்,
பன்னெடுங் காலமாய்ப் பாவலர் தமக்குத்
தென்மொழி கள்ளெனுந் தேடருந் தேனினை
நன்னய மாகத் தந்தருள் நாவல,
ஓங்கிய புகழ்பெறு வேங்கட ராஜுலு,
வேங்கடம் மேவிய விமலன் திருவடி
பாங்குடன் மேவினை எனுஞ் சொல் கேட்டே
நைந்தனென் உள்ளம்; நாடினென் மயிலையில்
'எந்தாய் எந்தாய், எங்குற் றனையென
சிந்தா குலத்தொடு சிந்தினென் கண்ணீர்!
என்குரு நாதா, என்னருந் தெய்வமே,
நின்பெரும் பிரிவினை என்னெனன் றுரைப்பேன்!
பண்ணேர் மொழியினுல் பாங்குற எனக்குத்
தண்டமி ழுமுதினைத் தந்தெனை ஆண்டனை;
பெறலருந் திருவாய் விளங்கிய பெரியோய்,
மறவா தென்னையுன் மனத்தினில் என்றும்

உறவாய்க் கொண்டெனை உயர்த்தினை மன்னே!
என்றுகாண் பேன்நின் எழிற்றிரு முகத்தினை!
என்றுகேட் பேன்நின் அருந்தமி ழமுதினை!
அருங்குணக் குன்றே, ஆருயி ரண்ணல்,
பெருஞ்சிறப் புடன்நீ பேரரு ளாளனுங்
கருங்கடல் வண்ணனின் கழலடி சேர்ந்தாங்
கிருஞ்சிறப் புடன்பே ரின்பமெய் துகவென்
றேத்துத லன்றிவே றென்செய வல்லனே!

[சேலம்—வேலூர், கவிஞர் S. K. இராமராஜனர்.]

தேங்கமழ்தண் டுளபமணி மாயற் கன்பன்
திருந்தியபன் மொழிப்புலவன் கலைஞர்கோமான்
வேங்கடரா ஜுலுப்பெரியோன் எம்மை நீத்து
மேலாய பரமபதம் எய்தி னனே!
ஓங்கியநற் கபிலரொடு பரணர் தம்மை
உலகிற்கு வழங்கியநற் புனிதக் கைகள்
தீங்குசெறி கனற்காட்டில் எரிந்த வோ!எம்
தெய்வத்தை இனிக்காண முடியா தந்தோ! 1

வண்ணமுறு தாமரைவாழ் கலைமா னுக்கு
மாண்புடைய தண்புறவாய், அரங்க னுக்குத்
தண்ணமுதப் பாற்கடலாய், அன்பி னுக்குத்
தகவார்ந்த கோயிலாய், எம்போல் வார்க்கு
விண்ணமிழ்தாய்ப் பொலிந்திட்ட புனித நெஞ்சும்
வெங்கனலில் எரிந்ததுவோ? ஐய கோ!எம்
அண்ணலைப்போல் இனியொருவர் பிறப்ப
துண்டோ?
ஆர்பொறுப்பார் இத்துயரம்? அந்தோ! அந்தோ!!

முல்லையினை நினைப்பூட்டும் இனிய பண்பு,
முந்நீரை வென்றோங்கிப் பரந்த கல்வி,
நல்லனவே பேசுகின்ற இனிய செந்நா,
நயத்தக்க நாகரிகம் பொதிந்த நெஞ்சம்,
வெல்லரிய ஆராய்ச்சி, கனிந்த பார்வை,
மேவியபன் னூற்றெளிவு, யாண்டும் என்றும்
எல்லையின்றிப் பொலிகின்ற நல்ல டக்கம்
எவரிடத்தில் இனிக்காண்பேம்? எம்பி ரானே.

வள்ளத்தோள் கவிக்கனியை அளிப்பார் யாவர்?
மகிழ்ரன்னன் கவிவீரம் பகர்வார் யாவர்?
தெள்ளுபுகழ்த் திக்கனன்சீர் புகல்வார் யாவர்?
திறற்கம்பன் கற்பனையை விரிப்பார் யாவர்?
விள்ளரிய கலைநயந்தேர் காளி தாசன்
மேலாய தனிப்பண்பை இசைப்பார் யாவர்?
கள்ளமிலா மயிலைமுனி மறைந்தான்! அந்தோ!
கலைமடந்தை இனியெங்கே இருப்பாள்? அம்மா!

கண்ணனைய புகழ்ச்சாமி நாத ஐயர்
கலைமணக்குஞ் சீராளர் நமச்சி வாயர்
புண்ணியனுர் வை. மு. கோ. முதலா உள்ள
புனிதர்களும் வியப்புற்ற புலமைத் தீபம்
மண்ணகத்தில் இருள்பரவ அவிந்த தேயோ?
மாமறலி, கற்பகப்பூஞ் சோலை தன்னை
எண்ணமின்றி எரித்தனையே! ஆங்கு வாழும்
இளங்குயில்கள் புலம்புதலை அறிந்தி லாயோ! 5

தித்திக்கும் அமுதளித்த ஆழ்வார் தங்கள்
சீர்வாய்ந்த கூட்டத்தோ? உலகம் உண்ட
வித்தகன்றன் பாதத்தோ? கலைம டந்தை
மேவியநல் லுலகத்தோ? ஞாலம் போற்றும்
சித்தர்சேர் விசும்பினுள்ளோ? கலைஞர் வாழும்
திறம்வாய்ந்த விண்ணகத்தோ? ஞானந் தந்த

பத்திமிகு நற்குரவன் அருளி னுள்ளோ
 பண்புடையான் புக்கொளித்தான், யாங்கள்
 வாட? 6

துங்கமுறு நாயகமே, கலைஞர் கோவே,
 சூழ்ச்சியினை அறியாத புனித நம்பி,
எங்கள்குலத் தனிச்சுடரே, எந்தாய்! எந்தாய்!
 எவருக்கும் சிறிதேனும் தீங்கெண் ணுத
தங்கமே, நின்றனையும் எரிப்ப தற்குத்
 தழற்கடவுள் எவ்வண்ணம் துணிந்த தம்மா!
அங்கங்கே சேர்த்திட்ட கலைகள் யாவும்
 அழிந்தனவோ? புகழுடலிற் புகுந்தவேயோ? 7

கற்பகமே, இலக்கணத்தின் வரம்பு கண்ட
 கலைமணியே, பொய்யறியாப் புனிதத்
 தோன்றல்,
பொற்புமிகு தனிச்சுடரே, எந்தாய்! எந்தாய்!
 புவித்தலத்தில் அனுபவித்த துன்பக் கோடை
நற்புகழ்சால் விரசையினில் மூழ்கி நீத்து
 நாரணன்றன் திருமார்பில் தழுவப் பெற்று
முற்படுநற் சாந்தியினைப் பெற்ருய்! பெற்ருய்!
 மூவாத முதலோடு வாழி! வாழி! 8

மன்னியநற் றமிழ்நாடே, நின்ற னக்கா
 மாண்புடைய நன்மொழிகள் பலப யின்று
தன்னலத்தை மறந்துயர்ந்த பணிகள் செய்த
 சான்ருேனைத் துயரத்தில் ஆழச் செய்தாய்!
நன்னிதியை அளித்தனையா? புகழ்சேர் சொற்கள்
 நவின்றனையா? அற்பருக்கு வாழ்வு தந்தாய்!
பொன்னுளத்தைச் சிதைக்காதே இனிமே லேனும்
 புண்ணியரைப் போற்றிடுக உலகம் வாழ. 9

[மயிலை, புலவர் இ. கிருஷ்ணராமாநுஜனுர்]

வேங்கட ராச விமலனே, அன்பே,
தீங்கவிப் புலவர்க்குத் திகழுநற் றுணையே,
வைணவர்ப் புரக்கும் வள்ளலே, நீதான்
ஞானமா கடலாம் வானமா மலையின்
சின்ன கலியனும் சீயர்தாள் தொடர்பினை;
விராவுசீர் அரங்கத்து விளங்குபாத் தியாயர்
ஏகாங்கி சாமிபால் இயற்றமிழ் முதன்முதல்
கற்றனை; புலமையால் கலித்தனை ஆல்போல்;
கலையறிவு உலகறிவு கலந்தபா லுரையினுல்
வைணவ மக்களை வளம்பெற வளர்த்த
புவன கிரிவாழ் புலவனே காங்கியாம்
அழகிய மணவா ளன்அருள் அடைந்தனை;
இங்கனம் பல்சீர் ஏய்ந்தநின் பிரிவை
எங்கனம் ஆற்றுவேம்! இன்றமிழ்க் கடலே,
ஆருனை வெறுத்தார்? அமுதமாம் ஆறே,
பாருனக் கேலாப் பான்மைதான் என்னே!
மண்ணவர்க் கறிவு மகிழ்ந்தளித் ததுபோல்
விண்ணவர்க் குதவநீ விரைந்தே கினையோ!
'மாதவன் அடியராய் மண்ணுல கிகந்துநல்
வேதவை குந்தம் விரைந்தடை வோரும்
அந்திம நினைவினை அகற்றலா கா'தென
முந்துநீ திண்மையாய்ப் பொழிந்தசொற்
பொழிவையும்,
'ஆழிசங் கிலச்சினை அளிக்குநல் லருந்தொழில்
மறையவர் தம்மொடு மாலடி யார்க்கெலாம்
ஒன்றுமென்' றெல்கா துரைத்தநின் உரையையும்,
'ஐம்படைத் தாலியை அணியுநல் மரபுதான்
அவனியில் வைணவம் ஆதியாய் உளதெனும்
உண்மையை விளக்கு'மென் றியம்பிய
உரையையும்,
அயல்நெறி யார்க்கும்நின் அறிவுநற் றுணையாம்

என்பதை விளக்க எழில்சீ புராணம்
நின்னுறு திறமையால் நேர்பெற் றதனையும்,
இலக்கணத் துறையில் இலங்குநின் திருத்தமாய்க்
குற்றுகர முதலாங் குறிக்கொள் ஆய்வையும்,
தென்னுட்டு மகார்க்குத் தென்னுட்டு வாசகம்
திறம்பட எழுதும்நின் சீரிய தொண்டையும்,
பல்கலைக் கழகத்துப் பலநாள் ஆற்றிய
தமிழ்மொழித் தொண்டையும் சாற்றுதல் எளிதோ!
பன்மொழிப் புலவ, பாலினும் இனியோய்,
பலதீங் கிழைப்பினும் பார்எனப் பொறுப்போய்,
அளவிலா நின்புகழ் அளக்கரின் மேலதாம்;
மடங்குமென் நாவினுக் கடங்குமோ அக்கடல்!
நின்னுறு பிரிவால் நிலைபெறு என்மனம்
கலங்கிக் கலங்கிக் கையற் றேங்குமால்!
ஆயினும், நின்றன் அமைதி கருதித்
திருமால் திருவடித் திருநிழற் கீழே
அமைதியும் தொண்டும் அடைவுடன் பெற்றுநீ
வாழ்கவை குந்தத்து வாழ்கென
வாழ்த்துதல் அல்லது வழியறி யோமே!

[தாமல், புலவர் வே. இராமலிங்க நாய்க்கர்]

கொடியன் மாதோ கூற்றுவன் ! உலகினில்
இளையோர் என்னுன், முதியோர் என்னுன்,
அறிஞர் புலவர் அரிய செய்பவர்
வறிஞர்க் கிரங்கும் வள்ளல் என்னுன்,
கொன்று குவிப்பன் கொடுந்தொழி லாளன்!
வைதும்; வம்மோ; வாய்மொழிப் புலவீர்,
வேங்கட ராஜுலு மேம்படு புலவன்,
கன்னடம் வடுகு கவின்மலை யாளம்
தென்றமிழ் வடமொழி பன்மொழிப் புலவன்,

நுண்ணறி வுடையோன், பண்பின்
உறைவிடம்,
பல்கலைக் கழகத்துப் பல்லாண் டுழைத்தோன்,
இலக்கியம் ஆய்ந்தோன், இலக்கணப்
பெருங்கடல்,
பரணர் கபிலர் வரலா றெழுதினோன்,
தொல்காப் பியமே பல்காப் பியங்கள்
சங்க விலக்கியம் நன்கா ராய்ந்தோன்,
கம்பர் தேவர் கவிகளில் விருப்பினன்,
கூர்த்த மதியினன், சீர்த்தி உடையோன்,
ஆய்ந்தருங் கட்டுரை அறிவுரை வழங்கியோன்,
சீபு ராணம் நேரிதிற் பதித்தோன்,
பண்டை உரையா சிரியர் பலரும்
கண்ட உரைகளை ஆழ்ந்து கற்றவன்,
புலவர் புரவலன், அரிய பண்பினன்,
வாய்மை யுடையோன், தாய்போல் அன்பினன்
மாணவர் அறிவினை மாண்புற வளர்க்கும்
தென்மொழி வாசகம் பன்மொழி யிலக்கணம்
வரைந்தோன், வரைநிகர் மாட்சியோன்,
ஆயிரம்
பிறைகளைக் கண்டு நிறைவாழ் நாளுடன்
நீடு வாழ்வன் என்றே நினைத்தனம்;
நல்ல புலவனைக் கொல்லத் துணிந்த
கூற்றுவன் கொடுமை சாற்றுந் தரத்ததோ!
என்றினிக் காண்பேம்! இன்னுரை கேட்பேம்!
தமியராம் தம்பி மருகி அண்ணி
பேரன் பேர்த்திக் கார்இனித் துணையே!
'வாசன் கம்பெனி' வளர்ப்பவர் யாரே?
என்செய் தும்மினி? யாம்எவண் செல்வமே!

[குடியேற்றம், புலவர் ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார்]

துறக்கம் புக்க தூயநற் றந்தாய்!
மறக்குமா நிலம்நும் மனப்பெருந் தூய்மை,
அன்பின் இருப்பிடம்! அருளின் பிறப்பிடம்!
அறிவும் ஒழுக்கமும் அடக்கமும் வாழிடம்!
திருமால் திருவடி மறவாத் திருவுளம்,
பெருமால் கெடுக்கும் அருமைத் திருவுரை,
பன்மொழிப் புலமையும் பால்மொழித் தமிழில்
நன்முறை இயம்பிய நல்லதோர் தொண்டுளம்,
அகன்ற திருவுளம் அனைத்தும் பெற்றுத்
தமக்கென வாழாத் தகைசால் பெரியீர்!
பேரன் பேர்த்திக் காவன புரிந்து
அண்மையில் முடித்தனிர்; அமைதி யுற்றனிர்;
சென்னை வரின்யாம் சேர்விடம் யாதோ?
தந்தையை இழந்த தன்மைய ரானேம்!
எந்தாய், 'திருமால் இணையடி எய்தி
என்றும் வாழ்கநும் இனியநல் லான்மா'
என்றே யாங்கள் இறைஞ்சுவ தல்லால்
எதனைச் செய்வோம்! எதனை நினைப்போம்!
நினைக்கும் பொழுது கண்ணீர் நிறையக்
கலங்குவ துண்டு; கதிமற் றென்னே?

[திருவத்திபுரம், புலவர் அ. தம்பிரானுர்]

மேவியசெந் தமிழ்க்குரவோன் மயிலை ஆசான்
சிவமுத்து விடுத்தந்த முடங்கல் கண்டேன்!
நாவலர்வேங் கடராசப் புலவீர், நீவிர்
நற்றமிழ்த்தாய் நனியேங்கச் சுற்றம் வாடப்
பாவியல்நற் றமிழுலகு பதைத்தே சோர்ந்து
பெருகுபுனல் விழிவாரப் பெருக்கி நோகத்
தாவியசே வடியிணையே குறுகித் தாவில்
திருநாடு சிறப்பிக்கச் சென்றிட்டீரே! 1

கடலகத்தின் வாசகத்தால் கல்வி யீந்த
நாவலர் நம் நமச்சிவாய நல்லோர் எங்கே!
திடமாகத் தனித்தமிழே வளர்த்தசீலர்
திண்ணுளமார் மறைமலையாம் அடிகள் எங்கே!
அடுக்குச்சொல் லழகினராம் ரா. பி. சேது
அழகுதமிழ்ப் பிள்ளைதாம் எங்கே! எங்கே!
கொடுங்கூற்றம் நுமக்கிழைத்த கொடுமை இன்று
கூறவொணுத் துயரத்தில் ஆழ்த்தும்மன்னே!

பன்மொழியால் மொழித்தொண்டு பரப்பி நாளும்
பாரிலுயர் தனித்தமிழின் செம்மை ஓர்ந்தே
இன்மொழியால் இனிதுரைக்கும் ஏந்தால், நும்போல்
இனியாரே எம்முடைய ஐயம் தீர்ப்பார்!
பன்மொழியின் வளந்துய்த்தாய், பாரில் நும்போல்
இன்றமிழின் ஏற்றங்காண் புலவர் யாரே!
இன்முகத்தால் ஒண்ணகையால் வருக என்னும்
இன்சொல்லைச் செவிகுளிரக் கேட்ப தென்றே! 3

[நாகர்கோவில் ஹிந்து கல்லூரி, தமிழ்ப்பேராசிரியர்

புலவர் சி. சுப்பிரமணியனுர்]

திருந்த முயலும் மாணவரைத்
திரும்பி வந்த அறிவோரை
விருந்தாய்க் கொண்டு விடளிக்கும்
வேங்கட ராஜுலு ரெட்டியாரை
மருந்தில் கூற்றம் வவ்வியதால்,
மாய வாழ்வின் மண்ணுலகில்
எருந்தை இழந்த நத்தம்போல்
எண்ணி ஏங்கி வாடுகின்றேம்! 1

எங்கும் நிறைந்த புகழாளர்
　　எளிமை கொண்ட பண்பாளர்
பொங்குந் தமிழின் அறிவாளர்
　　புதிய நல்ல கலையாளர்
தங்கம் போலுந் தகையாளர்
　　தம்மைக் கூற்றம் வவ்வியதால்,
வங்கங் கவிழ்ந்த வணிகன்போல்
　　வாழ்வை யெண்ணி வாடுகின்றோம்! 2

கன்னடம் தெலுங்கு மலையாளம்
　　கருதும் வடமொழி துளுவோடு
பன்னற் கரிய பலமொழியைப்
　　பழகு தமிழின் அறிவோடு
உன்னக் கற்றே உயர்வாரை
　　உள்ளில் கூற்றம் வவ்வியதால்,
அன்னை யிழந்த மகவேபோல்
　　அழுது புலம்பி வாடுகின்றோம்! 3

உயிராய் உழைப்பைக் கொண்டவரை
　　உண்மை இலக்கண வித்தகரை
அயரா துதவி யளிப்பவரை
　　ஆய்வின் அறிவு மிக்கவரை
உயர்வாய்ப் பலநூல் தந்தவரை
　　உருவில் கூற்றம் வவ்வியதால்,
பயிரை யிழந்த உழவன்போல்
　　பதைத்து நின்றே வாடுகின்றோம்! 4

அன்பின் உருவா யவர்க்கண்டோம்;
　　அறிவின் விளக்கா யவர்க்கண்டோம்;
இன்பின் மொழிநூ லவர்க்கண்டோம்;
　　இயனூற் புலமை யவர்க்கண்டோம்;
அன்பில் கூற்றம் அவர்க்கொண்டே
　　அருளு மின்றிப் போயினதால்!

என்பில் உயிர்போல் வெயில்நின்றே
எண்ணி யெண்ணி வாடுகின்றோம்! 5

உருவில் கூற்றம் உயிர்கொண்டால்
உழைத்த புகழும் மாய்ந்திடுமோ?
கருவில் பிறந்த உயிர்மாயும்;
கருணை யுள்ளம் மாயாது;
உருவில் கொண்ட உடல்மாயும்;
உயிருள் கொண்ட செயல்மாயா;
அருவாய் அமைந்த அவைவாழ
அருவோ டுருவாம் அவன்காக்க! 6

[யாழ்ப்பாணம், புலவர் மா. பீதாம்பரனார்]

வேங்கடராஜுலுப்பெயர்கொள் வித்தகனார்
விண்ணகத்துப் புக்க போதில்
ஓங்குபுகழ்த் தேவரெலாம் உளமகிழ்ந்தார்;
உலகத் துள்ளோர்
ஏங்கியிடி விழுந்ததென இரங்கிநின்றார்
இயல்வாய்ந்த மொழிகள் எல்லாம்
பாங்குடனே பயின்றபெரும் பண்டிதனார்
பாரகத்தை யகன்றா ரென்றே. 1

(வேறு)

பன்மொழிப் புலவன் என்கோ!
பரந்தபே ரறிஞன் என்கோ!
தென்மொழிச் செல்வன் என்கோ!
திருமொழித் திறலோன் என்கோ!
நன்மொழிப் பொருளைக் கண்டு
நவிலுநா வலவன் என்கோ!
என்குரு என்ன நின்ற
இயற்றமிழ்க் கடலை அம்மா! 2

(வெண்பா)

தொன்மைசெறி தொல்காப்
　　பியக்கடலோ தொல்லுலகில்
மன்னுகலை ஞான மருள்
　　மாமறையோ—சொன்னலமோ
சிந்தா மணியோ
　　சிலம்போ திருக்குறளோ
தந்தாய் தமிழுவக்கத் தான். 3

'அஞ்சலஞ்சல்' என்றுரைக்கும்
　　அன்புசெறி அஞ்சொலையே
தஞ்சமென எண்ணுந்
　　தமியேனைப்—பஞ்சிபடும்
பாடறிய விட்டகன்ருய்!
　　பண்டிதனே, பாரிலுள்ள
ஏடறிவார் உண்டோ இனி. 4

[துவாரகை, ஆசிரியர் அமுதனர்]

வித்துவான் வேங்கட ராஜுலு வித்தக,
புலவரும் அன்பரும் சுற்றமும் அலமர
மறைந்ததும் ஊனுடல்! மறையுமோ புகழுடல்!
இளமையில் இன்மையான் வருந்தினிர்! அம்ம!
கொடிது கொடிதே இளமையில் வறுமை!
ஆயினும்,
நுண்மாண் நுழைபுல முடைமை வறுமையோ!
பண்ணப் பணைத்த பெருநிதி யன்றே!
துளக்க மில்லாத் தூய்மன முடையீர்,
அன்புடன் அம்மான் ஆதர வளிக்க
அஃகி அகன்ற அறிவினை அடைந்தீர்;
எஃகும் கருவினில் திருவாய் இயைந்தது!

இலக்கியம் இலக்கணம் எழுத்தெணிப் பயின்றீர்!
ஏற்ற மிறைக்கையில் இலக்கண விதிகளை
காவியக் கவிகளைப் பாடம் பண்ணினீர்!
உழைப்பால் உயர்ந்த உத்தமர் நீவிர்!
பண்டித பரீட்சையில் வெற்றி பெற்றீர்;
'குலன் அருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவும் உயர்குணம் இனையவும்'
அமையப் பெற்றுநல் லாசிரி யராகிப்
பலபல பள்ளியில் பலரும் போற்ற
அரும்பணி யாற்றினிர்; அண்ணல், சென்னைப்
பல்கலைக் கழகச் சார்பில் பலநூல்
ஆய்ந்து பரணர் கபிலர் ஆகிய
நூலும் இணையில் நூல்தொல் காப்பியம்
எழுத்ததி காரவா ராய்ச்சியும் இயற்றினிர்;
காய்தல் உவத்தல் இன்றி ஆயும்
உமைப்போல் உரையா சிரியர் உளரோ!
சீபு ராணமும் சீர்பெற அச்சில்
ஏற்றி வெளியிட் டிசைமிகப் பெற்றீர்!
இலக்கணக் கட்டுரை எத்துணை! எத்துணை!
தென்மொழி நான்கு வடமொழி ஆங்கிலம்
இவற்றில் புலமை எய்தப் பெற்றீர்;
புலவர் போற்றும் புலவீர், ஏழ்பத்
தாண்டிவ் வவனியில் வாழ்ந்தே அரும்பொருள்
ஈட்டி இருங்கலை இன்னல் களைந்தீர்;
பழுமரம் நிழல்மரம் போன்று பல்லோர்
பயன்பல துய்ப்ப உதவினிர்; பலப்பல
பிணிகளால் நலிந்தீர்! பிறர்க்கென
வாழ்ந்தீர்;
தமக்கென வாழாத் தகைமை யோரே,
கலியுக வீடுமர், குணக்கடல், கடமையைச்
செய்து முடித்தே சேர்ந்தனிர் வீடே!

(வேறு)

அன்பறிவே அருள்எளிமை
அடக்கமெய்யே ஆராய்ச்சி
என்பவெலாம் புகலிடமாய்
இவ்வுருவை அடைந்தனவே!
முன்புநும்போல் ஒருமகவை
மொழித்தாயும் ஈன்றுளளோ?
பின்பொருகால், பெரும்புலவீர்,
யாமறியோம் பெறுவாளோ! 1

எப்பொருளை யார்யார்வாய்க்
கேட்டிடினும் தப்பாமல்
அப்பொருளின் மெய்ப்பொருளைக்
காண்பவரே அறிஞர்எனச்
செப்பியசெந் நாப்புலவர்
செம்மைசேர் இயலுக்கோர்
ஒப்பரிய இலக்கியமாய்
ஒளியுடனே விளங்குவிரே. 2

படியாத நூலில்லை;
பயிலாத உரையில்லை;
மடியாத உள்ளஞ்சேர்
மாண்புடையீர், தமிழகத்தில்
அடியார்தம் அடிவீழும்
நும்போல்வார்க் கண்டதில்லை!
அடியேங்கள் தவக்குறையால்
அகன்றனிர்நீர் எமைநீத்தே! 3

உண்மையினை உணர்ந்ததனை
உணர்த்திடுவீர்; ஒருசிறிதும்,
மண்முழுதும் அளித்திடினும்,
மறைத்துரைக்க மறுத்திடுவீர்;
எண்ணளவும் பொய்யுரையீர்;
பொய்ப்புகழை இகழ்ந்திடுவீர்;

தண்ணளியீர், தரணியினில்
    நும்போல்வார்க் கண்டிலமே!

தமிழ்ப்புலவர் கல்யாணர்
    கடலகத்தோர் தமிழ்க்கிழவர்
'தமிழ்த்தாயின் தலைமகனே',
    'தமிழ்காக்குந் தெய்வமே',
'தமியேன்றன் தம்பியே'
    எனமுறையே நுமைப்புகழ்ந்தார்;
இமியும்நாம் பாராட்ட
    இனியென்ன உரையுளதே! 5

தென்னாட்டுச் சமண்சமயத்
    தமிழ்ப்பெரியோர் செய்நன்றி
எந்நாளும் மறவாத
    இயல்புடையோர் எழில்மிகுந்த
பொன்னாடை போர்த்திநுமைப்
    பொலிகளிற்றின் மிசையேற்றி
நன்னாளில் சிறப்பித்த
    நற்செய்தி அறியார்யார்? 6

விருந்தில்லாச் சோறே
    மருந்தென்னும் மேலோர்
பொருந்துமுரை காண்பீர்,
    பொருட்செலவை நோக்கீர்;
வருந்தினருக் கீயுமதே
    வைப்புழியென் றென்றும்
அருந்தோழர் புலவரெளி
    யோர்க்களிப்பார் ஆரினியே! 7

நுண்ணுணர்வி னாரோடு
    கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே ஒக்கும்
    விழைவிற்றே என்பரால்;

அண்ணலே, புன் கோட்டி
கொள்வோர் அற்பர்காண்;
எண்ணிக் கழிவிரக்கங்
கொள்பயன் எவனந்தோ! 8

(வேறு)

காவிய மொன்றியற்றக்
கருதினீர் இசையோங்க;
பாவிநோய் அதற்கந்தோ
பகையாகித் தடுத்தனவே! 9

பொன்னுரும் முகப்பொலிவும்
புன்னகையும் புண்டரமும்
செந்நாவில் இன்மொழியும்
எந்நாளும் மறவோமே! 10

கய்களிலே ஏடுகொடு
கற்பதுவும் கடலெக்கர்ச்
செய்கரையில் இருப்பதுவும்
கண்ணிணைக்கண் சேர்ந்துளவே! 11

தினையனைய பொருளொன்றைச்
சிறியோர் தெரிவிப்பின்
பனையனைய தாக்கொண்டு
பாராட்டல் நும்பண்பே! 12

'என்பின்னோன் போல்தம்பி
எவர்க்குமிலை' என்றிசைப்பீர்;
அன்போமற் றறமேயோ,
அவர்தம்மைப் பிரிந்ததுவே! 13

பெயர்த்தி வஸந்தாவின்
பெருமணத்தைச் செய்வித்தீர்;
பெயரன்ரா தாவினுக்கு
மணஞ்செய்யாப் பெயர்ந்தீரே! 14

அகன்னகவே நட்டோர்
ஆலத்துடை யான்பட்டி
ஜகந்நாதர் மிகத்தளரத்
தணந்ததுவும் தகவாமோ! 15

வேண்டும்நாள் விருந்தோம்பக்
காத்திருக்கும் வி.பூதூர்
மாண்புலவர் வேங்கடசா
மிப்பிரிதல் மாண்பேயோ! 16

ஆணிப்பொன் னுயிர்த்தோழர்
அணிபுதுவை இராஜ
மாணிக்க வள்ளலைநீர்
மறந்ததுவும் அதிசயமே! 17

'சாமிசுவா மீ'யெனவே
சக்கரவர்த் தியையழைக்குந்
தேமதுர வோசையினிச்
செவிப்படுநாள் எந்நாளோ! 18

'கோவிந்தா' என்றழைப்பீர்
ஏவலனை; கோவலனுங்
கோவிந்தன் கூவிநுமைக்
கொளுங்காலங் குறுகிற்றே! 19

பல்லான்ற கேள்விப்
பயனுணர்வார் வியவும்
கல்லாதார் வாழ்வது
காசினியின் இயல்பேயோ! 20

(வேறு)

எத்துணைநோய் நுமைநலிந்த!
ஏந்தால், நும் வாழ்நாளில்
எத்துணையோ மருந்துவகை!
எத்துணையோ துன்பங்கள்!

'இத்தலத்தில் மருந்தில்லை;
என்செய்வோம்! இமையோர்வாழ்
அத்தலத்தில் உளதோ' என்
ஞராயச் சென்றனிரோ ! 21

(வேறு)

கற்றோர் புகழுங்
கலைக்குருசில், நுந்தம்மைப்
பெற்றோர்போல் காத்த
பெரியோர் நும்முடைய
முற்றறிவை மெச்சி
மொழிந்தார் எம்பியென்றே;
பற்றுள்ள மற்றவரைப்
பார்க்கப் பறந்தீரோ! 22

கண்ணன் கழற்கே
கருத்தீந்த சுந்தரரைப்
புண்ணியத்தின் வண்ணப்
பொலிவாநும் பொன்மகளை
அண்ணலைத்தாய் தந்தையரை
ஆங்குறையும் முன்னோரை
எண்ணினீர் ஏங்கியவர்க்
காணக் கடுகினிரோ! 23

'நண்பின் அரணாகி நம்மைப் புரந்தருளும்
முன்பன் புலவோர் முதல்முதலி யார்' எனவே
அன்பின் உரைப்பீர்; அவர்தம்மைக் காண்பதற்கோ
இன்பினீண் டேகினீர்? இயற்கலைக்கண் அரியேறே.

---

22. பெரியோர், டாக்டர் சாமிநாதையரவர்கள்.
23. சுந்தரர், சுந்தரராமானுஜ ஸ்வாமிகள்.
பொன்மகள், மகள் லக்ஷ்மிதேவி.
24. முதலியார், நமச்சிவாய முதலியாரவர்கள்.

சந்ததமும் நீர்பயின்ற தனிநூல்தொல் காப்பியத்துள்
வந்தடைந்த இடர்களைய வானுலகம் சார்ந்தீரோ?
செந்தமிழைந் திலக்கணத்தைச் செம்மையுறக்
கற்பதற்கே
இந்திரனும் அழைத்தனனோ? ஐந்திரமும் பயில்
வீரோ! 25

'எந்நாட்டு மக்களுந்தாய்
மொழிப்பற்றோ டிலங்குகின்றார்;
பொன்னேபோல் போற்றுகின்றார்;
தம்மொழியில் பேசுகின்றார்;
இந்நாட்டோர் தமிழ்மொழியில்
இம்மியுமே பற்றிலர்காண்!
உன்னாட்டை அடைகின்றேன்'
எனமால்நா டுற்றனிரோ! 26

'அறிதலிலே ஆர்வமிலை!
அருந்தமிழைக் கற்பதிலை!
செறிந்தமிகு அறிவினர்போல்
செகமெல்லாம் நடிக்கின்றார்!
நறுந்துளபத் திருமாலே,
நண்ணுகின்றேன் நினை'என்று
மறிதிரைசூழ் வையகத்து
வாழ்வைவெறுத் தேகினிரோ! 27

'பணம்பணம்என் றேமக்கள்
பரபரப்போ டோடுகின்றார்;
குணந்தெய்வங் கொள்கைகுறிக்
கோள்ஒழுக்கம் இலைஅந்தோ!
மணமற்ற வாழ்க்கையராய்ப்
பயனல்ல செய்கின்றார்;
அணலேநின் னடியடைந்தேன்;
ஆட்கொள்'என் றகன்றனிரோ! 28

இனிப்பிறவி யான்வேண்டேன்
இருள்தருமா ஞாலத்தில்
தனிப்பெரியோய் என்ருழ்வார்
பாடிடினும், தளராமல்
தனித்தமிழ்க்கண் நுமக்குள்ள
தனிப்பற்ருல் தண்டமிழ்நாட்
டினிப்பிறப்பீர், இயற்ரெண்டு
தொடர்ந்தாற்ற, எங்குருவே. 29

(வேறு)

பெருநூல்கள் ஆராய்ந்து பேருண்மை
பலவற்றைத் தெரித்த நம்பி,
அருளே,நல் லரணே,மெய் யன்பே,எம்
அருமருந்தே, ஐயா, நீரே
உருவேர்கொள் கடவுளர்போல் தமிழகத்தின்
பெருந்தேவாய் உறுதிசெய்யும்
பொருளேயாய் இடரொன்றும் புகுதாமல்
காத்தளிப்பீர், புலவ ரேறே. 30

[செந்தமிழ்ச்செல்வர் பேராசிரியர்
புலவர் பாலூர் கண்ணப்ப முதலியார்]

செந்தமிழ் மொழிக்குள சிறப்புப் பலவுள்
இலக்கணச் சிறப்பே ஏற்றமாம் என்றே
எந்நாட் டவரும் இசைவுடன் இயம்புவர்;
அத்தகை யிலக்கணப் புலமை தன்னில்
வெற்றி கண்ட வேங்கட ராஜுலு
தம்முடைப் புலமை தரணி அறிந்தது
சாலும் என்று தம்மனங் கொண்டு
விண்ணவர் தமக்கும் இலக்கணம் விளம்ப
நம்மிடைத் தணந்தது தாங்கொணுத் துன்பமே!

இறைவன் திருவுளம் இதுவெனக் கொண்டே
அன்னவர் ஆன்மா ஆண்டவன் அடிகளில்
சாந்தி பெற்றுத் தழைத்தினி திருக்கப்
பரமன் பதமலர் பரவுதும் யாமே.

[தஞ்சாவூர்—பள்ளியக்ரஹாரம்
புலவர் நீ. கந்தசாமி பிள்ளை]

சீராருந் தென்னகத்தின் திருமுகமாய்த்
திகழ்சைவ நெறியோ டிந்தப்
பாராரும் படிஇனிய பைந்தமிழின்
சீர்த்தியையும் பரப்புந் தூய
நீராரும் பேரறிஞர் நிரம்பவவ
தரித்ததிரு நெல்வே லிக்கண்
ஏரார்ச முகரங்க புரத்திடைநற்
றவத்தாலே உதித்த ஏறே, 1

வேங்கடரா சுலுவெனும்பேர் விளங்கவருந்
தொண்டாற்றி வீறு பெற்றாய்,
ஓங்கறிவால் இயங்குமொழி யுண்மைதெரி
நோக்குடைய உயர்ஆய் வாள,
பாங்குடையோர் பாராட்டும் பழகுதமி
ழினிமைமிகு பண்பு சான்றோய்,
தாங்கவொணாத் துயர்எமக்குத் தந்துதிரு
நாடடைந்தாய்; தகுமோ! ஐயா. 2

ஆன்றகன்ற கல்வியினால் அன்புருவாய்த்
திகழ்ந்ததனி அறிஞ ரேறே,
சான்றநிறை அடக்கமொடு தண்ணளிசேர்
தகைமையெலாம் சார்ந்த நின்னைப்

போன்றஒரு நடுவுநிலைப் புலவனையாம்
காணுதற்குப் போமோ! ஐயா,
ஈன்றதமிழ்த் தாயிரங்க, எம்மவர்கண்
ணீர்பெருக, பிரிந்த தேனே! 3

தென்மொழியும் வடமொழியும் திராவிடநன்
மொழிகளொடு தெளித்த செம்மால்,
பன்மொழிசால் பேரறிவால் பைந்தமிழிற்
பற்பலநூல் படைத்துத் தூய
நன்மொழியே பேசிஎமை நட்புறவால்
பிணித்துயர்ந்த நல்லோய், யாதும்
முன்மொழியா தெமைப்பிரிந்தாய்! மூதறிவிற்
கிதுதகுமோ, முறையோ, ஐயா. 4

நிறைகல்வி ஆய்வுடைய நெடும்புலமைச்
சால்பினரை நினையார் எங்கும்
பறைமுழங்கும் பண்பினரைப் பாராட்டக்
கண்டுமனம் பதைத்து நொந்தோம்;
முறைநிறுத்த முயன்றதமிழ் மூதறிஞ,
மெய்ப்புலமை முற்றி ஞரைத்
துறைதோறும் மதித்தவர்க்காம் உதவியொடு
துணைபுரிந்தாய்; மறவோம் யாமே. 5

'நான்றேடிக் கொணர்ந்ததமிழ் மாணிக்கம்'
எனச்சாமி நாதர் வாயால்
ஏன்றுடிச் சிறப்பித்த இயற்கலைஞன்
நீஎன்னின், ஏற்றங் காண்பார்
சான்றாக நின்மொழியைத் தம்வழக்கில்
சாற்றுதலில் வியப்பும் உண்டோ?
தேன்றாழும் மொழிபேசித் தென்றமிழை
வளர்த்தனை நீ; சென்றாய்! மன்னே. 6

புகழொடுவான் பொருள்வரவும் பாராட்டும்
பாராமல், பொதுவில் நின்று

துகளறநற் சொல்லாய்ந்து துலக்குமொரு
 பெரும்புலவ, தொல்லோர் நூலி
னகத்துறையும் இலக்கணத்தின் நுட்பமெலாம்
 ஆழ்ந்தாராய்த் தளித்த அண்ணல்,
இகலுடைய மாற்றாரும் எடுத்தேத்தும்
 மாண்புடையாய், மறைந்தாய் அந்தோ! 7

'திருஉறையும் நெடுமார்பன் திருவருளே
 சிந்தித்து வளர்த்த நின்றன்
அருமதியின் விளைவெல்லாம் அழகுறஈண்
 டொளிர்க! நிறை யமைதி மேவி
மருவினிய திருநாட்டுள் மாலினிரு
 மலரடிக்கீழ் வாழ்க' என்றே
உருகியுளம் கசிந்தழுது போற்றுதும்; ஆண்
 டென்றென்றும் உறைக! ஐயா. 8

[கலைமகள் ஆசிரியர்

புலவர் கி. வா. ஜகந்நாதன்]

இனிய தமிழின் விரிவுடனே
 இசைந்த ஆழம் கண்டுணர்ந்தோன்
நனிதன் தாய்மா மொழியாகும்
 நய ஆந் திரமும் கன்னடமும்
பனிநன் மலைநாட் டின்மொழியாப்
 பரவும் மலையா ளமுமறிந்தோன்
கனியும் மொழிவேங் கடராஜன்
 கடிதின் மறைந்தான்! இதுவென்னே! 1

தண்ணார் பாண்டி நாட்டினிலே
 சமூக ரங்க புரம்தோன்றிப்

பண்ணார் தமிழை நனியோதிப்
பாங்கார் புலவன் பண்டிதன் என்
றெண்ணார் புகழைப் பெற்றுயர்ந்த
இவனை அறியாத் தமிழ்ப்புலவர்
நண்ணார் எங்கும்; புலவோர்தம்
நண்ப னாகத் திகழ்ந்தனனே. 2

'முன்னம் குறிய வடிவத்தில்
முனியாய்த் தமிழை வழங்கியருள்
தென்னம் பொருப்பன் அகத்தியனே
திகழும் நெடிய வடிவத்தில்
மன்னு நின்றான், தமிழளிக்கும்
வண்ணம்' என்ன வரும்பெரியோன்
நன்னு வலவன் உயர்சாமி
நாதன் ஆசி மிகப்பெற்றோன். 3

தாண்ட வத்தோன் திகழ்தில்லைத்
தலத்தில் முன்னாள் மீனாட்சி
நீண்ட பெயரில் நிலவியஅந்
நிமிர்தண் டமிழின் கல்லூரி
கூண்ட மாணாக் கர்மகிழக்
குருவாய்த் திகழ்ந்த பெரும்புலவன்
ஆண்டுக் கற்றோர் இன்றுமவன்
அறிவைப் புகழ விளங்கினனே. 4

சென்னை நகரில் பல்கலையும்
திகழுங் கழகந் தனில்அறிஞர்
துன்னித் தொண்டு செய்தளித்துச்
சுடரும் தமிழ்ப்பே ரகராதி
முன்னர்ப் படைத்த புலவருளே
முயங்கி நலஞ்செய் பணிபுரிந்தான்;
பின்னர் ஆராய்ச் சித்துறையில்
பிறங்கும் பலநூல் உதவினனே. 5

[வேறு]

தீங்கட நின்ற திருமகள் கொழுநன்
திருவடி மறக்கிலாச் செல்வன்,
பாங்குறு தமிழ்நூல் ஆழமாய்க் கற்ற
பருணிதன், பிறமொழி பலவும்
ஓங்குறக் கற்றோன், காவிய மாஞ்சிந்
தாமணி உறைசுவை தெளிந்தோன்,
வேங்கட ராஜூ லுப்பெயர்ப் புலவன்
வியன்புகழ் பலபல அன்றே.

அன்னவன் றன்னை இழந்துறு துயரில்
ஆழ்ந்தவர் எத்துணை மக்கள்!
முன் அவன் பாலே பயின்றவர், நண்பர்,
மூண்டிடு குடும்பநல் லுறவோர்,
பின் அவன் நூலை நனிபயின் றோர்கள்,
பெரியவர் யாவரும் வருந்தி
'இன்னம்எங் கேநாம் காணுவம்' என்றே
இனைவுறப் புகழுடம் புற்றான். 7

அவன்அறி வதனால் படைத்துயர் நூல்கள்
அவன்நினை வதனை எந் நாளும்
நவமுற நமக்குத் தந்திடும்; அவன்றன்
நற்குணம் நினைப்பவர் என்றும்
புவியினில் அன்னோன் பழகிய நாளைப்
பொன்னெனப் போற்றுவர்; அவன்சீர்க்
குவையழி யாது; நூலழி யாவால்;
குணமெலாம் இனிமற வாவே. 8

UNIVERSITY OF MADRAS.

28—8—1963

This meeting of the teachers of the Language Departments, Oriental Research Institute, University of Madras, expresses its sense of deep sorrow at the demise of Mr. V. Venkatarajulu Reddiar, a former Lecturer in Tamil, and conveys the same to the members of the bereaved family.

SRI. V. R. RANGANATHA MUDALIAR,

(*Retd. Deputy Director of Public Instruction, Madras*)

Mr. Venkatarajulu Reddiar is an old friend of mine and I have known him for nearly forty years. I always respected him for his learning and character. He was always courteous and good-mannered in the old way.

SRI R. NARASIMHACHARI,

(*Asst. Headmaster, P. S. High School, Mylapore*)

Sri. Venkatarajulu Reddiar was one of those scholars who can be cited as an example of simple living and high thinking.

சென்னைமாநிலத்தமிழாசிரியர் கழகம்

8—9—63-அன்று நடைபெற்ற கழகக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம்:

"பன்மொழிப்புலவர் உயர்திரு. வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார்அவர்கள் இயற்கையெய்தியதுகுறித்து சென்னைமாநிலத்தமிழாசிரியர் கழகம் மிக வருந்தித் தன் ஆற்றாமையைத் தெரிவித்துக்கொள்ளுகிறது. அன்னாருடைய ஆன்மா இறைவனடி சேர்ந்து இன்புறுவதாக! தமிழ்த்தொண்டு வாழ்க!"

நீத்தார் வழிபாடு (8—9—63இல்) நிகழ்ந்தபோது

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையார் வாசித்தளித்த

பிரிவாற்றுமை இதழ்

புவிவாழ்வை நீத்த அண்ணலே,
எங்களைப் பிரிந்து எங்குச் சென்றீர்!

சிறப்பு மிகப் பெற்ற செந்தமிழ்நாட்டில் அறிவாற்றல்களிலும் முயற்சியிலும் சிறந்த நற்குடியில் இனிய மகவாய்த் தோன்றி, நலமுடன் வளர்ந்து, வளமுடன் வாழ்ந்து, சிறந்த பண்புகளுடனும், செம்மைசேர் அன்புள்ளத்துடனும், ஏழைகள்பலரும் பெருநலனடைந்து புகழ்ந்து வாழ்த்தும்வண்ணம், சிறந்து விளங்கிய அண்ணலே! அவனிமக்கள் பலரும் மகிழும்வண்ணம் விளங்கி, நாட்டுமக்கள்-

பால் பற்றுக்கொண்டு, அறிவறிந்த நற்செயல்கள் பல புரிந்து, நானிலம் போற்ற நல்வாழ்வு வாழ்ந்து-வருகையில், தங்கள் அன்பார்ந்த தம்பி திரு. K. V. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும், சுற்றத்தினர் பலரும் பிறரும் வருந்த, எங்களையும் பிரிந்து எங்குச் சென்றீர்!

அன்பும் அறிவும் நிறைந்த பண்பினீர்,

தாங்கள் நிலவுலகில் வாழ்ந்தகாலத்து மக்கள்—அனைவரும் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தும்வண்ணம் விளங்கிய தங்களைக் கண்டுகண்டு மகிழ்ந்தோம். தங்கள் பிரிவு எங்களுக்குப் பெருவருத்தம் தருகிறது.

தங்கள் குடும்பம் நாட்டுநலத்தில் கருத்துடைய குடும்பம்; குழந்தைகளே நாட்டின் செல்வங்கள் என்பதை உணர்ந்து, அவர்களது வளர்ச்சிக்குத் தேவையானவற்றைச் சிந்தை குளிரச் செய்யவல்ல குடும்பம்; எமது குருகுலத்தின்பால் என்றும் அன்பு-கொண்டு எங்கள் ஏழைக்குழந்தைகளை அன்புடன் வாழ்த்திவருங் குடும்பம். தாங்கள் புரிந்த நற்செயல்-கள் பலவாகும். 47 ஆண்டுகளாக நடைபெறும் வாலாஜாபாத் குருகுலத்தின்பால் தாங்கள் கொண்-டிருந்த பற்றினை எண்ணும் யாங்கள் தங்கள் பிரிவைக் குறித்துத் துயருறுகின்றோம்.

படைத்து அளித்து அழிக்கும் பரம்பொருளே,

தேவரீரது திருவருட்குறிப்பின்படி, எல்லா உலகங்களும், அவற்றில் வாழும் உயிர்வகைகளும் இயங்குகின்றன. இங்கு நடைபெறும் எண்ணில்லாத செயல்களுக்கு எங்களால் காரணம் தெரிந்துகொள்ள முடியவில்லை. இனிய பண்புகளும் தூய திருவுள்ள-மும் கொண்டிருந்த வித்வான் வே. வேங்கடராஜுலு

ரெட்டியார் அவர்கள் தேவரீர் திருவடிகளைச் சேர்ந்தார். அவரது ஆருயிர் தேவரீர் திருவடிமலர்களில் என்றும் தங்கி இன்புறுவதாக என்று தேவரீரை வேண்டுகின்றோம். இந்துமதபாடசாலையின் 1000 குழந்தைகள் சார்பிலும், வள்ளலார் இல்லத்தின் 850 சிறுவர்கள் சார்பிலும், தங்கள் பொன்னார் திருவடிகளைப் பணிந்து போற்றுகின்றோம்.

[ஸ்ரீமாந் என். ஸ்ரீநிவாஸாசாரியார்,

தலைமையாசிரியர், இராமகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி, தி. நகர்]

தமிழுலகில் இலக்கியவிலக்கணச்செல்வங்களுக்குக் கருவூலமாகவும் தமிழ்ப்புலவர்களின் ஆக்கத்திற்கு ஊன்றுகோலாகவும் விளங்கி, எம்பெருமானிடத்து அருதபத்தியும் நேரிய பண்பும் கொண்டு திகழ்ந்த வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்களின்மறைவு தெரிந்து யாமும், எங்கள் பள்ளியாசிரியர்களும் மிக்க துயர் உறுகின்றோம்.

நிலையாமை நிலை

[மதுரை, கவிராஜபண்டிதர் ஜெகவீரபாண்டியனார்]

அன்பர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் மிக நல்லவர்; இனிய இயல்பினர். அறிவு அடக்கம் அமைதி அன்பு பண்பு முதலிய நீர்மைகள் அவரிடம் சீர்மையாய் அமைந்திருந்தன. இளமையிலேயே

அவரை நான் நேரே காண நேர்ந்தேன். இலக்கணக்கலையை என்னிடம் கற்க விரும்பி, என்னை நாடி என் ஊருக்கு அவர் வந்தார்.

ஒட்டநத்தம் என்பது என் ஊரின் பேர்; மணியாட்சிக்கு வடகிழக்கே ஒருகல்தூரத்தில் உள்ளது. அங்கே வந்து, என்னைக் கண்டார்; தம் ஊர் சமூகரங்கபுரம் என்றும், என்பால் படிக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடே அங்கிருந்து வந்திருப்பதாகவும் உரைத்தார். அப்பொழுது அவருக்கு வயது இருபது இருக்கலாம். அவர்நெற்றியில் திருமண் தீட்டியிருந்தார்; பயபக்தியுடன் குழைந்து நின்றூர்; நன்னூலைக் கற்பிக்கவேண்டும் என்று வேண்டினூர். "இதற்குமுன் என்ன படித்திருக்கின்றீர்?" என்று கேட்டேன். "அந்தாதி முதலிய சிறுநூல்களைப் படித்திருக்கின்றேன்" என்றுகூறினூர்; திருவேங்கடமாலையிலிருந்து ஒரு வெண்பாவைச் சொன்னூர்; பொருளும் உரைத்தார். அவர் விரும்பியபடி கற்பிக்க இசைந்தேன். நன்னூலை முறையே பாடங்கேட்டார்; இடையிடையே வேறுசில நூல்களையும் படித்துவந்தார்.

சில மாதங்கள் கழிந்தன. அவருடைய தந்தையார் அங்கே வந்தார். அவர் சோதிடப்பயிற்சியுடையவர்; தம் மகனை அழைத்துப்போக வந்திருப்பதாக உரைத்தார். தொடங்கிய நூல் முடிந்திருந்தமையால், போகலாம் என்று குறித்தேன்.

மைந்தனும் தந்தையும் புறப்பட்டனர். விடைபெற நேர்ந்தபொழுது, குருவின் காணிக்கை என்று சிலபொருளை என்முன்னே வைத்து வணங்கினூர். "பணம் வேண்டா; நீங்கள் குணமுடன் வாழ்ந்தால் போதும்; இதை எடுத்துக்கொள்ளுங்கள்" என்றேன். அவர் மறுகினூர். "உங்கள் இருவர்செலவுக்-

கும் நான் கொடுத்ததாக இருக்கட்டும்; தயவுசெய்து இதைக் கொண்டுபோக வேண்டும்'' என்று வலியுறுத்தினேன். மாறுகூற அஞ்சி, அவ்வாறே செய்தார்; விடைபெற்றுச் சென்றார்.

ஐந்து ஆண்டுகள் கழிந்தபின், திருநெல்வேலியில் கணபதி விலாசக் கொட்டகையில் ஓர் உபந்யாசம் செய்யச் சென்றிருந்தேன். அக்கூட்டத்தில் அவர் வந்திருந்தார்; என்னைக் கண்டார்; அங்கே இந்துக்கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் பண்டிதராயிருப்பதாக உரைத்தார்; பின்பு பல இடங்களிலும் தமிழாசிரியராக அமர்ந்திருந்து முடிவில் சென்னைப்பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித்துறையில் அமர்ந்து பணிபுரிந்தார்; அதன்பின் ஓய்வுபெற்றுத் தனியேயிருந்து முயன்று பல புத்தகங்களை வெளியிட்டார்.

அவர் தம் வெளியீடுகளை எனக்கு ஆர்வத்துடன் அனுப்பியிருக்கிறார். அனுப்பும்போதெல்லாம் 'ஆசிரியப்பெருந்தகைக்கு' என்றே குறிப்பிடுவார்; மதுரைக்கு வந்தபோதெல்லாம் என்னை வந்து கண்டு ஆர்வத்துடன் உரையாடி மகிழ்வார். "அடியேன், அடியேன்'' என்று அடிக்கடி கூறுவது அவரது வழக்கம். வைணவமரபில் பணிவுடைமையும் பண்பாடுகளும் பரம்பரையுரிமைகளாய்ப்படிந்துவந்துள்ளன! அந்த உண்மைகளை அவருடைய உரைகள் துறைதோறும் முறையே உணர்த்திநின்றன.

தமிழ்மொழிக்கும் நாட்டுக்கும் அரிய அறிவுப் பணிபுரிந்து வந்த அவரைப் பிரிய நேர்ந்தோம். அவரது பிரிவுகுறித்துவந்த கடிதத்தைக் கண்ட போது என் உள்ளம் பெரிதும் வருந்தியது. பிரியமாய் இருந்தவர் பிரிய நேர்ந்தது பெரிய பரிதாபமாய்த்தோன்றியது! நிலையாமையே நிலையாக நிலைத்துள்ள

இவ்வுலகில் நிலையாய்க் காணவுரியதை நேரே கண்டுவருகின்றோம்.

நித்தன் என்பது இறைவன் ஒருவனுக்கே தனியுரிமையானது.

புதையல் உதவிய புலவர்

[அண்ணாமலைப்பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் பன்மொழிப்புலவர்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்]

வித்துவான் வேங்கடராஜுலு ரெட்டியார் அன்பே உருவானவர்; அறிவின் திட்பத்தில் சலியாதவர்; அடக்கமாய் வாழ்ந்து உயர்ந்தவர்; தமிழ்மொழியும் அறிவார்; வடமொழியும் அறிவார். தெலுங்கும், கன்னடமும், மலையாளமும் அவர் அறிந்த பலமொழிகளுள் சில. அவற்றின் உதவியால் கால்டுவெல் ஐயரைப் போல, அவரும் தமிழின் நுட்பத்தை நன்கு விளக்கினர். தமிழிலக்கணத்தின் உண்மைபல இதனால் அவருக்கு நன்கு விளங்கின. விளங்கியதை அவர் எழுதிவைத்துத் தமிழரை வாழவைத்தார். மொழிவெறி ஒருசிறிதும் இன்றி உண்மையை அறிவதிலேயே அவர் நாட்டங்கொண்டார். தெலுங்கிலும், கன்னடத்திலும் இத்தகைய ஆராய்ச்சி செய்துவந்த பெருமக்கள் அவரைப் பாராட்டி அவர் கருத்துக்களை அறிந்து போற்றி மகிழ்ந்ததை யான் அறிவேன்.

அவர் எழுதிய எழுத்துக்களத்துணையும் அவர் ஆராய்ச்சியின் ஆழத்தைக் காட்டுவன. தமிழில் எழுதுவது என்று தொடங்கினால், உயர்வுநவிற்சி எளிதில் வரும் என்பார்கள். ஆங்கிலம் முதலிய

மேனாட்டு மொழிகளில் வளர்ந்துள்ள வரையறைக்கு உட்பட்ட திட்பநுட்பமும், விஞ்ஞானப்பாங்கும் இந்தியமொழிகளில் எழுதும்போது எளிதில் அமைவதில்லை என்று பலர் கூறுவதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், திரு. ரெட்டியார் அவர்களுடைய தமிழிலே வியத்தகுமுறையில் தருக்கநுட்பமும் விஞ்ஞானவரையறையும் ஒவ்வொரு சொற்றொடரிலும் அமைந்திருப்பதைக் காணலாம். அவர் ஆங்கிலங்கற்றதால் இத்தகைய நுட்பத்தைப் பெற்றார் என்று கூறுவதற்கு இல்லை. அவர்க்கே சிறப்பாய் அமைந்த திறம் இது. பரிமேலழகர் சேனாவரையர்போன்ற பழைய உரையாசிரியர்களின் நடையில் பயின்றதன் பயனாக இத்திறம் அவர்க்கு அமைந்தது என்றும் கூறலாம்.

இயல்பாக அமைந்த அடக்கத்தினால், தாம் கண்ட உண்மைகளையெல்லாம் எழுதாது சிலவற்றைமட்டும் எழுதி முடித்தார்கள்; என்னுடைய வற்புறுத்தலின் பேரில் தென்னிந்திய மொழிகளைப்பற்றி எழுதியுள்ளார். அது ஒரு சிறந்த புதையல். இன்னும் விரிவாக அவர் எழுதவில்லையே என்பதுதான் என்னுடைய வருத்தம். தமிழ் வளரவேண்டுமானால், பிற திராவிட மொழிகளின் அறிவு தமிழர்க்கு வேண்டும். திராவிட மொழிகளுள் ஒன்றனைப் பேசுவோரே பிற திராவிடமொழிகளை அறியாமல் இருந்தால், அவர்கட்குத் திராவிடமொழிகளின் சிறப்பும் தனிப்பண்பும் எவ்வாறு விளங்குதல் கூடும்? எவ்வாறு பிறரிடையே பரவுதல் கூடும்? இதனாலேயே திரு. ரெட்டியாரைப் போன்றவர்பலர் தோன்றவேண்டும் என்று யான் அடிக்கடி ஆண்டவனை வேண்டிக்கொள்வது உண்டு.

தமிழ்நாட்டில் **அணியியல்** என்றால் தண்டியலங்காரம் போன்றவைகளையே நினைக்கிறோம்;

இல்லையானால், மேனாட்டு இலக்கியவாராய்ச்சிகளை எண்ணுகிறோம். இந்தியாவிலேயே வளர்ந்து ஓங்கிய சுவையாராய்ச்சியினைப் பலர் உணர்ந்தபாடில்லை. இந்தச் சுவையாராய்ச்சி, தமிழிலக்கணம் தோன்றியபோதே, தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. சுவை, இறைச்சி, உள்ளுறை முதலாகத் தொல்காப்பியர் கூறுவன இந்த ஆராய்ச்சியின் வித்துக்கள். இவை எவ்வாறெல்லாம் வளர்ந்து ஓங்கின என்பவைகளைக் காஷ்மீரில் தோன்றிய ஆனந்தவர்த்தனரது தொனிநூல்கொண்டு உணர்ந்து மகிழ்தல் வேண்டும். இப்படி உணர்ந்து மகிழ்ந்தவருள் நம் ரெட்டியாரும் ஒருவர். தாம் கண்டறிந்தவற்றை உலகமும் கண்டு இன்புறல்வேண்டும் என்ற உயர்ந்த நோக்கிலே பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

அவர் சிறந்த வைணவரானாலும், பிற சமயங்களில் வெறுப்பின்றி, உண்மையை அறிவதிலேயே நாட்டம் உள்ளவர்; வெறும்பற்றுக்காரணமாக ஒன்றனையும்வற்புறுத்துபவரல்லர்; சமணர் தமிழ்வளர்த்த வரலாற்றை விளக்குதற்குப் பெரும்பாடுபட்டவர்; ஸ்ரீபுராணம் என்னும் உரைநடைக்காப்பியத்தை அச்சேற்றி உலவிவர உதவியவர்; இஸ்லாமிய தமிழ்நூலாராய்ச்சிசெய்வார்க்கும் அவர் உதவியுள்ளார்.

அவர் பழமையில் மிக்க பற்று உடையவரானாலும், பழமையையே கட்டியழுபவரல்லர்; புதுமையில் தள்ளத்தக்கது எது, கொள்ளத்தக்கது எது என்பதனை நன்கு அறிந்தவர்; பதினோராந் திருமுறையில் வருங் கபிலர் சங்ககாலக்கபிலர் அல்லர் என்று விளக்கியுள்ளார்; பழைய நூல்களில் எழுந்த பாடச்சிதைவுகள்பலவற்றைக் காட்டியுள்ளார்; இந் நாளில் தமிழ்கற்போர் எளிதில் கற்கவேண்டும் என்ற எண்ணமுடையவர். ஆதலால், சந்திபிரித்-

துப் பழைய நூல்களை அச்சிடுபவர்க்குப் பெருந்துணையாக நின்ற பழம்பெரும்புலவர்கள்மிகச் சிலருள் அவர் ஒருவர். ஆனால், அவர் எல்லாவற்றையும் பிற்காலத்தன என்று கூறவேண்டும் என்ற வெறிகொண்டவர் அல்லர். தொல்காப்பியம் மிகப் பழையது என்று தாம் கண்ட உண்மையை, தம் அலுவலகத்தில் மேற்பார்வையாளராக அமைந்தவர் ஒத்துக்கொள்ளாதபோதும், அஞ்சாது கூறிவந்தவர்.

இன்னும் பலப்பல கூறிக்கொண்டு போகலாம். மேலும் எவ்வளவோ அவர் தமிழ்நாட்டிற்கு எழுதி உதவியிருக்கலாம். ஆனால், தமிழ்நாடு அத்தகைய நூல்களை எதிர்கொள்ளும் நிலையில் இல்லை! தொண்டே தம்முடைய வாழ்க்கையின் போக்காகக் கொண்ட அவர் மறைந்துபோனார்; திருமால் உலகம் சேர்ந்தார். அவர் எண்ணம் தூயது; தெய்வத்தன்மை உடையது; ஆதலால், அது வெல்லும். அவருடைய நூல்கள் நின்று நிலைபெறும்.

வாழ்க ரெட்டியார் தொண்டு !
வாழ்க தமிழ் !!

என் குருநாதர்

[காஞ்சிபுரம் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயத்து குருமூர்த்திகள் ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்*]

உயர்திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த சமூகரங்கபுரத்தில் குலநலம் முதலிய பலவும் உடைய பரம்பரையில் தோன்றியவர்; தொடக்கப்பள்ளியை

*(புலவர் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்)

வைத்து அப்பக்கத்துப் பிள்ளைகட்கு அறிவுவளம் பெருகச்செய்த ஞானதானவள்ளலாக விளங்கியவர்; பரம்பரையாகத் தமிழ் பயின்றுவந்த குடும்பத்தில் பிறந்ததால், தமிழை வளர்த்துக்கொள்ளத் திருநெல்வேலிக்கு வந்து, தமிழ்ப்புலவர் சிற்சிலரிடம் கற்றுவந்தார். பின்னர், அங்குள்ள இந்துக்கல்லூரி-உயர்தரப்பள்ளியில் தமிழாசிரியராக இருந்து கற்பித்தார்.

சிதம்பரத்தில் 1924 — 25-இல், புதியதாக 'ஸ்ரீ மீனாட்சி ஓரியண்டல் பண்டிட்ஸ் டிரெயினிங் காலேஜ்' தோன்றியதை யறிந்து, அதிற் சேர்ந்து பயின்றார்; அப்போது அங்குத் தமிழ்க்கல்லூரிமுதல்வராக இருந்த மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர் அவர்களின் தொடர்புற்றார்; அவர்களது தமிழாராய்ச்சியில் ஈடுபட்டுத் தொண்டுசெய்தார். அப்போதுதான் சங்கரநமச்சிவாயப்புலவர் எழுதிய நன்னூலுரை முதன்முதல் வெளியானது. அது நம் ரெட்டியாரவர்களது புலமைத்திறத்தால் சிறந்து விளங்கிற்று. அப் பதிப்பின் முகவுரையில் இவ்வுண்மை புலனாகும்.

பின்னர் இருபெருஞ்செல்வராகவும் புலவர்க்கும் புரவலர்க்கும் நல்லுதவியாளராகவும் விளங்கிய கா. ரா. நமச்சிவாய முதலியாரின் நட்புப்பெற்றார். சென்னையில் அப்போது நடந்த 'லெக்ஸிகன்' அகராதி வேலையில் இடம்பெற்றார். பிறகு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழாராய்ச்சிப்பிரிவில், ஆங்கிலம் அறியாத் தீங்குக்குரிய தண்டனைக்குட்பட்டு, தனித்தமிழ்ப்புலவர்க்குக் கிடைக்கும் ஒதுக்கிடம், அதன் தலைவரது கடைக்கண்ணோக்கால், கிடைக்கப் பெற்றார். ஆங்கு, வேறு எவரும் செய்யாத தமிழாராய்ச்சியின் பயனாகப் பல நூல்கள் அக் கழகத்தின் வாயிலாக வெளிவந்தன. ஏனையோர்

செய்து வெளியிட்ட ஆராய்ச்சிநூல்களாக யாவரும் கண்டதாகக் கேட்டதாகக் கூறக் கேட்டிலேன். தமிழில் இலக்கணக்கட்டுரைகளாக அப் பல்கலைக்-கழகத்திலிருந்து வெளிவந்த சஞ்சிகையில் பலபல எழுதி உதவிய மாண்பு நம் ரெட்டியாருக்கே உண்டு.

ரெட்டியாருக்கு ஆறுமொழி தெரியும். வடமொழி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்னும் ஐந்திலும் புலமையுடையவர்கள்; பின் நான்கிலும் பெரும்புலமை வாய்ந்தவர்கள். அவர்க்கு ஆங்கிலத்திலும் எழுதப் படிக்கத் தெரியும்; நல்ல இலக்கண-ஞானம் ஆங்கிலத்திலும் உண்டு. அவர் எனக்கு 1925—26முதல் ஆசிரியராக இருந்து, தமிழ்ஞானச்-செல்வத்தை வாரிவாரி வழங்கிய குருநாதர். என் கடிதம் அவர்க்குத் தனிக்களிப்பை அளிக்கும். அவருடைய திருமுகம் எனக்குத் தனியுணர்வைத் தோற்றும். எனக்குள்ள சொல்லாராய்ச்சிப்புலமை-யும் இலக்கணப்புலமைநுட்பமும் அவரது தமிழுறவு தோன்றிய நாள்முதலாக, என்பால் அவர்க்கு மிக்-குள்ள அன்பால், கிடைத்த ஞானப்பேறுகளாகும். அவரிடமிருந்து பொருளுதவியும் எனக்குப் பெரிதும் கிடைத்தது.

என்னால் புதிய தமிழ்ப்புலவர்தொடர்பு அவர்க்குக் கிடைத்ததென்று சொல்லி இன்புறுவார். எனினும், அவரால் எனக்குப் பழந்தமிழ்ப்புலவர்-தொடர்பு கிடைத்தது. அவர்க்கும் எனக்கும் இருந்த குருசீடருறவைச் சிலரே நன்கு அறிவர். வித்துவான் வே. ஐயா நாய்க்கர், வித்துவான் நா. சீநிவாச முதலியார், வித்துவான் சார்ங்கபாணி ஐயங்கார் முதலிய சிலர் பண்டுமுதல் இன்றுவரை அவ்வுறவை அறிந்தவர் ஆவர்.

அவர் மண்ணுலகவாழ்வை நீத்த காலத்தில் நான் சென்னையிலிருந்தும், உடனிருந்து நன்றிக்கடனாற்றும் பேறு பெற்றிலாதேன் ஆனேன்! அதற்கு என் புதிய (துறவு) நிலையே தடையாயிற்று. ஆகவே என்னை யானே வெறுத்துக்கொள்ளலானேன்.

ஆசிரியர் ஆவி அமைதியுற்று விளங்குக!

எழுத்தெண்ணிப்படித்த பெரும்புலவர்

[சென்னை கிருஸ்தவக்கல்லூரி, தமிழ்த்துறைத்தலைவர்

திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார்]

திருவாளர் வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், வடமொழி முதலிய மொழிகளில் புலமைபெற்று விளங்கினர். அவர் தமிழ் இலக்கியவிலக்கண நூல்களை எழுத்தெண்ணிப் படித்த புலவர். அத்தகைய புலமை மிக்கவர் தமிழ்நாட்டில் தற்போது ஒருசிலரே உளர். திரு. ரெட்டியார் அவர்கள் வைணவஇலக்கியங்களை நன்கு அறிந்தவர். அவர் 1927-ஆம் ஆண்டு முதல் 1947-ஆம் ஆண்டுவரை சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித்துறையில் விரிவுரையாளர் பதவியில் இருந்து பல அரிய ஆராய்ச்சிநூல்களை வெளியிட்டுப் பொன்றாப் புகழ் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ஆராய்ச்சித்துறைத்தலைவர்களாக விளங்கிய திரு. S. அனவரதவிநாயகம் பிள்ளை, திரு. S. வையாபுரி பிள்ளை, திரு. R. P. சேதுப்பிள்ளை முதலியோர் ரெட்டியார் அவர்களின் புலமையைப் பாராட்டியுள்ளனர்.

திரு. ரெட்டியார் அவர்கள் இயற்றிய 'கபிலர்' 'பரணர்', தொல்காப்பியம்-எழுத்ததிகாரவாராய்ச்சி, 'தென்மொழிகள்' முதலிய நூல்களில் பொதிந்துள்ள அரிய பெரிய ஆராய்ச்சிக்கருத்துக்களைத் தமிழ்நாடு நன்கு பாராட்டியது. திரு. ரெட்டியார் அவர்களிடம் அறிவுடைமை, ஆள்வினையுடைமை, அடக்கமுடைமை முதலிய பண்புகள் விளங்கின. தமிழ்மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் 'தென்மொழிக்கட்டுரை' என்ற ஒரு நூலினைத் திரு. ரெட்டியார் அவர்கள் 1962-ஆம் ஆண்டில் வெளியிட்டார். அதில் பல அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இத்துணைப் புலமைநலத்துடன் விளங்கி, அடக்கத்தோடு தமிழ்த்தொண்டு ஆற்றிய திரு. ரெட்டியார் அவர்களின் புகைப்படமொன்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் திறந்துவைக்கப்படல் வேண்டும். அவரது பெயரால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பரிசு ஏற்படுத்துதல் பொருத்தமாகும். அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தாலும், அவருடைய ஆராய்ச்சிநூல்கள் நமக்கு வழிகாட்டிகளாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. திரு. ரெட்டியார் அவர்களின் புகழ் விளங்குக!

நம் குலவிளக்கு

[திருப்பதி, திருவேங்கடவன் பல்கலைக்கழகத்
தமிழ்த்துறைத்தலைவர், பேராசிரியர்,
திரு. ந. சுப்பு ரெட்டியார்]

பன்மொழிப்புலவர் உயர்திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்களை நான் 1943-இலிருந்து

அறிவேன். அப்பொழுது அவர்கள் மயிலாப்பூரில் வாழ்ந்துவந்தார்கள்; யான் துறையூரில் இருந்தேன். அவருடைய ஆழ்ந்த புலமையும், எளிமையாகப் பழகுந் தன்மையும், அடக்கமும், என் உள்ளத்தைக் கவர்ந்து, என்னை அடிமையாக்கிக்கொண்டன. யான் கடந்த இருபது ஆண்டுகளாக அக் குருநாதன் இட்ட பணிகளையெல்லாம் உவப்புடன் நிறைவேற்றிவந்தேன். அவருடைய வாழ்க்கை எனக்கு ஒருகுறிக்கோளாக அமைந்தமையால், என்னிடம் தமிழ்த்தாயும் வந்து குடிகொண்டாள்; வேறு துறையில் ஆற்றிவந்த என் பணியையும் தமிழ்த்துறைக்கு மாற்றிவிட்டாள்.

பேராசிரியர் திரு. ரெட்டியாரவர்கள் திருந்திய உள்ளத்தை திருமாலடிக்காக்கியவர்; அவருடன் நன்கு பழகியவர்கள் இதனை அறிவர். சேவையைத் தமிழ்மொழிக்காக்கியவர். அவருடையநூல்கள் யாவும் இதனைப் பறைசாற்றும். பொருந்திய அமுதை ஆர்வலர்க்காக்கியவர். கடலகத்தில் வாழ்ந்த தமிழறிஞர் கா. நாமச்சிவாய முதலியாருக்குப்பிறகு, அவருடைய இல்லம் தமிழ்ப்புலவர்களின் புகலிடமாக அமைந்தது. அவரால், டாக்டர் மு. வரதராசனர், பேராசியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை, டாக்டர் முகமது ஹுசேன் நயினர் (அரபுமொழிப்புலவர்), புலவர் ஐயா நாய்க்கர், புலவர் சார்ங்கபாணி ஐயங்கார், புலவர் கோதண்டராம முதலியார், புலவர் நா. சீநிவாச முதலியார், காலஞ்சென்ற புலவர் பூவராகம் பிள்ளை முதலிய பெரியோர்களின் நட்பு எனக்குக் கிடைத்தது. அவருடைய பொருளுதவியைப் பேதையரும் அடைந்தனர்; மேதையரும் பெற்றனர். ‘அடக்கம் அமரருள் உய்க்கும்,’ என்றபடி, அவர் புலமையை அடக்கத்திற்கு ஆக்கியவர்; குறைகுடம் போன்ற செருக்குடைய புல-

வர்கட்கு, நிறைகுடமாய் நின்று, ஒரு சிறந்த வழி-காட்டியாக இருந்தார்; மருந்தெனுங்கருணையை எம்மனோர்க்காக்கி, மனத்துறவெய்திய பெரியார் ஆவர். அவருடன் சிறிது நேரம் உரையாடுவதாலேயே, பலசெய்திகளை அறிந்துகொள்ளலாம்; பல ஆராய்ச்சித்துணுக்குக்களைப் பெறலாம். தமக்கென வாழாது பிறர்க்கெனவே வாழ்ந்த பெருமான் அவர்.

மூன்ருமாண்டில் தந்தையை இழந்த எனக்கு, 'தந்தையிழப்பு' என்பது இன்னதென்று தெரியாது. இருபது ஆண்டுகளாக அவர் எனக்குத் தந்தை-போலிருந்துவந்தமையின், அ∴து இன்னதென்று இப்பொழுது எனக்குப் புலனுயிற்று. தந்தைக்குச் சேவைசெய்யும் வாய்ப்பு அவரது கேண்மையால் எனக்குக் கிட்டியது. அவர்வாழ்நாளின் இறுதிக்-காலத்திலும், இரண்டு தடவை, மூன்று மூன்று நாட்கள் அருகிலிருந்து, இறுதிவரை சேவைசெய்யும் பேறுபெற்றேன். இதனுல் என் வாழ்க்கை பல்லாற்ருலும் புனிதமாயிற்று! அவரது பருவுடலாந் திருமேனி திருநாட்டை அலங்கரித்துவிட்டாலும், அவருடைய புகழுடல் நம்முன்னிருந்து, 'என்குலம் எனக்குத் தந்தான்' என்று அனுமன் கூறியதுபோல், நம் குலவிளக்காக (பிறந்த குலம் அன்று, புலவர்குலம்) அமைந்து, நமக்கு வழிகாட்டியாக இருந்துவரும் என்பதில் ஐயமில்லை.

—

பண்பின் கொள்கலம்

(சீர்காழி, வித்துவான் K. ரங்காசாரியர், M.A., B.T.)

உயர்திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்-கள் அல்வழக்கொன்றுமில்லாப் பெரியார்; ஸ்ரீவைஷ்-

ணவர்; தென்மொழிகளின் இலக்கியநயத்தோடு இலக்கணத்திட்பநுட்பங்களையும் உணர்ந்த புலமை-யினர்; நுண்மாண் நுழைபுலம் மிக்கவர் என்பது இவர்-மாட்டு முகமனுரையன்று. இப் பெரியார் காய்த-லுவத்தலின்றி உண்மைகாணும் தகைமையினர்; பொருள்சேர்ந்த புகழினர்; காட்சிக்கெளியராய், அன்பின் திருவுருவாய், யாவர்மாட்டும் பரிவினராய், நனிநாகரிகராய்த் திகழ்ந்தவர். இவர்தம் மறைவு நம்மனோருடைய தீப்பேறுகும்.

அவர் நட்பென்னும் கெழுதகைமைக்கு உப்பாய் அமைந்த பெற்றியர்; என்மாட்டுள்ள அன்பின் காரணமாய், எனக்கு உற்ற ஆசானுய், என்னை ஆட்கொண்ட அறிவுத்தந்தையாவார். 'ரங்காசாரி' என்று எழுதிவந்த என்னை, 'ரங்காசார்யர் அன்றி ரங்காசார்யன் என்று எழுதுதலே முறை' என்று திருத்திப் பேணினுர். இன்னோரன்ன பல.

ஆற்றிற்கு அரண்செய்யும் இருகரைபோன்றது இலக்கணம் என்று கருதிய அன்னுர், கரையானது ஆற்றின் போக்கை நேர்ப்பாதையில் தண்ணென்ற ஒழுக்கம் கெடாது காப்பது போல், இலக்கணம் மொழியைத் திருத்திப் பேணல் வேண்டும் என்று பல்காலும் வற்புறுத்தினுர். தமிழின் வேலியொன்று, அந்தோ, இதுபோழ்து அகன்றது! அவர்தம் மொழி-யறிவையும் இலக்கணவழியையும் தமிழ்நாடு முற்றும் பெறுது இழந்ததோ என்று அஞ்சுகிறேன். கற்றோர் ஏங்கி ஏங்கி உள்ள, அவர் பிரிந்தார்மன்!

அவர்பெயர் சிறக்க! அவர்வழி பல்குக! வேங்-கடராஜுலுப்பெயர்பாடி, அவர்குணம் பாடி, தமிழை வளர்ப்போமாக.

———

(திருவாளர் ரா. வே. ருத்ரப்பசாமி நாயுடுகாரு,
D. E. O., Nagercoil)

உயர்திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்களது வெள்ளைமனமும் ஆழ்ந்த அறிவும் பண்பும் என்னை ஆட்கொண்டன. அவர்களது ஆத்மாவால் பயனெய்தியவருள் நானும் ஒருவன். அந்தப் பயன் எனக்கு என்றும் கிடைத்துவரும். ரெட்டியாரவர்கள் நம்மனைவரையும் சேர்த்துவைக்கும் உயிர்த்துணைவராக இருந்ததுபோல், இனிமேலும் இருப்பார்களாக.

(திருவாளர் ரா. தேசிகன்,
கல்விக்கழகம், புதுச்சேரி)

முதுபெரும்புலவர் ரெட்டியாரவர்கள் தமிழ்மொழிக்கும் தமிழ்மக்களுக்கும் ஆற்றிய அருந்தொண்டு எவர்மனத்தையும் விட்டகலாது. நகைமுகங்காட்டி, இன்சொல்இயம்பி அன்புசெலுத்தி எவரையும் மகிழ்விக்கும் அவர்களது சீரிய பண்பை நினைக்குந்தொறும் நெஞ்சம் நெகிழ்கிறது. அவர்கள் மறைவு தமிழுலகத்துக்கு ஈடுசெய்ய இயலாத ஒரு பேரிழப்பாகும்.

(திரு. ரா. விசுவநாத ஐயர்,
உ. வே. சா. நூலகம், அடையாறு)

கல்விப்பெருக்கிலும் குணச்சம்பத்திலும் வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கட்கு இணையாக எவரையும் காண்பதரிது.

(விழுப்புரம், புலவர் ந. ஆறுமுகனார்)

தெய்வத்திரு. வித்துவான் வேங்கடராஜுலு ரெட்டியாரவர்களை 1926-இல் சிதம்பரம் மீனாட்சி தமிழ்க்கல்லூரியில் ஆசிரியராகப் பெற்ற அன்று-முதல் இன்றுவரை அவர்கள் என்னிடம் குறையாத அன்பும் ஆதரவும் கொண்டவர்கள். அவர்கள் இன்சொல்லும் எளிய தோற்றமும் இயல்பாகவே வாய்க்கப்பெற்றவர்கள்; குழந்தையுள்ளம் படைத்த-வர்கள்; இன்னார் இனியார் என்னாது, எவரிடமும் ஒருசேரப் பழகும் பண்பிற் சிறந்தவர்கள். பொது-வாகச் சமயப்பற்றுள்ளவர்; சிறப்பாக வைணவசமய சம்பிரதாய முறைநூல்களை நன்கு ஓதியுணர்ந்து கடைப்பிடித்து ஒழுகுபவர். சிறந்த தமிழ்இலக்கண-விலக்கிய நூல்களில் ஆராய்ச்சிவல்லுநர்; பெருந்-தகை நல்லாசிரியர். அவர்களுடைய பிரிவு நமக்கு ஈடுசெய்யமுடியாத ஒன்று ஆகும்.

(புலவர் ம. சாமிநாத கவுண்டர், பொள்ளாச்சி)

உயர்ந்த புலமையும் இறைவழிபாடும் அமைதி தவமும் நல்நெஞ்சமும் கொண்ட அத் தகைசால் முதுபெரும்அறிஞர் திரு. வேங்கடராஜுலு ரெட்டி-யார் அவர்களை இழந்தது எங்கள் குடும்பத்துக்கே ஒரு பேரிழப்பாகும்.

[இராமநாதபுரம்—திருப்பத்தூர், தமிழாசிரியை திருவாட்டி ரா. லக்ஷ்மியம்மாள்]

இருபத்தைந்து ஆண்டுகளாக சென்னையில் இருந்துகொண்டு, எனது வாழ்விற்கு வழிகாட்டி-

யாக விளங்கிய ஓர் அறிவுச்சுடர்—பேரொளி மறைந்ததுகேட்டு, உள்ளம் இன்னலில் ஆழ்ந்து, இருள் சூழ்ந்து மயங்குகின்றது.

—

சில நினைவுகள்

[சேலம்-வேலூர், திருமதி R. விஜயகௌரி அம்மையார்]

முதன்முதலாக அன்புத்தந்தையார் திரு. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்களைத் திருப்பராய்த்துறையில் என் சிற்றப்பா திரு. T. C. ஜகந்நாத ரெட்டியாரவர்களின் இல்லத்தில் தரிசித்தேன். பின்னர், இங்கு (வேலூரில்) இச் சிறுகுடியில் அப் பெரியாரை உபசரிக்கும் பேறுபெற்றேன். அவர்கள் ஒருவாரம் தங்கி மறக்கமுடியாத நல்ல நினைவுகளை அளித்தார்கள். என் குழந்தை (பாபு) புருஷோத்தமனுக்கு அப்போது இரண்டு வயது. அவன் ரெட்டியாரவர்களிடம் மிக்க அன்போடு ஒட்டிப் பழகுவான்; அவரிடமே விளையாடுவான். தாத்தாவும் பேரனும் உட்கார்ந்துகொண்டே பந்து உருட்டி விளையாடுவார்கள். அவனுக்குத் தூக்கம் வரும்போது தாத்தாவையே தொட்டில் ஆட்டச் சொல்வான்; அவரைக் 'காந்தித் தாத்தா' என்று சொல்வான். அவரும் குழந்தையன்பில் கலந்து மகிழ்வார். குழந்தைபோன்ற களங்கமற்ற தூய அன்பு படைத்த உள்ளம்பெற்றவரிடம் ஒரு குழந்தைதானே உரிமையோடு பழக இயலும். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களால் 'மயிலைத் தொல்காப்பியர்' என்று புகழப்பெற்ற பெரியார் சின்னக் குழந்தையிடம் குழந்தையாகப் பழகினர். இதை நான் அடிக்கடி சொல்லிச் சொல்லி ஆச்சரியப்படு-

வதுடன், அவன் பெற்ற பேற்றை எண்ணி-யெண்ணி மகிழ்வேன்.

அவர் இங்குத் தங்கிய ஒரு வாரகாலமும் மிகப் புனித காலமாகும். அவர் இங்கு இருக்கும்போது, இங்கு உள்ள தமிழாசிரியர்பலரும் வருவார்கள். பல இலக்கியங்களையும் எடுத்துச் சொல்லி மகிழ்-ழூட்டுவார்கள். அவரது புலமையும், ஆய்வுத்திறனும் பெரிதும் பயன்பட இருந்தும், அவர் நம்மிடையே இருக்கும்போது அவற்றைப் பயன்படுத்திக்-கொள்ளத் தமிழ்நாடு தவறிவிட்டது. அவர் பன்-மொழிகளைக் கற்று அனைத்தும் அறிந்தும், ஏதும் அறியாதவரைப்போல், அளவுக்கு விஞ்சிய அடக்கத்துடன், தமக்கென வாழாப் பிறர்க்குரியளாராகவே, வாழ்ந்து மறைந்தார்.

என் கணவர் அவரிடம், "ஒரு முறை இங்கு வாருங்கள்" என்று அழைப்பார். அதற்கு அப் பெரியார், "ஒருமுறை தீர்ந்துவிடும். ஆகவே அந்த ஒருமுறை அப்படியே இருக்கட்டும்" என்று வேடிக்-கையாகச் சொல்லுவார். இவர் "இல்லை, இல்லை, பல-முறை வாருங்கள்" என்று மீண்டும் அழைப்பார். 'சரி, சௌகரியப்படும்போது வருகிறேன்' என்று புன்னகையுடன் அவர் புகல்வார்.

தம் மக்கள் தவறுசெய்யும்போது பெற்றோர் கோபிப்பது வழக்கமே. ஆனால் நம் தெய்வத்-தந்தையாரோ அப்படிச் செய்யார்; கோபிக்கவேண்-டிய சந்தர்ப்பங்களில் கூட அன்போடு, நாணமடை-யும்படி சொல்லித் திருத்துவார்.

இரண்டு ஆண்டுகளுக்குமுன் நாங்கள் வங்கத்திற்குச் செல்லும் முன்பும், வங்கத்தினின்று திரும்பி-வந்தபோதும், இறுதியாகப் அப் பெரியாரைச் சென்னையில் அவர் இல்லத்தில் தரிசித்தோம். அப்-

போதும், இங்கு முன்பு அவருடன் விளையாடிய பேரனைப்பற்றி மிக விசாரித்தார்; "அவர் கவனிக்காவிடினும், நீ சின்னச் சின்னக் கதைகளையும் பாடல்களையும் குழந்தைக்குச் சொல்லிக்கொடு. அப்போதுதான் கல்வியில் ஆர்வம் உண்டாகும்." என்று சொன்னார்.

அவர் இனி என்று வருவார்? அந்த ஒருமுறை இனி என்று வருமோ? அறியேன். கடைசியாக அவர்பாதங்களில் வணங்கி, அவரது நல்லாசியைப் பெற்றுவந்த காட்சிதான் என் நினைவில் இன்றும் பசுமையாய் இருக்கிறது. அவரது ஆத்மா இறைநிழலில் சாந்திபெற்றிருக்கும். அவர் விட்டுச்சென்ற அழியாத செல்வங்கள் ஓய்வில்லாத உழைப்பும், பண்பும், தன்னடக்கமுமே. அவர்கொள்கைகளைப் பின்பற்றி நாம் வாழ இறைவன் அருள்புரிய வேண்டுவோம்.

சால்பிற்குறைவிடம்

[ஆத்தூர், புலவர் அ. சாம்பசிவ ரெட்டியார் M.L.C]

பன்மொழிப்புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய சான்றாண்மைக்குரிய நற்பண்புகளனைத்திற்கும் உறைவிடமாய் வாழ்ந்த பெரியார்; தமிழிலும் பிற திராவிடமொழிகளிலும் ஆழ்ந்த புலமையும் ஆராய்ச்சித்திறனும் படைத்தவர்; அத்துடன், வடமொழி ஆங்கிலமாகிய மொழிகளிலும் பயிற்சியுடைய பன்மொழிப்புலவர்பெருமானவர். காலஞ்சென்ற கா. ரா. நமச்சிவாய முதலியாருக்குப் பின்னர், தமிழகப்புலவர்பலருக்கு ஊன்றுகோலாயிருந்து உதவிய பெரியாராவர்.

அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ஆராய்ச்சியாளராகப் பணியாற்றிய காலத்தில் ஆராய்ந்து வெளியிட்ட நூல்களே அவரது ஆழ்ந்த இலக்கிய-விலக்கணப்புலமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். இவ்வளவு ஆழமும் பரப்புமுடைய புலமை மிக்கிருந்தும், அவரது அடக்கமும் பணிவும் காலத்திற்கேலாத நிலையில் அவரை இலைமறைகா-யாக மறைத்துவிட்டன. ஆயினும், அவருடைய ஆராய்ச்சிநூல்கள் 'இதோ நாங்கள் அவரது பெருமையைக் காலமெல்லாம் காசினியெங்கும் பறை-சாற்றக் காத்திருக்கின்றோம்' என்கின்ற முறையில், தமிழகத்தில், தமிழ்வரலாற்றில், அவருக்கு ஒரு நிலையான இருப்பிடத்தைத் தேடித் தந்துள்ளன.

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர், 'பெரியோரை மதித்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினுமிலமே' என்ற சங்ககாலத்துச் சான்றோர்களின் இலக்கணத்துக்கு ஓர் இலக்கியமாய் வாழ்ந்து மறைந்த பெரியார் திரு. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்களின் ஆன்மா அரவணையில் துயிலும் அச்சுதனடிக்கீழ் நிச்சம் ஆனந்தமான நிலையில் அமைதி பெற்று இன்புற, இறைவன் திருவருளை ஏத்துகின்றேன்.

பல்கலைக்குருசில் பன்மொழிப் புலவரின்

நூல்கள்

1.	தமிழ்ச் சொல்லமைபு	ரூ. 1-25
2.	குற்றியலுகரம்	ரூ. 0-80
3.	தென்மொழிகள்	ரூ 3-00
4.	தென்மொழிக் கட்டுரை	ரூ. 2-00
5.	நுண்பொருள் விளக்கம்	ரூ. 1-80

★

கிடைக்குமிடம் :

1. பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை-1.

2. சைவ சித்தாந்தக் கழகப் பதிப்பகம்,
1/140, பிராட்வே, சென்னை-1.

Printed at Parker Press, 11, Bunder St., Madras 1.